www.padippakam.com

ஆகஸ்டு 2009
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## பட்ஜெட்

## விவசாயத்துக்குச் சலுகையா? சமாதியா?

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 10**

ஆகஸ்டு 2009

உள்நாடு
**தனிஇதழ்:** ரூ.7.00
**ஆண்டுசந்தா:** ரூ.90.00

*வெளிநாடுகள்*
(வான் அஞ்சலில்)
**ஆண்டு சந்தா:** US$ 20

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
*தொலைபேசி:* 94446 32561


### அணுசக்தி [123] ஒப்பந்தம்:

## பெயரளவிலான சுயசார்புக்கும் குழிபறித்தது அமெரிக்கா!

இத்தாலி நாட்டில் சமீபத்தில் நடந்த பெரும் எட்டு நாடுகள் (ஜி 8) மாநாட்டில், ''அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு அணு சக்தி மூலப்பொருளான யுரேனியத்தைச் செறிவூட்டுவதற்கும், மறுசுழற்சி செய்வதற்கும் தேவைப்படும் தொழில்நுட்பத்தையும், கருவிகளையும் வழங்கப் போவதில்லை'' என முடிவெடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவருகின்றன. ஜி 8 மாநாடு இந்த முடிவை எடுப்பதற்கு அமெரிக்காதான் காரணம் என்பதோடு, இம்முடிவு இந்தியாவைக் குறிவைத்துத்தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதும் இப்பொழுது அம்பலமாகி விட்டது.

இந்தியா அணுசக்தி ஒப்பந்தம் (123 ஒப்பந்தம்) தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபொழுது, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் யுரேனியத்தைச் செறிவூட்டவும், மறுசுழற்சி செய்யவும் தனக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்பதோடு, அதற்கான தொழில்நுட்பத்தையும், கருவிகளையும் வழங்க வேண்டும் என வாதாடியது. இதற்குச் சில நிபந்தனைகளோடு சம்மதித்த அமெரிக்கா, அணு மூலப்பொருட்கள் வழங்கும் நாடுகளின் குழுமத்தோடு (என்.எஸ்.ஜி.) இந்தியா பேச்சுவார்த்தைகள் நடத்தியபொழுது, செறிவூட்டும் - மறுசுழற்சி செய்யும் உரிமைகளை இந்தியாவிற்கு அக்குழுமம் வழங்கக் கூடாது என நிர்பந்தம் கொடுத்தது. எனினும், அக்குழுமத்தின் தற்போதைய விதிகளுக்கு மட்டுமின்றி, எதிர்காலத்தில் உருவாக்கப்படும் விதிகளுக்கும் இந்தியா கட்டுப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், செறிவூட்டும்-மறுசுழற்சி செய்யும் உரிமைகளை இந்தியாவிற்கு வழங்கியது, என்.எஸ்.ஜி. இந்த உரிமையினைப் பெற்றதைத் தனது ராஜதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றியாகப் பீற்றிக் கொண்டார், மன்மோகன் சிங். தற்பொழுது ஜி 8 நாடுகள் எடுத்துள்ள இம்முடிவு, இந்தியாவின் 'வெற்றிக்கு' முட்டுக் கட்டைப் போட்டுவிட்டது.

''ஜி 8 நாடுகளின் முடிவு இந்தியாவைக் குறித்து எடுக்கப்படவில்லை; வட கொரியா போன்ற ரவுடி நாடுகளைக் குறிவைத்துதான் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது; ஜி 8 நாடுகளின் முடிவு, அணு மூலப்பொருட்கள் வழங்கும் நாடுகளின் குழுமத்தைக் கட்டுப்படுத்தாது'' என்றுதான் மன்மோகன் சிங் அரசு விளக்கமளித்து வருகிறதேயொழிய, அமெரிக்காவின் இந்தக் கொல்லைப்புறத் தாக்குதலுக்கு எதிராகத் தனது சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை.

இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, இசுரேல் ஆகிய நான்கு நாடுகள்தான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இதுநாள் வரை கையெழுத்திடவில்லை. இவற்றுள், இந்தியா தவிர்த்த மற்ற மூன்று நாடுகள் அணுசக்தி குறித்து மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் போட்டுக் கொள்வதற்கு சர்வதேசரீதியில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு மட்டும்தான் அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் விலக்கு அளித்துள்ளன. எனவே, ஜி 8 நாடுகளின் முடிவு இந்தியாவைக் குறிவைத்துத்தான் எடுக்கப்பட்டுள்ளது என்பது சொல்லாமலேயே விளங்கும்.


அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு யுரேனியத்தைச் செறிவூட்டும் உரிமைகளை அளிப்பதைத் தடை செய்வது தொடர்பாக புதிய விதிகளை உருவாக்குவதற்காக, அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் குழுமம் கடந்த நவம்பர் 2008-இல் கூடிப் பேசியிருப்பதோடு, ஒரு நகலறிக்கையையும் தயாரித்துள்ளன. இந்த அறிக்கையின் அடிப்படையில்தான் ஜி 8 நாடுகளின் மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது. எனவே, ஜி 8 முடிவிற்கும், அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகளின் குழுமத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று இந்தியா கூறிவருவது, மழுப்பலான வாதம்தான்.

பொக்ரானில் இரண்டாம் முறையாக அணுகுண்டு சோதனைகள் நடத்தப்பட்டவுடனேயே, இந்தியா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்தது. அப்பொழுது பிரதமராக இருந்த வாஜ்பாயி அமெரிக்காவைச் சமாதானப் படுத்துவதற்காக, இந்தியா இனி அணுகுண்டு சோதனைகளை நடத்தாது எனத் தன்னிச்சையாக ஐ.நா. மன்றத்திலேயே அறிவித்தார். அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தங்களையும், அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தையும் போட்டுக் கொள்வதற்காக, இந்தியாவின் சிவில் அணு உலைகளை சர்வதேச அணுசக்தி கமிசனின் கண்காணிப்

www.padippakam.com

புக்குத் திறந்துவிட ஒப்புக் கொண்டார், மன்மோகன் சிங். மேலும்,அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் இந்தியா மீது விதித்திருந்த தடைகளை நீக்குவதற்காக, அக்குழுமத்தின் தற்போதைய விதிகளுக்கும், எதிர்கால விதிகளுக்கும் இந்தியா கட்டுப்படும் என எழுதியும் கொடுத்திருக்கிறார், மன்மோகன் சிங். இப்பொழுது, ஜி 8-இல் இந்தியாவைக் குறிவைத்துப் புதிய விதி உருவாக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், சதுரங்க ஆட்டத்தில் ராஜா எந்தத் திசையிலும் நகர முடியாதபடி ''செக்'' வைக்கப்பட்டு முடக்கப்படுவது போல, இந்தியா சுயசார்பான அணுசக்தி கொள்கையைத் தொடர முடியாதபடி, பொறியொன்றில் சிக்க வைக்கப்பட்டுள்ளது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம், அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் ஆகிய ஏகாதிபத்திய சார்பான சர்வதேச ஒப்பந்தங்களில் இந்தியா வெளிப்படையாகக் கையெழுத்துப் போடுகிறதோ இல்லையோ, அந்த ஒப்பந்தங்களின் விதிகளை மீறி இனி இந்தியா நடந்து கொள்ள முடியாது என்ற இக்கட்டில் இந்தியாவை மாட்டி வைத்துவிட்டார், மன்மோகன் சிங். இது அபாண்டமான குற்றச்சாட்டு என மன்மோகன் சிங்கின் ரசிகர்கள் நம் மீது பாயலாம். ஆனால், ஜி 8-இன் புதிய முடிவுக்குப் பிறகும், அமெரிக்காவோடு எந்த விதத்திலும் முரண்பட்டுக் கொள்ளாமல், மன்மோகன் சிங் அமெரிக்க அரசோடு கூடிக்குலாவி வருவது, இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதாகதான் அமைகிறது.




அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணமாக வந்திருந்தபொழுது, இந்திய அரசு அவரிடம் ஜி 8 முடிவு குறித்து எந்தவிதமான அதிருப்தியையும் தெரிவிக்கவில்லை. மாறாக, அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்தியா அமெரிக்காவிடமிருந்து வாங்கவுள்ள இரண்டு அணு உலைகளை எந்தெந்த இடங்களில் நிர்மாணிக்கப் போகிறது என்பதை கிளிண்டனைக் கூட்டிப் போய்க் காட்டியது.

அமெரிக்கா கேட்டுக்கொண்டபடி, அணு உலைகளில் விபத்து ஏற்பட்டால், அவ்வுலைகளில் முதலீடு செய்துள்ள தனியார் முதலாளிகளுக்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டுவிடாதபடி, அவர்களைக் காக்கும் முகமாக சட்டமொன்றை இயற்றி, கிளிண்டனின் மனதைக் குளிர வைத்தது, இந்திய அரசு. இச்சட்டம், இந்திய அணுசக்தித் துறையில் முதலீடு செய்யவுள்ள அமெரிக்க நிறுவனங்களின் இலாபத்தைக் காக்கும் நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தியா அமெரிக்காவிடமிருந்து வாங்கும் இராணுவத் தளவாடங்களை அமெரிக்க அரசு எந்த நேரத்திலும் இந்தியாவிற்கு வந்து ஆய்வு செய்ய உரிமைகள் அளிக்கும் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட இந்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது.

இறுதிக்கட்ட பயன்பட்டாளர் கண்காணிப்பு ஒப்பந்தம் என்ற இந்த ஒப்பந்தம், மற்ற ஒப்பந்தங்களைப் போல இரு நாட்டு அரசு அதிகாரிகளும் கூடிப் பேசி உருவாக்கப்பட்டதல்ல. இது ஒருவகையான அமெரிக்க நாட்டுச் சட்டம். இதை ஏற்றுக் கொண்டு நடப்பதாக மன்மோகன் சிங் தலையாட்டியிருக்கிறார். எதிர்காலத்தில் இந்தியா அமெரிக்காவிடமிருந்து எந்த இராணுவத் தளவாடங்களை வாங்கினாலும், அவற்றை இந்த ஒப்பந்தத்தின் கீழ்தான் வாங்க வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியா எந்த நோக்கத்தைக் கூறி அமெரிக்காவிடமிருந்து ஒரு இராணுவத் தளவாடத்தை வாங்குகிறதோ, அதைத் தவிர்த்து பிற நோக்கங்களுக்கு இந்தியா அந்த இராணுவத் தளவாடத்தைப் பயன்படுத்த முடியாது. இந்தியா இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவிப்பதற்கு முன்பாக, அமெரிக்காவிடமிருந்து ஓட்டைப் போர்க் கப்பலொன்றை வாங்கியது. இந்தக் கப்பலைச் சமாதான நோக்கங்களுக்கு மட்டும்தான், அதுவும் குறிப்பாக அமெரிக்க இராணுவத்தால் தலையிட முடியாத சமயங்களில் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஓட்டைக் கப்பலுக்கே இந்த நிபந்தனை என்றால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் வாங்கப்படும் இராணுவத் தளவாடங்களுக்கு எப்படிப்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்படும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

காட் ஒப்பந்தம் போல, 123 ஒப்பந்தம் போல, இந்திய நாடாளுமன்றத்திற்கு தெரிவிக்காமலேயே, இந்திய நாடாளுமன்றத்தில் ஒப்பதல் இல்லாமலேயே இந்தக் கண்காணிப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்துப் போட மன்மோகன் சிங் கும்பல் முயன்று வருகிறது. மேலும், இராணுவத் தகவல்களை அமெரிக்காவிடம் பரிமாறிக் கொள்ளவும், இந்தியாவில் அமெரிக்க இராணுவத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளதோடு, அதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடவும் இந்திய அரசு தயாராகி வருகிறது. அமெரிக்காவின் உலகளாவிய இராணுவ மேலாதிக்க நோக்கங்களுக்கு உதவும் வகையில், இந்தியா அமெரிக்காவின் அடியாளாக மாற்றப்பட்டு வருவதைத்தான் இந்த ஒப்பந்தங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த அடிமைத்தனத்தை, அடியாள்தனத்தை, ''இந்தியா வல்லரசாக அமெரிக்கா உதவுகிறது'' எனக் கூறி மூடி மறைக்க முயலுகிறது, மன்மோகன் சிங் கும்பல். அமெரிக்க மூலதனம், தொழில்நுட்பம், மேற்குலக சந்தை ஆகியவற்றுக்காக, இந்திய நாட்டின் அரைகுறை இறையாண்மையையும் அமெரிக்காவின் காலடியில் அடகு வைத்து வருகிறார், மன்மோகன் சிங். அவரின் இந்த எட்டப்பன் வேலையை இந்தியத் தரகு முதலாளிகளும் மேல்தட்டு வர்க்கமும் கைதட்டி வரவேற்கின்றன.

மீண்டுமொரு சுதந்திரப் போராட்டத்தை நடத்தாமல், இந்த அமெரிக்க அடிமைத்தனத்தை ஒழித்துவிட முடியாது. ஆனால், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளோ, இந்த ஒப்பந்தங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கூச்சல் போடுவதோடு முடங்கிப் போய் விடுகின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com

# "ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தி தண்டனை கொடு! ஈழத் தமிழ் மக்களை மீளக் குடியமர்த்தி, மறுவாழ்வு கொடு!!"

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்–ஆர்ப்பாட்டம்

சிங்கள இனவெறி பாசிச ராஜபக்சே கும்பலை போர்க் கிரிமினலாக அறிவித்து தண்டனை வழங்கக்கோரியும்; சிங்கள இராணுவத்தின் வதை முகாம்களிலிருந்து ஈழத் தமிழர்களை மீட்டு மீள்குடியமர்த்தவும், உடனடியாக நிவாரண-மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்யக் கோரியும்; ஈழப் பகுதியில் சிங்கள குடியேற்றத்தைத் தடுக்கக் கோரியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.,பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கடந்த இருமாதங்களாகத் தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன.

சேலத்தில், பு.ஜ.தொ.மு. சார்பில் கடந்த 22.05.09 அன்று போஸ் மைதானம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் பழனிச்சாமி, பு.ஜ.தொ.மு., தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.உ.பா.மையத்தை சேர்ந்த தோழர் மாயன் கண்டன உரையாற்றினார். விண்ணதிர எழுப்பபட்ட முழக்கங்களும், இடையிடையே பாடப்பட்ட புரட்சிகர பாடல்களும் பார்வையாளர்களிடத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தின.

ஓசூரில் அசோக் லேலண்டு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தொழிலாளர்களிடத்தில் வாயிற்கூட்டங்கள் நடத்தியும்; வெளியீடுகள்,துண்டு பிரசுரங்கள் விநியோகித்தும் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வரும் பு.ஜ.தொ.மு.;பாகலூரில் கடந்த 15.06.09 அன்று வி.வி.மு. வுடன் இணைந்து கண்டனப் பொதுக்கூட்டத்தை நடத்தியது.

தோழர் இரவிச்சந்திரன் (பு.ஜ.தொ.மு) தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன் எழுச்சிமிகு உரையாற்றினார். திரளான மக்கள் பங்கேற்புடன் நடந்த இப் பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சி, பாசிச ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்களையும் இந்திய மேலாதிக்க சதிகளையும் கண்முன்னே நிறுத்தி, போராட்ட உணர்வூட்டியது.

உத்தமபாளையத்தில் இயங்கிவரும் வி.வி.மு.வினர், மக்கள் கூடுமிடங்களில் நின்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது, அவர்களிடையே உரையாற்றுவது என தமது பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இதனை கண்டு ஆத்திரமடைந்த உத்தமபாளைய போலீசு துணை ஆய்வாளர் ஜான் பெஞ்சமின், பிரசுரம் விநியோகித்தத் தோழர்களை போலீசு நிலையம் அழைத்து சென்று, சட்ட விரோதமாக வி.வி.மு. வட்ட செயலர் மோகன் உள்ளிட்ட ஐந்து தோழர்களைச் சிறையிலடைத்தார்.

கைது செய்யப்பட்ட தோழர்கள், போலீசின் கருத்துரிமை பறிப்புக்கெதிராக தமது கண்டனத்தை நீதிமன்றம் அதிர முழக்கமிட்டு வெளிப்படுத்தினர். இதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்திற்கு மட்டுமல்ல; சுவரொட்டி ஒட்டுவதற்குக் கூட அனுமதி இல்லை என எச்சரித்தது போலீசு.

பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு, போலீசின் அடாவடித்தனத்தை கண்டித்து கடந்த ஜூன் 25-ஆம் தேதி உத்தமபாளையம் கிராமசாவடிக்கருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தை வி.வி.மு. நடத்தியது. ம.உ.பா.மையத்தை சார்ந்த லயனல் அந்தோனிராஜ், வழக்குரைஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்து கொண்டு இந்திய மேலாதிக்கவாதிகள் மற்றும் ராஜபக்சே கும்பலின் அடியாளாகச் செயல்படும் தமிழகப் போலீசின் முகத்திரையைக் கிழித்து உரையாற்றினர்.

சிவகங்கையில் சிங்கள இனவெறியன் ராஜபக்சேவை சர்வதேசப் போர்க்கிரிமினல் குற்றவாளியாக அறிவித்து தண்டனை வழங்கக் கோரியும்; ராகுல் காந்திக்குக் கருப்புக் கொடி காட்டிய தோழர்கள் மீது காங்கிரசு குண்டர்கள் மற்றும் போலீசு நடத்திய கொடூரத் தாக்குதலைக் கண்டித்தும் ம.க.இ.க. மற்றும் பு.ஜ.தொ.மு.வின் சார்பில் அரண்மனை வாசல் அருகே ஜூன் 13 அன்று பொதுக்கூட்டம் நடத்த, ஏற்பாடு செய்து, பகுதி மக்களிடையே பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வந்தனர். ஆனால், சிவகங்கை போலீசோ, 'சட்டம் ஒழுங்கை' காரணம் காட்டி, இப்பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதி தர மறுத்து விட்டது.




இந்நிலையில், பேச்சுரிமை, பிரச்சார உரிமையை மறுக்கும் சிவகங்கை போலீசின் இந்த அதிகார அடாவடித்தனத்தை எதிர்த்து உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தோழர்கள் வழக்குத் தொடுத்து, அதில் வெற்றியும் அடைந்துள்ளனர். எதிர்வரும் மாதத்தில் இப்பொதுக்கூட்டத்தை அதே இடத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை இவ்வமைப்பினர் செய்து வருகின்றனர்.

பாசிச ராஜபக்சே கும்பலைப் போர்க்குற்றவாளியாக அறிவித்துத் தண்டிக்க கோரியும், அகதி முகாம்களில் வதைபடும் ஈழத்தமிழர்களை மீட்டு மீள்குடியமர்த்தி நிவாரண - மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளை செய்யக் கோரியும்; இந்திய மேலாதிக்கத்துக்கு எதிராகப் போராட அணிதிரளுமாறும் தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

— பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# பட்ஜெட்: விவசாயிகளுக்குச் சலுகையா? சமாதியா?

**பெரும் முதலாளித்துவப் பண்ணை முறையில் விவசாயத்தை மாற்றியமைப்பதுதான் பட்ஜெட்டின் நோக்கம்.**

இந்த நிதியாண்டுக்கான வரவு - செலவு அறிக்கை உழவர்கள் மற்றும் கிராமப்புற ஏழை-எளிய மக்களுக்கு மரியாதை செய்திருப்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் தொடங்கி முதலாளித்துவ அறிஞர்கள் வரை அனைவரும் ஒரே குரலில் சுட்டிக் காட்டி வருகின்றனர். முதலாளிகளுக்குச் சலுகைகள் அளித்து, அவர்கள் மூலம் அச்சலுகைகளில் சிறு பங்கு தொழிலாளர்களைச் சென்றடையச் செய்யும் உத்திக்குப் பதிலாக, இந்த பட்ஜெட் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்திப் போடப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இப்படிச் சுற்றி வளைத்துப் பேசாமல், தனியார் முதலாளிகளின் ஊதுகுழலான இந்தியா டுடே ஏடு, இந்த பட்ஜெட்டை ''சோசலிச பட்ஜெட்'' என வஞ்சகமாகப் புகழ்ந்து தள்ளியிருக்கிறது.

முதலாளித்துவப் பத்திரிகைகளின் புகழாரங்களைக் கேட்கும்பொழுது ''மன்மோகன் சிங், மாண்டேக் சிங் அலுவாலியா மூக்கின் கீழ் இப்படியொரு பட்ஜெட்டா? உலக முதலாளித்துவ நெருக்கடி இவர்களுக்கெல்லாம் நல்ல புத்தியைக் கொடுத்துவிட்டதா?'' என்ற கேள்விகள் நமக்குள் எழலாம். புலி ஏன் திடீரெனப் புல்லைத் தேடி ஓடுகிறது என்ற கேள்வியை மனதில் வைத்துக் கொண்டு இந்த பட்ஜெட்டைக் கூறு போட்டுப் பார்த்தால், மன்மோகன் சிங் கும்பலின் திடீர் கரிசனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

### புள்ளிவிவர சித்து விளையாட்டுக்கள்

''தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு 144 சதவீதம் அதிகரிப்பு; விவசாயக் கடன் 3,25,000 கோடி ரூபாயாக அதிகரிப்பு; வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கிலோ மூன்று ரூபாயில் 25 கிலோ கோதுமை அல்லது அரிசி மாதந்தோறும் வழங்கும் திட்டம்; தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1,730 கோடி ரூபாயாக அதிகரிப்பு'' எனச் சில சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டிதான், இந்த பட்ஜெட்டை சோசலிச பட்ஜெட் என முதலாளித்துவக் கும்பல் தூக்கி நிறுத்துகிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 144 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தனது பட்ஜெட் உரையில் கூறியிருப்பது வடிகட்டிய பொய். ப.சிதம்பரம் கடந்த ஆண்டு பட்ஜெட்டைத் தயாரித்து அளித்தபொழுது மிகக் குறைவான தொகையைத்தான் இத்திட்டத்திற்கு ஒதுக்கியிருந்தார். பிறகு, நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து, இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டில் 36,750 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையோ 39,100 கோடி ரூபாய்தான். சதவீதக் கணக்கில் பார்த்தால், வெறும் 6.4% தான் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரணாப் முகர்ஜியோ கடந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டு, 144 சதவீதம் அதிகரிப்பு எனத் தம்பட்டம் அடித்து வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ், இனி கிராமப்புற மக்களுக்கு வருடத்தில் 100 நாட்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்றும் கூலியும் நூறு ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்றும் இந்த பட்ஜெட்டில் டாம்பீகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால், இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 125 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். மைய அரசு மீதித் தொகையை ஒதுக்குமா, இல்லை திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டதாக காகிதக் கணக்குக் காட்டுமா என்பது போகப் போகத் தெரிந்துவிடும்.

**மகாராஷ்டிர மாநிலம், விதர்பா பகுதியில் வாழும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நந்தா பண்டாரே (வலது ஓரமாக உச்சியில்), தனது கணவர் தற்கொலை செய்து கொண்டதையடுத்து, தனது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்குக்கூட அனுப்ப முடியாத அளவிற்கு வறுமையில் உழன்று வருகிறார்.** (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com

ஏதோ இந்த பட்ஜெட்டில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காகவே 3,25,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது போல ஒரு செப்படி வித்தையை உருவாக்கியிருக்கிறார், பிரணாப் முகர்ஜி. உண்மையில் இந்தக் கடனைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் என்றுதான் பட்ஜெட்டில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பட்ஜெட்டில் சிறு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் தள்ளுபடியையே தர மறுத்து, அப்பாவி விவசாயிகளை அலையவிட்டு வரும் இவ்வங்கிகள், கடனைக் கேட்டவுடன் கொடுத்து விடுமா?



இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முன்னோடியான மாநிலமாகக் கூறப்படும் மகாராஷ்டிராவின் மேல்காட் பகுதியில் சத்துணவின்றிச் சூம்பிக் கிடக்கும் குழந்தை: தனியார்மயத்தின் கோர விளைவு!

விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுப்பதையே கமுக்கமாக நிறுத்தி விட்டதாகப் புலம்புகிறார்கள் தமிழக விவசாயிகள். இந்த நிலையில், பெரும்பாலான சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளைப் பொருத்தவரை இந்தக் கடன் அறிவிப்பு இன்னொரு காகிதத் திட்டம்தான்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு ஏற்கெனவே 35 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. விலையைக் குறைத்த பிரணாப் முகர்ஜி வழங்கப்படும் அளவையும் 25 கிலோவாகக் குறைத்துக் கணக்கை நேர் செய்து விட்டார்.

தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 1,730 கோடி ரூபாயில் எத்தனை ஏழைகள் பலனடைவார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது; எனினும், இத்திட்டத்தால், சிப்லா, காடிலோ ஹெல்த்கேர், எல்டர் பார்மா, கிளாக்ஸோ ஸ்மித்க்ளைன் பார்மா உள்ளிட்ட சில பெரிய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்குப் பலனிருக்கிறது என ''நாணயம் விகடன்'' இதழே உண்மையைப் புட்டு வைத்துள்ளது. கிராமப்புறங்களில் அடிக்கட்டுமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள பாரத் நிர்மாண் திட்டத்தைப் பொருத்தவரையிலும் இதுதான் உண்மை.

இந்தியாவெங்கும் சுமார் 44,000 கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இந்த 44,000 கிராமங்களில் வெறும் 1,000 கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு அங்கு வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு உள்ளிட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 100 கோடி ரூபாயை (!) ஒதுக்கிவிட்டு, தலித் மேம்பாடு என பீற்றிக் கொண்டு திரிகிறார், பிரணாப் முகர்ஜி. இப்படி பல்வேறு சமூக நலத் திட்டங்களுக்கு அற்பத்தனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை ஊதிப் பெருக்கி, சோசலிச பட்ஜெட் எனப் பொது மக்கள் காதில் பூச்சுற்றி வருகின்றன, முதலாளித்துவப் பத்திரிகைகள்.

**பாவம் ஓரிடம், பழி ஓரிடம்!**

இந்த ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையில் 4,00,996 கோடி ரூபாய் பற்றாக்குறையாகக் காட்டப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களுக்கு அதிக அளவில் வாரி வழங்கியதாலும் உரம், உணவு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளுக்கு மானியங்களைக் கொட்டிக் கொடுப்பதாலும்தான், இந்தளவிற்குத் துண்டு விழுந்திருப்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் புலம்புகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இப்படி துண்டு விழுவது பெருத்துக் கொண்டே போனால், தேசத்தின் எதிர்காலம் என்னாவது என இவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

இக்குற்றச்சாட்டு மோசடித்தனமானது. மைய அரசு கடந்த ஆண்டு அதிகக் கடன் வாங்கியதால் ஏற்பட்டிருக்கும் அதிகப்படியான வட்டித் தொகை செலவு 33,000 கோடி ரூபாய். மைய அரசு ஊழியர்களுக்கு ஆறாவது ஊதிய கமிசன் பரிந்துரையின்படி சம்பளம் (44,000 கோடி ரூபாய்) வழங்க வேண்டிய சுமையும் மைய அரசின் மீது விழுந்திருக்கிறது. உலக முதலாளித்துவ நெருக்கடியைக் காட்டித் தரகு பெரு முதலாளிகளுக்குக் கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட பல்வேறு விதமான வரிச் சலுகைகளையும் நீக்க பிரணாப் முகர்ஜி மறுத்து விட்டதால், அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு 68,000 கோடி ரூபாய். இதுவும் போதாதென்று, இந்த பட்ஜெட்டிலும் தரகு முதலாளிகளுக்கும் மேட்டுக்குடி கும்பலுக்கும் பங்குச் சந்தை சூதாடிகளுக்கும் பல்வேறு விதமான வரிச் சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. மைய அரசின் பற்றாக்குறை ஊதிப் போனதற்கு இப்படிப்பட்ட ஊதாரித்தனமான செலவுகளும் வரிச் சலுகைகளும்தான் காரணம்.

வரிச் சலுகைகளை மட்டுமல்ல; மக்களின் பெயரால் வழங்கப்படும் மானியங்களைத் தின்று தீர்ப்பதும் இந்தக் கும்பல்தான். விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர மானியத்தை உரக் கம்பெனி மானியம் என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் உர மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 31,000 கோடி ரூபாய்தான். ஆனால், இந்த மானியம் 2008-09 ஆம் ஆண்டின் இறுதியில் 1,14,000 கோடி ரூபாயாக அதிகரித்தது. இந்த உயர்வைக் கண்டு அதிசயித்துப் போன அப்போதைய நிதியமைச்சரான ப.சிதம்பரம், ''இவ்வளவு உரம் பயன்படுத்தியும் விளைச்சல் ஏன் அதிகரிக்கவில்லை? இந்த உரம் விவசாயிகளின் கைக்கும் போகவில்லை. அதனால் உரத்துக்கான மானியமும் அவர்களுக்குப் போகவில்லை. இடையிலே யாரோ அனுபவிக்கிறார்கள்'' என்று உண்மையைப் போட்டு உடைத்தார். ஆனால், இந்த ''யாரோ''வைக் கண்டுபிடிக்க மைய அரசு எந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை.


விவசாயத்திற்குத் தேவைப்படும் இடுபொருட்களின் விலையைக் குறைத்தாலே உணவு மானியம் கணிசமாகக் குறைந்து விடும். இடுபொருட்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தால், உர நிறுவனங்கள், பன்னாட்டு விதைக் கழகங்கள் ஆகியவற்றின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்பதாலேயே மைய அரசு இந்தப் பிரச்சினையில் செவிடனைப் போல நடந்து வருகிறது. ரேசன் கடையில் இருந்து உணவுப் பொருட்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கடத்தும் கும்பல் மட்டுமல்ல, உணவுப் பொருட்களைச் சட்டபூர்வமாக ஏற்றுமதி செய்யும் வர்த்தக நிறுவனங்களும் தான் உணவு மானியத்தை அனுபவிக்கின்றன.




இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும் இலவச மருத்துவ வசதி செய்து தர வேண்டும் என்றால், ஒவ்வொரு ஆண்டும் 1.5 இலட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். ஆனால், மைய அரசோ ஒவ்வொரு பட்ஜெட்டிலும் 30,000 கோடி ரூபாய்க்குக் கீழ்தான் நிதி ஒதுக்கீடு செய்கிறது. அதேசமயம், தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கும், பன்னாட்டு தொழில் கழகங்களுக்கும், பங்குச் சந்தை சூதாடிகளுக்கும், மேட்டுக்குடி கும்பலுக்கும் ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் 4,00,000 கோடி ரூபாய்க்கு மேல் வரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

தாராளமயத்தின் பின், இந்திய மக்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தருவதற்குப் பதிலாக, அமெரிக்கா போல மருத்துவக் காப்பீடு எடுத்துக் கொள்ளுமாறு மக்களை நிர்பந்திக்கும் திட்டங்கள்தான் அறிவிக்கப்படுகின்றன. எனவே, தற்பொழுது மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் கணிசமான பங்கு தனியார் மருத்துவக் காப்பீடு நிறுவனங்களுக்கும், தனியார் மருத்துவமனை முதலாளிகளுக்கும் போய்ச் சேர்ந்து விடுகிறது. தமிழக அரசு தற்பொழுது அறிவித்துள்ள உயிர் காக்கும் மருத்துவத் திட்டம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

வரிச் சலுகைகள் மற்றும் மானியங்கள் மூலம் தாம் அனுபவிக்கும் சொகுசு வாழ்க்கையைக் கொஞ்சம்கூடக் குறைத்துக் கொள்ள மறுக்கும் இக்கும்பல், அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் இந்த அளவிற்கு பற்றாக்குறையைக் காட்டக்கூடாது என மைய அரசை எச்சரிக்கிறது. இதன் பொருள், சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் அற்பமான தொகையையும் வெட்ட வேண்டும் என்பதுதான்.

**தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்: வரமா, சாபக்கேடா?**

இந்த ஆண்டு பட்ஜெட்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கழித்துவிட்டுப் பார்த்தால், இந்தப் பட்ஜெட்டிற்கும், ப.சிதம்பரம் தயாரிப்பில் உருவான முந்தைய பட்ஜெட்டுகளுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது என 'உண்மை'யைப் போட்டு உடைத்திருக்கிறார், ஒரு பொருளாதார நிபுணர். ஆனால், அவர் சொன்னதில் ஒரு திருத்தம் செய்ய வேண்டும். இந்த நிதியைக் கழிக்காமல் பார்த்தால்கூட, இந்த பட்ஜெட்டை ஏழை எளிய மக்களுக்கான பட்ஜெட் என்று சொல்ல முடியாது.

விவசாயம் நசிவடைந்து கொண்டே போய்க் கொண்டிருப்பதைத் தடுக்கவும், விவசாயத்தை ஓரளவிற்கு இலாபம் ஈட்டித் தரும் தொழிலாக மாற்றியமைக்கவும், ''அரசு வங்கிகள் விவசாயிகளுக்குத் தரும் கடனுக்கான வட்டியை 7 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும்; விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயிக்க வேண்டும்; விவசாயத்திற்கு 16 மணி நேரம் மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்; மின்சாரப் பற்றாக்குறை நிலவும் காலங்களில் விவசாயிகளுக்கு டீசல் மானியம் வழங்க வேண்டும்; விவசாய இடுபொருட்களின் விலையைக் குறைப்பதோடு, உர மானியம் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உத்தரவாதப் படுத்த வேண்டும்; சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு அரசு துணை போகக் கூடாது; வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வேளாண் விளைபொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டும்; அவற்றிற்கு 60 சதவீதத்திற்கு மேல் வரி விதிக்க வேண்டும்'' என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

கிராமப்புறத்தில் நிலவும் வறுமையையும், வேலைவாய்ப்பின்மையையும் ஒழிக்க வேண்டும் என்றால், விவசாயிகளின் கோரிக்கைகள் உள்ளிட்டுப் பல்வேறு சீர்திருத்தங்களை விவசாயத்தில் புகுத்த வேண்டும். ஆனால், இந்த பட்ஜெட்டும் சரி, இதற்கு முந்தைய பட்ஜெட்டுகளும் கூட இந்தக் கோரிக்கைகளைக் காதில் போட்டுக் கொண்டதேயில்லை. மன்மோகன் சிங் கும்பல் விவசாயத்தில் புகுத்தும் சீர்திருத்தங்கள் அனைத்தும் - ஏற்றுமதி பயிர் விவசாயம், குத்தகை விவசாயம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்றவை - பாரம்பரிய இந்திய விவசாயத்தை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்கள் கிராமப்புறங்களில் வறுமையையும் வேலைவாய்ப்பின்மையையும் மேலும் தீவிரப்படுத்துவதைக் கண்டு அஞ்சி, அதைத் தணிப்பது என்ற பெயரில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை அமல்படுத்திவருகிறது, ஆளும் கும்பல்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏகப்பட்ட ஊழல்கள், மோசடிகள் நடைபெறுவது ஒருபுறமிருக்க, இந்தத் திட்டம் விவசாயத்தின் மீது இன்னொரு சுமையாக மாறிவிட்டது என்பதுதான் உண்மை. இத்திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, விவசாய வேலைகளுக்கு கூலியாட்கள் கிடைப்பதில் பெரும் சிக்கல்களை உருவாக்கிவிட்டதாகப் புலம்புகிறார்கள், சிறு விவசாயிகள். இத்திட்டம் சிறு விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் இடையே செயற்கையான முரண்பாட்டை உருவாக்கித் திணித்து வருகிறது. இந்த எல்லாப் பிரச்சினைகளும் சேர்ந்து பணக்கார விவசாயிகள் மட்டும்தான் விவசாயம் செய்ய முடியும்; சிறு-நடுத்தர விவசாயிகள் நிலத்தைத் தரிசாகப் போட வேண்டும் என்ற நிர்பந்தத்தைத் தீவிரமாக உருவாக்கி வருவதாக சிறு விவசாயிகள் கூறுகிறார்கள்.

சிறு விவசாயிகள் நிலத்தைத் தரிசாகப் போட்டுவிட்டு கூலியாட்களாக மாற வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம்.



படிப்பகம்

www.padippakam.com

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க, கார்ப்பரேட் நிறுவனங்கள் குத்தகை விவசாயத்தில் இறங்க, இப்படி தரிசாகப் போடப்படும் நிலங்களை எவ்வித எதிர்ப்புமின்றி எளிதாகக் கைப்பற்றிக் கொண்டுவிட முடியும் அல்லவா? போலீசை ஏவிக் குண்டாந்தடியைக் கொண்டு செய்து வந்த வேலையை, இப்பொழுது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்ற தேன் தடவிய நச்சுத் திட்டம் மூலம் செய்து வருகிறார்கள்.

**சமூக நலத் திட்டங்களும் முதலாளிகளின் கல்லாப்பெட்டியும்**

இந்த பட்ஜெட்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. உலக முதலாளித்துவ நெருக்கடியின் விளைவாக இந்தியாவைச் சேர்ந்த ஜவுளி மற்றும் நுகர் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் அனைத்தும் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. மேலும், நகர்ப்புறச் சந்தை தேக்கத்தை அடைந்துவிட்டதால், இந்நிறுவனங்கள் கிராமப்புற சந்தையைக் கைப்பற்றுவதில் மும்மரமாக இறங்கியுள்ளன. எனவே, இந்நிறுவனங்களுக்கு உள்நாட்டில், குறிப்பாக கிராமப்புறங்களில் கிராக்கியை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடுதான் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், கிராமப்புற அடிக்கட்டுமான வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பாரத் நிர்மாண் போன்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் கூலியும் வேலை நாட்களும் அதிகரிக்கப்பட்டிருப்பதன் பின்னே, ஜவுளி மற்றும் நுகர்பொருட்களைத் தயாரிக்கும் முதலாளிகளின் நலன்தான் மறைந்துள்ளது.

கிராமப்புறங்களில் அடிக்கட்டுமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள பாரத் நிர்மாண் திட்டத்திற்கு கடந்த ஆண்டை விட 45 சதவீதம் அதிக நிதியும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்துக்காக 2,000 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள செயில், ஏ.சி.சி., அல்ட்ரா டெக், மெட்ராஸ் சிமெண்ட் போன்ற நிறுவனங்கள்தான் பலனடையப் போகின்றன.

அரசின் இந்த ஏஜெண்ட் வேலை வெளியே தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், முதலாளிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, ''இது கிராமப்புற மக்களின் நலன் சார்ந்த பட்ஜெட்'' என ஒப்பாரி வைக்கிறார்கள். இந்த ஒப்பாரியின் பின்னே, தரகு முதலாளிகளுக்கும், பங்குச் சந்தை சூதாடிகளுக்கும், மேட்டுக்குடி கும்பலுக்கும் வழங்கப்பட்ட ஊதாரித்தனமான சலுகைகள் அனைத்தும் மூடி மறைக்கப்படுகின்றன.


முதலாளித்துவ நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு வழங்கி வந்த பயணப்படி போன்ற சலுகைகள் மீது விதிக்கப்பட்டு வந்த வரி இந்த பட்ஜெட்டில் நீக்கப்பட்டுவிட்டதால், அவர்களுக்கு இந்த ஆண்டு முதல் 6,553 கோடி ரூபாய் கூடுதல் இலாபமாகக் கிடைக்கும். இந்துஸ்தான் லீவர், ஐ.டி.சி., நெஸ்லே, இமாமி போன்ற நுகர்பொருள் தயாரிக்கும் நிறுவனங்களின் நலனை முன்னிட்டுத்தான் இந்த வரி நீக்கப்பட்டுள்ளது.

தனிநபர் வருமான வரி மீது விதிக்கப்பட்டு வந்த கூடுதல் வரி நீக்கப்பட்டுள்ளதால், அரசுக்கு ஏற்படும் வரி இழப்பு மட்டும் 10,000 கோடி ரூபாய். இந்த 10,000 கோடி ரூபாய், ஆண்டிற்கு 10 இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் மேட்டுக்குடி கனவான்களின் பாக்கெட்டுக்குப் போகும்.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல்வேறு விதமான சலுகைகள் நீக்கப்படாமல், 2010-ஆம் ஆண்டு வரை தொடரும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதால், அந்நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் இலாபம் மட்டும் 20,366 கோடி ரூபாய்.

கே.ஜி.-டி 6 எனப் பெயரிடப்பட்டுள்ள எண்ணெய் வயலில் இயற்கை எரிவாயுவை எடுக்க உரிமம் பெற்றுள்ள தனியார் முதலாளிக்கு (ரிலையன்ஸ்?) அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைகளால், அந்நிறுவனத்திற்கு அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் 40,000 முதல் 50,000 கோடி ரூபாய் வரை கூடுதல் இலாபம் கிடைக்கும்.

நாடெங்கும் அடிக்கட்டுமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தனியார் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கடன் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பினை இந்திய அடிக்கட்டுமான நிதிக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த அரசுத் துறை நிறுவனமும், அரசு வங்கிகளும் இணைந்து 1 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக உள்ளன. உமி கொண்டு வந்தவன் அவல் தின்ற கதைக்கு ஒப்பானது, இச்சலுகை.



**விவசாயத் துறை அமைச்சர் சரத் பவாருடன் டெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தைப் பார்வையிடும் அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் (இடமிருந்து இரண்டாவது).**

மேலும், நாடெங்கும் உள்ள 41,000 பங்குச் சந்தை சூதாட்ட நிறுவனங்களுக்கு சேவை வரியில் இருந்து விலக்கு; தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதியைக் கையாளும் தனியார் நிறுவனங்கள், அந்நிதியைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு வசதியாகப் பல்வேறு விதமான வரிச் சலுகைகள்; உணவுப் பொருட்களை வைத்துச் சூதாடும் ஆன்லைன் வர்த்தகச் சூதாடிகள் மீது விதிக்கப்பட்டிருந்த பரிவர்த்தனை வரி விலக்கு என 4,00,000 கோடி ரூபாய்க்கு மேல் இந்த பட்ஜெட்டில் சலுகைகள் வாரியிறைக்கப்பட்டுள்ளன.

•••

**ச**மூக நலத் திட்டங்களுக்குக் குறைவாக நிதி ஒதுக்கப்படுவதும், அதில் ஊழல்-மோசடிகள் நடப்பதும் இரண்டாம்பட்ச



படிப்பகம்

www.padippakam.com

விவகாரங்கள்தான். மைய அரசு போடும் ஒவ்வொரு பட்ஜெட்டும், பட்ஜெட்டுக்கு முன்னும் பின்னுமாக மைய அரசால் அறிவிக்கப்படும் ஒவ்வொரு பொருளாதாரக் கொள்கையும் நாடு மறுகாலனியாக்கப்படுவதைப் பல்வேறு வழிகளில் துரிதப்படுத்துகின்றன என்பதுதான் முதன்மையானது. இந்தக் கயமைத்தனத்தை மூடிமறைக்க, ''இந்தியா வல்லரசாகிறது'', ''21-ஆம் நூற்றாண்டு இந்தியாவின் நூற்றாண்டு'', ''நவீனமான, உலகமயமான விவசாயம்'' எனப் பல்வேறு விதமான கவர்ச்சிகரமான முழக்கங்களைப் பயன்படுத்தி, விவசாயிகள்-தொழிலாளர்களை மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்தையும் ஏமாற்றி வருகிறது மன்மோகன் சிங் கும்பல்.



தனியார் காப்பீடு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள உயிர் காக்கும் மருத்துவத் திட்ட தொடக்க விழாவில் மு.கருணாநிதியுடன் மைய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத்.

இந்தியாவின் பாரம்பரிய உணவுப்பொருள் விவசாயத்தை, சிறு-நடுத்தர விவசாயிகளை ஒழித்துக் கட்டிவிட்டு, ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயத்திற்கு ஏற்றவாறு, பெரும் முதலாளித்துவ பண்ணைகளை உருவாக்குவதுதான் ஆளும் கும்பலின் நோக்கம். விவசாய நிலங்களை விழுங்கி வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மட்டுமல்ல, நவீன விவசாயம் என்ற பெயரில் புகுத்தப்படும் குத்தகை விவசாயம், ஏற்றுமதிப் பயிர் விவசாயம், தரிசு நில மேம்பாடு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்-பயிர்கள் — இவை அனைத்துமே இந்திய விவசாயிகளுக்கு எதிரானவைதான். மயக்க பிஸ்கட் கொடுத்து ரயில் பயணிகளைக் கொள்ளையடிக்கும் திருட்டுக் கும்பல் போல, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற 'சமூக நல'த் திட்டங்கள் மூலம், விவசாயிகளை மயக்கி, அவர்களை விவசாயத்தில் இருந்து அப்புறப்படுத்த முயலுகிறார், மன்மோகன் சிங்.

தனியார்மயம்-தாராளமயத்தினால் நமது உணவுப் பொருள் விவசாயம் சிறுகச்சிறுக அழிக்கப்பட்டு வருவதன் பாரதூரமான விளைவுகளை, இப்பொழுது இந்திய மக்கள் அனைவரும் விலைவாசி உயர்வு என்பதன் வழியே அனுபவித்து வருகிறோம். எனவே, இந்தியப் பாரம்பரிய உணவுப் பொருள் விவசாயம் அழிக்கப்படுவது விவசாயிகள் பிரச்சினை மட்டுமல்ல, இந்திய மக்களின் பிரச்சினை. நமது நாடு சுயசார்புடன் இருப்பதா, இல்லை, ஏகாதிபத்தியங்களின் முழு அடிமையாவதா என்பது குறித்த பிரச்சினை.

போலி கம்யூனிஸ்டுகள்கூட இந்த வகையில் பட்ஜெட்டை அம்பலப்படுத்துவதில்லை. சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய், தரகு முதலாளிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் வரிச் சலுகைகளை ரத்து செய் என்பதோடு முடங்கிப் போய்விடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், மன்மோகன் சிங் விவசாயிகளுக்கு எதிராக என்ன செய்கிறாரோ, அதைத்தான் 'மார்க்சிஸ்டுகள்' சிங்குரிலும் நந்திகிராமத்திலும் வளர்ச்சி என்ற பெயரில் செய்யத் துணிந்து, வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்.

எனவே, விவசாயத்தில் தரகு முதலாளிகள், பன்னாட்டு விவசாயக் கழகங்களின் நலனுக்கு ஏற்ப தனியார்மயத்தைப் புகுத்துவதை நிறுத்து; சிறு-நடுத்தர விவசாயிகள், கூலி விவசாயிகள் நலனை முதன்மைப்படுத்தும் சீர்திருத்தங்களை அமலாக்கு என்ற கோரிக்கைகளை முன்வைத்து, நாடே கலகத்தில் இறங்க வேண்டிய தருணமிது.

• ரஹீம்

# தோழர் கணேசன் அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!

புதிய ஜனநாயகம் இதழின் சாத்தூர் நகர முகவராகவும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் ஊக்கமிகு முன்னணி ஊழியராகவும் செயல்பட்ட தோழர் கணேசன், கடந்த ஜூலை 22-ஆம் தேதியன்று மாரடைப்பினால் தனது 46-வது வயதிலேயே மரணமடைந்து விட்டார்.



வாகன ஓட்டுநராகப் பணியாற்றிய தோழர் கணேசன், 80-களின் இறுதியில் நக்சல்பாரி புரட்சிகர அரசியலால் ஈர்க்கப்பட்டு, விருதுநகர் மாவட்டத்தில் இப்புரட்சிகர அரசியலை மக்களிடம் கொண்டு சென்று அமைப்பாக்குவதில் முக்கிய பங்காற்றினார். எட்டாண்டுகளுக்கு முன்பிருந்தே அவரது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும், புரட்சியின் மீது அவர் கொண்ட பற்றுறுதி சற்றும் குறையவில்லை. கடுமையான வேலை நிலைமை மற்றும் குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகளுக்கிடையிலும் அவர் பிரச்சார-அமைப்பு வேலைகளை உற்சாகத்துடனும் உறுதியுடனும் செய்து வந்தார். தன்னந்தனியாகவே பல ஆண்டுகளாக பு.ஜ. இதழை விளம்பரப்படுத்தி, மக்களிடம் பிரச்சாரம் செய்வதிலும், தனது புரட்சிகர கடமைகளைச் சுயமாகத் திட்டமிட்டுக் கொண்டு நிறைவேற்றுவதிலும் அவர் எப்போதுமே முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

நோய்வாய்ப்பட்ட போதிலும், நோயின் வேதனை வெளியே தெரியாமல் இன்முகத்துடன் அனைவரிடமும் தோழமை கொண்டு தொடர்ந்து பிரச்சார-அமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்த தோழர் கணேசன், இன்று நம்மிடையே இல்லை. பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நடுவிலும் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்வதில் அவர் கொண்ட சளையாத ஆர்வம், கடின உழைப்பு, எளிய வாழ்வு, புரட்சிகரக் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றும் ஆற்றல் ஆகிய அவரது உயரிய கம்யூனிசப் பண்புகளைப் பற்றி நின்று, அவரது இலட்சியக் கனவை நிறைவேற்ற புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,
விருதுநகர் மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர்களின் உயிரையும் பறிக்கும் முதலாளித்துவப் பயங்கரவாதம்!

கடந்த ஜூன் 17-ஆம் தேதியன்று திருச்சி பாரத மிகுமின் நிறுவனத்தில் (BHEL) ஒரு டன் எடையுள்ள இரும்புத் தகடு சரிந்து விழுந்து, ரகுபதி என்ற உதிரித் தொழிலாளி கோரமாகக் கொல்லப்பட்டார். எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி உதிரித் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள், பயிற்சித் தொழிலாளர்கள்களைக் கட்டாயமாக வேலை செய்யுமாறு நிர்வாகம் நிர்பந்திப்பதால் ஏற்பட்ட கோரமான விபத்துகளில் ஒன்றுதான் இது. வழக்கம் போலவே, இப்படுகொலையை மூடி மறைக்க ஆலை நிர்வாகிகள் முயற்சித்தபோது, தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராடியதால், இழப்பீடு நிவாரணமும் மாண்டுபோன தொழிலாளி ரகுபதியின் மனைவிக்கு இந்நிறுவனத்தில் வேலைதரவும் நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இக்கொடிய விபத்தின் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாகவே, கடந்த ஜூலை முதல் நாளன்று இதே நிறுவனத்தில் மீண்டும் இரும்புத் தகடு சரிந்து விழுந்து, லாசர் என்ற உதிரித் தொழிலாளி கொல்லப்பட்டார். விபத்து நடந்த போது, அருகில் தொழிலாளிகள் யாருமில்லாததால், படுகாயமடைந்த தொழிலாளியை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாகவும், அங்கு சிகிச்சை பலனளிக்காமல் அவர் மாண்டதாகவும் நிர்வாகம் இப்படுகொலையை மூடிமறைத்தது. பின்னர், தொழிலாளர்கள் போராடியதால் மாண்டுபோன தொழிலாளியின் வாரிசு ஒருவருக்குத் தற்காலிக வேலை தருவதாக நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளது.

உதிரித் தொழிலாளருக்கும் ஒப்பந்தத் தொழிலாளருக்கும் ''விபத்துகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல'' என்ற வேலையில் சேரும்போது தொழிலாளியிடம் எழுதி வாங்கிக் கொள்ளும் இந்த அரசுத்துறை நிறுவனம், எவ்வித உரிமையோ பாதுகாப்புச் சாதனங்களோ இல்லாமல் கொத்தடிமைகளாக வேலைசெய்து வரும் தொழிலாளர்களின் கடின உழைப்பால் கடந்த ஆண்டில் ரூ. 1500 கோடிகளுக்கு மேல் இலாபம் ஈட்டியுள்ளது. அரசுத்துறை நிறுவனமே இப்படித் தொழிலாளர்களை விபத்துகளுக்கு ஆளாக்கி வெறியோடு இலாபமீட்டும் போது, தனியார் ஆலைகளில் நிலவும் கொத்தடிமைத்தனங்களையும் விபத்துகளில் தொழிலாளர்கள் படுகொலையாவதையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

கடந்த ஜூலை-9 ஆம் தேதியன்று திருச்சி-சங்கிலியாண்டபுரத்தில் உள்ள திருச்சி டிஸ்லரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் ஆலையில் பாய்லர் வெடித்து, மூன்று தொழிலாளர்கள் 200 அடி தொலைவுக்கு உடல்கள் பிய்த்தெறியப்பட்டு கோரமாக மாண்டு போயுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். உரிமம் புதுப்பிக்கப்படாமல் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து இயக்கப்பட்ட இந்த ஆலையின் முதலாளிகள், இலாபவெறியோடு பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதுமின்றி தொழிலாளர்களை ஆபத்தான வேலைகளில் நிர்பந்தமாக ஈடுபடுத்தியதாலேயே இக்கோரமான விபத்து ஏற்பட்டுள்ளது.



நாடு முழுவதும் தொழிலாளர்கள் உரிமைகளற்ற அடிமைகளாக வதைக்கப்படுவதற்கும், பாதுகாப்புச் சாதனங்களின்றி விபத்துகளில் தொழிலாளர்கள் கொல்லப்படுவதற்கும், முதலாளிகளின் இலாபவெறிக்கும் வகைமாதிரிக்குச் சில உதாரணங்கள்தான் இவை. இவற்றுக்கு எதிராக சங்கமாக அணிதிரளும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிப் பழிவாங்கும் முதலாளிகளின் கொட்டத்துக்கு அரசும் போலீசும் நீதித்துறையும் வெளிப்படையாகவே துணை நிற்கின்றன.



பலியான ரகுபதி

தொழிலாளர்கள் மீது தொடரும் இக்கொடிய முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராக தமிழகமெங்கும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியினர் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு தொழிலாளர்களை அணிதிரட்டி வருகின்றனர். சேலத்தில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு; இம்மாவட்டத்தில் ஜவுளித் தொழில் மற்றும் ஏற்றுமதிக்கான ஆயத்த ஆடைத் தயாரிப்புக் கூடங்களில் தொழிலாளர்கள் சட்டவிரோதமாக 12 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கப்படுவதற்கு எதிராகவும், பணிநிரந்தரம்-பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகளின்றி தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதற்கு எதிராகவும் கடந்த ஜூலை மாதத்தில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்கியது. இதன் தொடர்ச்சியாக, 20.07.09 அன்று சேலம் தலைமை அஞ்சல் நிலையம் முன்பாக, தொழிலாளர்களைத் திரட்டி முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டக் கோரியும் விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் எரிமலையின் சீற்றத்தை முன்னறிவிப்பதாக அமைந்தது.

**-பு.ஜ.செய்தியாளர்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# "கொள்கையைக் குப்பையில் போடு! ஊழலைக் கோபுரத்தில் வை!!"

## - சி.பி.எம்.இன் புதிய சித்தாந்தம்

**ஊ**ழல் கறைபடியாத கட்சியாகக் காட்டிக் கொண்ட சி.பி.எம். கட்சி, இப்போது ''ஊழலுக்கு உடந்தையாக இரு! இல்லையேல் நடவடிக்கை எடுக்கப்படும்!'' என்று தனது கட்சியினரையே மிரட்டத் தொடங்கி விட்டது. கேரள முதல்வரும், கேரள மாநில சி.பி.எம். கட்சி நிறுவனர்களில் ஒருவரும், மூத்த தலைவருமான அச்சுதானந்தனை அரசியல் தலைமைக் குழு (பொலிட் பீரோ) விலிருந்து நீக்கியதன் மூலம் இப்புதிய கொள்கையைச் செயல்படுத்தவும் கிளம்பி விட்டது.

கேரளத்தில் சி.பி.எம். முதல்வர் அச்சுதானந்தன் தலைமையிலான கோஷ்டியும், அக்கட்சியின் மாநிலச் செயலாளரான பினாரயி விஜயன் தலைமையிலான கோஷ்டியும் பதவிக்காகவும், சி.பி.எம் கட்சியின் பல நூறு கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்களை அனுபவிக்கும் அதிகாரத்துக்காகவும் தீராத நாய் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், பினாரயி விஜயன் மீதான லாவலின் ஊழல் விவகாரம் வீதிக்கு வந்து நாறத் தொடங்கியதும், இந்த கோஷ்டி மோதல் உக்கிரமடைந்தது.

அதென்ன லாவலின் ஊழல்? கேரளாவில் 1996 முதல் 2001 வரை சி.பி.எம். முதல்வர் ஈ.கே. நாயனார் தலைமையிலான 'இடது முன்னணி' ஆட்சியில், பினாரயி விஜயன் மின் துறை அமைச்சராக இருந்தபோது, கனடா நாட்டைச் சேர்ந்த எஸ்.என்.சி. லாவலின் என்ற நிறுவனத்துடன் மூன்று நீர்மின் திட்டங்களைச் சீரமைத்து நவீனப்படுத்துவதற்கான ஒப்பந்தம் போட்டார். இதில் ரூ. 390 கோடி ஊழல் நடந்துள்ளதாகக் காங்கிரசு கட்சியினர் குற்றம் சாட்டினர். 2001 முதல் 2006 வரையிலான காங்கிரசு கூட்டணி ஆட்சிக் காலத்தில் அப்போதைய காங்கிரசு முதல்வரான உம்மன் சாண்டி, இந்த ஊழலை மையப் புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) விசாரிக்கக் கோரி நடவடிக்கை எடுத்தார். மிகத் தாமதமாக மையப் புலனாய்வுத்துறை இப்போதுதான் பினாரயி விஜயன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. ஆனால், இப்போது காங்கிரசு கூட்டணிக்குப் பதிலாக, இடது முன்னணி ஆட்சியில் உள்ளது. (பார்க்க: பதிய ஜனநாயகம், மார்ச் 2009).

காங்கிரசு மற்றும் மையப் புலனாய்வுத்துறையின் குற்றச்சாட்டுகளுக்கு பினாரயி விஜயனோ, சி.பி.எம். தலைமையோ இன்றுவரை விளக்கமளிக்கவில்லை. ''தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க மைய அரசு பயன்படுத்தும் இன்னொரு ஆயுதம்தான் மையப் புலனாய்வுத் துறை'' என்று சாடும் சி.பி.எம். கட்சித் தலைமை, இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கமுடைய அவதூறுகள் என்று எதிர்வாதம் செய்கிறது.

ஆனால், கேரள மாநில அரசின் கணக்கு - தணிக்கைத் துறை, இந்த ஒப்பந்தத்தின் மூலம் மாநில அரசுக்கு ரூ. 390 கோடி நட்டமேற்பட்டுள்ளதாக தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கேரள மாநில அரசின் ஊழல் தடுப்பு - கண்காணிப்புத் துறை, எட்டு உயரதிகாரிகள் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இந்த விவரங்களைக் கொண்ட அறிக்கையை அச்சுதானந்தன் கட்சித் தலைமையிடம் கொடுத்து பினாரயி விஜயன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரினார். ஆனாலும் கட்சி மட்டத்தில் கூட விசாரணை நடத்த சி.பி.எம். தலைமை முன்வரவில்லை. காங்கிரசும் மையப் புலனாய்வுத் துறையும் அரசியல் உள்நோக்கத்தோடு அவதூறு செய்கின்றன என்றால், அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் கேரள முதல்வருமான அச்சுதானந்தன், பினாரயி விஜயன் மீது புகார் கொடுத்திருப்பதும் கூட வெறும் அவதூறுதானா என்று சி.பி.எம். கட்சிக்குள்ளேயே கேள்வி எழும்பத் தொடங்கிய பின்னரும் கட்சித் தலைமை இது பற்றி விசாரணை நடத்த முன்வரவில்லை.

மாறாக, கடந்த பிப்ரவரியில் அரசியல் தலைமைக் குழு கூட்டத்தைக் கூட்டிய கட்சித் தலைமை, பினாரயி விஜயனை ஆதரித்து, கட்சியைக் காப்பாற்ற சமரசமாகப் போகுமாறு அச்சுதானந்தன் கோஷ்டியை எச்சரித்தது. ஊழல் குற்றச்




சாட்டுக்கு ஆளான பினாரயி விஜயன், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் மற்றும் கேரள மாநில சி.பி.எம். செயலாளர் பொறுப்புகளிலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை என்று கட்சித் தலைமை அறிவித்தது. இதன்படி, பினாரயி விஜயன் மீது மையப் புலனாய்வுத் துறை நடவடிக்கை எடுக்க அனுமதி தரக்கூடாது என்று கேரள மாநில ஆளுநருக்கு 'இடதுமுன்னணி' அமைச்சரவை பரிந்துரை செய்தது.

ஆனால் ஆளுநரோ, அமைச்சரவையின் பரிந்துரையையும் மீறி பினாரயி விஜயன் உள்ளிட்டு இந்த ஊழலில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரின் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய மையப் புலனாய்வுத் துறைக்கு அனுமதியளித்தார். இதைத்தான் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும், ஆளுநர் காங்கிரசு கட்சிக்காரர் போலச் செயல்படுகிறார் என்றும் சி.பி.எம்



படிப்பகம்

www.padippakam.com

கட்சித் தலைமை சாடுகிறது. அமைச்சரவையின் பரிந்துரையை மீறி ஆளுநர் இப்படி அனுமதி வழங்க அதிகாரம் கிடையாது என்று சட்டவாதம் பேசுகிறதே தவிர, எவ்வித ஊழலிலும் ஈடுபடவில்லை என்று அக்கட்சி நியாயவாதம் பேசவில்லை. கடந்த ஜூன் மாதத்தில் ஆளுநர் அனுமதியளித்ததும், கேரளாவிலும் தமிழகத்திலும் சி.பி.எம். கட்சி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. ஆனால், கேரள முதல்வர் அச்சுதானந்தனோ ஆளுநரின் செயலை நியாயப்படுத்திப் பேசினார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது எதிர்க்கட்சியான காங்கிரசு, லாவலின் ஊழல் விவகாரத்தை முன்னிறுத்தி போலி கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. மறுபுறம், அச்சு கோஷ்டி பினாரயி விஜயனின் ஊழலை அம்பலப்படுத்தி வந்ததோடு, தேர்தலின்போது உள்குத்து வேலையிலும் இறங்கியது. ஏற்கெனவே மறுகாலனியாக்கக் கொள்கைகளை விசுவாசமாகச் செயல்படுத்தி மக்கள் நலத்திட்டங்களைப் புறக்கணித்து வந்ததால், 'இடது முன்னணி' ஆட்சியின் மீது கேரள மக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். இதோடு லாவலின் ஊழல் விவகாரமும் அம்பலப்பட்டதால் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போன சி.பி.எம். கூட்டணி, நாடாளுமன்ற தேர்தலில் இதுவரை கண்டிராத படுதோல்வியைச் சந்தித்தது.

**''சி.பி.எம். கட்சியை கோடீசுவரக் கட்சியாக மாற்றியமைத்த என்னை யாராலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது!''**



நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்கு சி.பி.எம். கட்சிதான் காரணம் என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான பரதன். சி.பி.எம். கட்சியோ, கட்சிக்குள் நிலவும் கோஷ்டி சண்டைதான் தேர்தல் தோல்விக்குக் காரணம் என்று கண்டுபிடித்து, கோஷ்டி சண்டைக்கு முடிவு கட்ட கடந்த ஜூலை 11-12 தேதிகளில் மத்திய கமிட்டி கூட்டத்தைக் கூட்டி, கோஷ்டிச் சண்டைக்கு மூலகாரணமான அச்சுதானந்தனை அரசியல் தலைமைக் குழுவிலிருந்து நீக்குவதாக அறிவித்தது. அதேசமயம், அவர் மாநில முதல்வராகத் தொடர்ந்து நீடிப்பார் என்றும் அறிவித்தது. ஆனால், ஊழல் குற்றம் சாட்டப்பட்டுள்ள பினாரயி விஜயன் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை; விசாரணையுமில்லை. இதன்மூலம் ஊழல் பெருச்சாளிகள் சி.பி.எம். கட்சியில் தலைவராகலாம் என்ற புதிய மரபை உருவாக்கியுள்ளது.

சி.பி.எம். கட்சியை கோடீசுவரக் கட்சியாக மாற்றியமைத்து சாதனை படைத்தவர் என்பதால், ஊழலை மூடிமறைத்து பினாரயி விஜயனை சி.பி.எம். கட்சித் தலைமை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கிறது. மேலும், அரசாங்க சலுகைகள், சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதிலும், ஊழலிலும் பிழைப்புவாதத்திலும் சீரழித்து ஏறத்தாழ எல்லா மாவட்டக் கமிட்டிகளையும் அவர் தனது பிடியில் வைத்துக் கொண்டிருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுத்தால், கேரளாவில் சி.பி.எம் கட்சியே கலகலத்துப் போய் விடும் என்பதால், கோஷ்டிச் சண்டைக்கு முடிவு கட்டுவது என்ற பெயரில் பினாரயி விஜயன் கோஷ்டியை கட்சித் தலைமை ஆதரிக்கிறது. தற்போது மையப் புலனாய்வுத் துறையின் குற்றப்பத்திரிகைக்கு எதிராக கேரள சி.பி.எம். கட்சி நடத்தி வரும் இயக்கத்தையொட்டி வசூலிக்கப்பட்ட நன்கொடையில் விஜயன் கோஷ்டி ஊழல் செய்துள்ளதாக கட்சிக்குள்ளேயே புகார்கள் எழுந்துள்ள போதிலும், சி.பி.எம். தலைமை அது பற்றி பெயரளவுக்குக் கூட விசாரிக்க முன்வராமல் நழுவிக் கொள்கிறது.

இன்னொருபுறம், சி.பி.எம். கட்சியின் பொதுச்செயலாளரான பிரகாஷ் கரத் மீது மத்தியக் கமிட்டியில் பெரும்பான்மையாக உள்ள மே.வங்க கோஷ்டி அதிருப்தியில் உள்ளது. எனவே தனது தலைமையைத் தக்க வைத்துக் கொண்டு மே.வங்க தோஷ்டியைப் பணிய வைக்க, கேரள மாநிலத்தவரான கரத்துக்கு, தனக்கு ஆதரவாக கேரள கோஷ்டியைத் திரட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவேதான், பினாரயி விஜயன் கோஷ்டியை கரத் வெளிப்படையாக ஆதரிக்கிறார்.

மறுபுறம், ஊழலை எதிர்க்கும் நியாயவாதியாகக் காட்டிக் கொண்டு அனுதாபம் தேடும் அச்சுதானந்தனுக்கு ஊழலை எதிர்க்கும் யோக்கியதையே கிடையாது. சி.பி.எம். கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான அவர், இத்தனை காலமும் சி.பி.எம்.மின் எல்லா வண்ண சந்தர்ப்பவாதங்களையும் ஆதரித்து நின்றவர்தான். பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்தின் நியாயவுரிமையை மறுத்து, குறுகிய இனவெறி அரசியல் நடத்தி ஆதாயம் தேடும் சி.பி.எம்.மின் படுபிற்போக்கான முதல்வர்தான் அவர். 1998-இல் நடந்த கேரள மாநில மாநாட்டின்போது, பினாரயி விஜயனோடு கோஷ்டி கட்டிக் கொண்டு லாரன்ஸ் உள்ளிட்ட பல மூத்த தலைவர்களை அவர் ஓரங்கட்டினார். ராகவன், கௌரியம்மாள் முதலான மூத்த தலைவர்களை கட்சியிலிருந்து வெளியேற்ற துணை நின்றார். சி.பி.எம். கட்சியை கோடீசுவர கட்சியாக மாற்றியமைத்த பினாரயி விஜயனின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்தூதினார். குருவை விஞ்சிய சீடனாக பினாரயி விஜயன் இப்போது வளர்ந்து விட்டதால், அவரை எதிர்த்து கோஷ்டி கட்டிக் கொண்டு தனி ஆவர்த்தனம் செய்கிறார்.

பினாரயி விஜயனின் ஊழலுக்கு ஒத்தூதும் கட்சித் தலைமையை எதிர்த்து அவர் கலகம் செய்யவோ, அல்லது தனிக் கட்சி தொடங்கவோ முன்வரவில்லை. மக்கள் முன் இந்த ஊழலை அம்பலப்படுத்தி, மக்களைத் திரட்டிப் போராடவும் அவர் தயாராக இல்லை. மாறாக, கட்சி முடிவுக்குக் கட்டுப்படுவதாகக் கூறிக் கொண்டு அடக்கி வாசிக்கிறார்.

இந்நிலையில், அச்சு கோஷ்டி மீது அனுதாபம் காட்டுவதற்கோ, ஊழல் எதிர்ப்புப் போராளியாகக் கருதுவதற்கோ அடிப்படையே கிடையாது. ஊழலையும் பாசிச அடக்குமுறையையும் நியாயப்படுத்தக் கிளம்பிவிட்ட சி.பி.எம். கட்சியை உழைக்கும் மக்கள் புறக்கணித்து முடமாக்குவதைத் தவிர, இனி வேறு வழியும் கிடையாது.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

# வெடி விபத்தல்ல, பச்சைப் படுகொலை!

## தண்டிக்கப்பட வேண்டியவர்கள் பட்டாசு ஆலை அதிபர்கள் மட்டுமல்ல; உடந்தையாக நின்ற அதிகாரிகளும் போலீசும்கூடத்தான்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், கருமாத்தூர் அருகே வடக்குப்பட்டியிலுள்ள வி.பி.எம். பட்டாசு ஆலையில் கடந்த ஜூலை 7-ஆம் தேதியன்று ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 18 பேர் கொல்லப்பட்டு 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதைக் கண்டு, அந்த வட்டாரமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. ஒன்றரை வயது குழந்தையோடு பெண்களும் பள்ளிச் சிறுவர்களும் கோரமாகக் கொல்லப்பட்ட துயரம் தாளாமல் மரண ஓலத்தில் துவண்டு கிடக்கிறது வடக்குப்பட்டி.

இறந்தவர்களில் 4 பேரை மட்டுமே அடையாளம் காண முடிந்துள்ளது. மற்றவர்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு வெந்து கரிக்கட்டையாகி கிடந்தனர். மாண்டவர்களைக் கட்டிப்பிடித்து அழுவதற்குக் கூட முடியாமல், உறவினர்கள் கதறியழுத காட்சி நெஞ்சை உலுக்குவதாக இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் மேற்கூரையும் செங்கற்சுவரும் வெடித்துச் சிதறி தப்பியோடியவர்களைத் தாக்கியதால் தலை, கை-கால்கள் என பிய்த்தெறியப்பட்டு பலர் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

துரைப்பாண்டியன் என்பவருக்குச் சொந்தமான இந்த வி.பி.எம். பட்டாசுத் தொழிற்சாலை, சிவகாசி பட்டாசுகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் பிரபலம் அடைந்துள்ளது. சாதாரண திருவிழா பட்டாசு மருந்துகளுக்குப் பதிலாக, வீரியமிக்க அதிக ஒலியெழுப்பும் மருந்துகளைக் கொண்ட பட்டாசுகள் விதிமுறைகளை மீறி இங்கு தயாரிக்கப்படுகின்றன. தீபாவளி நெருங்குவதால், குறுகிய இடத்தில் இரவு-பகலாக இங்கு பெருமளவுக்குப் பட்டாசு தயாரிக்கப்பட்டுள்ளது. அதுவும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இல்லாமல், குடிசைத் தொழில் போல பட்டாசுகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியாக இருப்பதாலும், விவசாயிகள் வறுமை-வேலையின்மையால் தத்தளிப்பதாலும் வடக்குப்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராம மக்களுக்கு வாழ்வளிப்பது இந்தப் பட்டாசு ஆலைதான். மக்களின் வறுமையைச் சாதகமாக்கிக் கொண்டு, எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி, இலாபவெறியோடு பட்டாசுகளை உற்பத்தி செய்து வந்துள்ளார், இந்த ஆலை முதலாளி. இதற்கு அதிகார வர்க்கமும் போலீசும் உரிய கப்பம் பெற்றுக் கொண்டு உடந்தையாக இருந்துள்ளன. எட்டு பெண்கள் மட்டுமின்றி, கொல்லப்பட்டவர்களில் 4 பேர் பள்ளிக்கூட மாணவர்கள் என்பதும், படுகாயமடைந்தவர்களில் கணிசமானோர் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்பதும், சட்டமும் விதிகளும் எந்த அளவிற்கு இங்கே அப்பட்டமான மீறப்பட்டுள்ளன என்பதற்குச் சாட்சியங்கள்.

வடக்குப்பட்டி பட்டாசு ஆலையில் நடந்த கோரமான விபத்தின் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாகவே மீண்டும் ஒரு பட்டாசு ஆலை விபத்து நடந்துள்ளது. சிவகாசி அருகே நமஸ்கரித்தான் பட்டியிலுள்ள கிருஷ்ணா பட்டாசு தொழிற்சாலையில் கடந்த ஜூலை 20-ஆம் தேதி ஏற்பட்ட தீவிபத்தில் 11 பேர் கொல்லப்பட்டு 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் சிவகாசியில் அடுத்தடுத்து நடந்த பட்டாசு ஆலை விபத்துகளில் 22 பேர் கொல்லப்பட்டு, 70-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். வடக்குப்பட்டி போலவே இங்கேயும் விபத்துக்கான காரணம் தெரியவில்லை. பரபரப்புச் செய்திகளும் விசாரணை நாடகங்களும் குறையவுமில்லை.



வடக்குப்பட்டி பட்டாசு ஆலை விபத்தில் உற்றார்-உறவினர்களைப் பறிகொடுத்த துயரம் தாளாமல் கதறும் தாய்மார்கள்.

இப்பகுதிகளில், பாடுபட்டுப் பயிரிட்டாலும் உரியவிலை கிடைக்காமல் விவசாயிகள் போண்டியாவதால், வறுமையிலுள்ள விவசாயிகள், குழந்தைகள் உள்ளிட்டு தமது குடும்பத்தோடு வேறுவழியின்றி உயிருக்கே ஆபத்தான இத்தகைய தொழில்களில் ஈடுபடுகின்றனர். விபத்தும் உயிரிழப்புகளும் நடந்த பிறகும்கூட, ஊருக்கே சோறுபோடும் பட்டாசு ஆலையை மூடிவிடாதீர்கள் என்று கெஞ்சுகின்றனர். விவசாயம் செய்ய வாய்ப்பு-வசதிகளும் அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தால், இத்தகைய ஆபத்தான தொழில்களில் எவரும் ஈடுபடமாட்டார்கள். ஆனால் அரசோ, ஏற்கெனவே விவசாயத்தைப் புறக்கணித்து வருவது போதாதென்று, விவசாயத்தை விட்டே விவசாயிகளை விரட்டியடிக்கும் தனியார்மயம் - தாராளமயம்-உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கைகளைத் தீவிரமாக நடைமுறைப் படுத்தி வருகிறது. இதன் விளைவாக, பிழைக்க வழியின்றி விவசாயிகள் நாடோடி களாக அலைவதும், பட்டாசு தயாரிப்பு, கல் குவாரி, பாதாள சாக்கடையில் மூழ்கி அடைப் புகளை நீக்குதல் முதலான பல ஆபத்தான வேலைகளை எவ்விதப் பாதுகாப்புச் சாதனங் களுமின்றி செய்யுமாறு தள்ளப்படுவதும், விபத்துகளும் மரணங்களும் பெருகுவதும் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன.



எட்டு பேரை பலிக்கொண்ட நமஸ்கரித்தான்பட்டியில் நடந்த பட்டாசு ஆலை விபத்தில் சிதைந்த கட்டடம்.

இந்த அடிப்படையான உண்மைகளை மூடிமறைத்துவிட்டு, தொடரும் இத்தகைய விபத்துக்களைப் பற்றி முதலைக் கண்ணீர் வடிப்பதும், விதிமுறைகள் - பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி கூப்பாடு போடுவதும், விசாரணை நாடகமாடுவதும் கடைந்தெடுத்த பித்தலாட்டமேயாகும். பிழைக்க வழியின்றி விவசாயிகளை வறுமைக்கும், ஆபத்தான தொழில்களுக்கும் தள்ளி உயிர்ப்பலி கேட்கும் மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டங்களைக் கட்டியமைப்பதுதான், இத்தகைய கொடுமைகளுக்கு முடிவுகட்டக் கூடிய உண்மையான அரசியல் பணியாக, உண்மையான நிவாரணப் பணியாக இருக்க முடியும்.

• முத்துராசு

# “ஜிண்டாலை விரட்டியடிப்போம்! சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்!”

## – மனித உரிமை பாதுகாப்பு மையத்தின்(HRPC)ஆர்ப்பாட்டம்

ஒரிசா மாநிலத்தின் இரும்புக் கனிமங்களை வரைமுறை யின்றிச் சூறையாடி மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து வரும் ‘‘ஜிண்டால்’’ எனும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனம், தமிழகத்தின் திருவண்ணாமலை அருகேயுள்ள கவுத்தி வேடியப்பன் மலையின் இரும்புக் கனிமங்களையும் சூறையாடக் கிளம்பியுள்ளது. ஏற்கெனவே இதற்கான புரிந் துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, மக்களின் எதிர்ப்பு காரண மாக, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது ஓட்டுக்காக இத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் தொடரப்படுமா, இல்லையா என்பதை அரசு வெளிப்படையாக அறிவிக்காத போதிலும், திரைமறைவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த காய்களை நகர்த்தி வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, வேடியப்பன் மலையின் 52 கிராமங்களில் வாழும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை விரட்டியடித்துவிட்டு, மரங்களையும் புதர்க்காடுகளையும் அழித்து, மலைகளை உடைத்து ஆண்டுக்கு 10 லட்சம் டன் இரும்புத் தாதுவை ஜிண்டால் நிறுவனம் அள்ளிச் செல்ல தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. இதனால் பாரம்பரியமாக இம்மலைப் பகுதியில் வாழும் மக்களின் எதிர்கால வாழ்வு பறிக்கப்படும். மேலும், மலைகளை உடைப்பதால் சுற்றி யுள்ள விவசாயப் பகுதிகளில் புழுதி படிந்து பயிர்கள் நாச மாகி, சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும். இரும்புத் தாதுவைப் பிரித்தெடுக்கும் ஆலைக் கழிவுகளால் இவ்வட் டாரமே நாசமாகும். ஒப்பந்தப்படி, சாத்தனூர் அணையின் நீர் இத்திட்டத்துக்குத் திருப்பிவிடப்பட்டால், இவ்வட்டாரத்தின் விவசாயமே பொய்த்துப் போய், விவசாயிகள் வேலையிழந்து வாழ்விழக்க நேரிடும். திருவண்ணாமலை நகருக்குக் குடி நீர் தட்டுப்பாடு ஏற்படும்.

காத்திருக்கும் இப்பேரபாயத்தை விளக்கி வேடியப்பன் மலைக்கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்த ம.உ.பா. மையம், உலகமயமாக்கலின் கீழ் மாநிலத்தின் தொழில்வளர்ச்சி என்ற பெயரில் தொடரும் இத்தகைய சூறையாடலை எதிர்த்தும், சுற்றுச் சூழலை நாசமாக்கி மக்களின் வாழ்வுரிமை யைப் பறிக்கும் இத்திட்டத்தை எதிர்த்தும், கடந்த 24.7.09 அன்று திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு இடியோ சையென முழக்கங்கள் எதிரொலிக்க, ஆர்ப் பாட்டத்தை நடத்தியது. வேடியப்பன் மலைக் கிராம மக்களும் வழக்குரைஞர்களும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களும் ஊக்கமுடன் பங்கேற்று நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், ஜிண்டால் நிறு வனத்தை விரட்டியடிக்கும் போராட்டத்துக் குப் புதுரத்தம் பாய்ச்சி, புதிய நம்பிக்கையை விதைப்பதாக அமைந்தது.




— பு.ஜ. செய்தியாளர்.



படிப்பகம்

www.padippakam.com

## கன்னித்தன்மை பரிசோதனை:

# இந்து மதவெறிக் கும்பலின் ஆணாதிக்க வக்கிரப் புத்தி

ஏழ்மையின் காரணமாகத் திருமணமாகாமல் இருக்கும் பெண்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கிறோம் எனக் கூறி, மணமேடை வரை அழைத்துச் சென்ற பிறகு, மணப்பெண் கன்னித்தன்மையுடன் இருந்தால்தான் திருமணம் என்று சொல்லி, அவர்களை இழிவுபடுத்திய கொடுமை மத்தியப் பிரதேசத்தில் நடந்துள்ளது. அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசே இதனைச் செய்துள்ளது என்பதுதான் இன்னமும் கொடுமை.


'முக்கிய மந்திரி கன்யாதான் யோஜனா' (முதலமைச்சர் திருமண உதவித் திட்டம்) என்ற திட்டத்தின் மூலம் அம்மாநிலத்தில் இலவசத் திருமணங்கள் மாதந்தோறும் நடத்தி வைக்கப்படுகின்றன. இதில் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்குச் சீதனமாக, ஒரு பெட்டியில் சமையல் பாத்திரங்களும், ஒரு கைபேசியும், 6500 ரூபாய் ரொக்கமாகப் பணமும் வழங்கப்படும். 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் இதுவரை கிட்டத்தட்ட தொன்னூறாயிரம் தம்பதிகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் 30-ஆம்தேதி இத்திட்டத்தின் கீழ் 152 தம்பதிகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைப்பதாக இருந்தது. ஆனால், திடீரென மணப்பெண்களின் கன்னித்தன்மை பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டால்தான், அவர்களுக்குத் திருமணம் நடத்தப்படும் என அதிகாரிகள் அறிவித்தனர். அதன்படி, திருமணத்திற்காக வந்திருந்த மணப்பெண்கள் 152 பேருக்கும் உடனடியாக கன்னித்தன்மைப் பரிசோதனை நடத்தப்பட்டது. முடிவில் 14 பேர் தவிர்த்து மீதமுள்ள 138 பேருக்கு திருமணம் நடத்தப்பட்டது.

தங்களது திருமணத்திற்குக் கூட அரசிடம் கையேந்தும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் மணமேடைக்கு வந்த பெண்களை இத்தகைய சோதனை மூலம் உளவியல் ரீதியாக வதைத்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட பெண்களில் இருவர் போலீசில் புகார் செய்ததையடுத்து, இந்த விசயம் வெளிஉலகிற்குத் தெரியவந்து பெரும் அதிர்ச்சியை நாடெங்கும் உருவாக்கியது. காங்கிரஸ் உள்ளிட்ட இதர கட்சிகள் நாடாளுமன்றத்தில் இதனை விவாதிப்பதாகக் கூறி, அந்த ஏழைப் பெண்களை மீண்டும் அவமானப்படுத்தின.

முதலில் அவ்வாறு பரிசோதனை ஏதும் செய்யப்படவில்லை என்று மறுத்த பா.ஜ.க.வினர், பின்னர் பொதுவான உடல்நலப் பரிசோதனை மட்டும் நடத்தப்பட்டதாகக் கூறினார்கள். இறுதியாகக் குட்டு வெளிப்பட்டவுடன், தங்களது செயலுக்கு நியாயம் கற்பிப்பதற்காக ''மணப்பெண்கள் கர்ப்பமாக இருக்கிறார்களா எனப் பரிசோதித்தோம்; ஆனால் கன்னித்தன்மைப் பரிசோதனை எதுவும் நடைபெறவில்லை'' என்று கூறினார்கள். இதன் மூலம் திருமணம் செய்ய வந்திருந்தவர்கள் அனைவரையும் ஏமாற்றுக்காரர்களாகச் சித்தரித்ததுடன், அரசுக்கு எதிராகப் புகார் கொடுத்த அந்த இரு பெண்களையும் மிரட்டி தங்களது புகாரைத் திரும்பப்பெற வைத்து, ஒரு வழியாகப் பிரச்சனைக்கு முடிவு கட்டியுள்ளனர்.

கற்பு நெறியைக் காப்பாற்றுவது எனும் பெயரில், பருவமடைந்த பெண்களை வீட்டைவிட்டு வெளியே அனுப்பாமல் அடுக்களையில் பூட்டிவைக்கும் சனாதானிகள், பெண்ணின் உடலில் உள்ள கன்னித்திரைதான் அவர்களது கன்னித்தன்மையைப் உறுதி செய்வதாகக் கருதுகிறார்கள். ஆனால், காட்டுமிராண்டித்தனமான இவ்வரையறை பெரும்பாலான உழைக்கும் பெண்களுக்கு அறிவியல்ரீதியாகப் பொருந்தாது. ஆண்களுக்கு நிகராக விவசாய வேலைகள், விறகு வெட்டுதல், தையல்வேலை உள்ளிட்ட கடினமான வேலைகளைச் செய்வதாலும் சைக்கிள் ஓட்டுவதாலும் இயல்பாகவே உழைக்கும் பெண்களில் பெரும்பாலானோர், கன்னிப்பரிசோதனை எனும் இந்த வக்கிரமான சோதனையில் தோல்வியடையவே செய்வர்.



**திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணம் புரிந்து கொண்ட தம்பதிகளோடு, ம.பி. முதல்வர் சிவ்ராஜ் சிங் சௌஹான்.**

விளையாட்டு வீராங்கனைகளுக்கும் கூட இது பொருந்தும். ஏழைப் பெண்களை இச்சோதனைக்கு உட்படுத்துவது என்பது ஆணாதிக்க வக்கிரம் மட்டுமல்ல; அடுப்பூதும் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரவே கூடாது எனும் பார்ப்பனியத் திமிரும் கூட.

திருமண உதவித் திட்டத்திற்கு கன்னிப்பரிசோதனையை முன்நிபந்தனையாக்குவதன் மூலம், விதவைப்பெண்களும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் மறுமணம் செய்வதை நேரடியாகத் தடுத்து, பெண்களுக்கெதிராகக் காலந்தோறும் கொடுமை இழைத்துவரும் இந்துப் பார்ப்பனியத்தை பா.ஜ.க. அரசு நிலைநிறுத்த நினைக்கிறது. ஆண்-பெண் சமத்துவத்திற்கு எதிரானதாகக் கருதப்படும் இந்தப் பரிசோதனைக்கு உலகம் முழுவதும் கடுமையான எதிர்ப்பு இருக்கிறது. ஆனால் அதைப் பற்றியெல்லாம் பா.ஜ.க. அரசு சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஏழைகளாக இருப்பதாலேயே அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் எனும் ஆளும் வர்க்கத் திமிரில் இது நடந்து கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களில் பா.ஜ.க. வட மாநிலங்களில் மோசமாகத் தோற்றிருப்பினும், அதன் மக்கள் விரோதத் தன்மை கொஞ்சம்கூட மாறிவிடவில்லை. கணவனை இழந்த பெண்களை உடன்கட்டை ஏற்றிக் கொல்லும் சதியைக் கூச்சமின்றிப் போற்றும் அதன் சனாதனப் பாரம்பரியம் இன்னும் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது. பா.ஜ.க. கும்பலின் ஆணாதிக்க பார்ப்பனீயக் கொடுமைதான் மத்தியப் பிரதேசத்தில் 'கன்னிப் பரிசோதனை' என்ற பெயரில் வக்கிரமாக அரங்கேறியுள்ளது. தன் மனைவியின் கற்பையே சந்தேகித்து அவளைத் தீக்குளிக்க வைத்த ஸ்ரீராமனைத் தேசிய நாயகனாகப் போற்றுபவர்களிடமிருந்து வேறு எதனை எதிர்பார்க்க முடியும்?

● மாணிக்கம்

### பள்ளி மாணவி மாரியம்மாள் தற்கொலை:

# குற்றவாளியைப் பாதுகாத்த போலீசாருக்குத் தண்டனை கொடு!

திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்த இளம்பெண்களை கடத்திச் சென்று கற்பழித்த கண்டோன்மென்ட் போலீசு; ஆட்டோ டிரைவர் செல்வத்தை விசாரணைக்கு அழைத்து சென்று 'கொட்டடி கொலை' செய்து பிணத்தை வெளியில் வீசிய உறையூர் போலீசு; சட்டக்கல்லூரி மாணவி பொன்னம்மாளைத் தற்கொலைக்குத் தள்ளிய கோட்டை போலீசு - என தினவெடுத்துத் திரியும் திருச்சி போலீசின் அட்டூழியங்களுக்கு மற்றுமொரு சாட்சியமாய், தன்னை தூக்கிலிட்டு மரித்து கொண்டுள்ளார் பள்ளி மாணவி மாரியம்மாள்.

திருச்சி தென்னூர் அண்ணாநகரில் வசித்துவரும் கூலித் தொழிலாளி ராணியின் மகள், 9-ஆம் வகுப்பு மாணவி மாரியம்மாள். இவர்கள் வசிக்கும் அதே பகுதியில் மளிகைக்கடை வைத்திருக்கும் பொறுக்கி ஆனந்த், மாரியம்மாளிடம் முறை தவறி நடக்க முயற்சித்திருக்கிறான்.

இதனையறிந்த மாரியம்மாளின் அண்ணன் இராசா பொறுக்கி ஆனந்தை கண்டித்திருக்கிறார். காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு கதறியதால், மன்னித்தும் விட்டிருக்கின்றனர்.

அடுத்த நாள், ''மன்னிப்பு கேட்க சொன்னியாமே, நான் தாண்டா உன் தங்கச்சிகிட்ட அனுப்பினேன். நாளைக்கும் அனுப்புவேன்'' என மாரியம்மாளின் அண்ணன் ராசாவை மிரட்டியுள்ளான், கட்டப்பஞ்சாயத்து பேர்வழியும், புதிய தமிழகம் கட்சியின் பிரமுகருமான மாரியப்பன்.

இக்கும்பலின் மிரட்டலை கண்டு அஞ்சிய மாரியம்மாளின் குடும்பத்தினர், உடனே, சிறீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

மறுநாள் காலையில், தில்லைநகர் உதவி ஆய்வாளர் மனோகரன் தலைமையிலான கும்பல் ''மாரியப்பன் மேலேயை புகார் தர்றியா?'' என புகார் தந்த ராசாவையே துப்பாக்கியை காட்டி மிரட்டி இழுத்து சென்றுள்ளது.

தில்லைநகர் காவல்நிலையம் சென்று நடந்த விவரத்தைக் கூற முயன்ற ராசாவின் தாயாரை பூட்ஸ் காலால் எட்டி உதைத்த காக்கி மிருகங்கள், ராசாவின் கால்களை ஏறி மிதித்தும், பிரம்பால் அடித்தும் சித்ரவதை செய்துள்ளனர். ''உன் புள்ள உசுரோட வேணுமுன்னா ரூ. 5000/- பணத்தைக் கொடு'' என பேரம் பேசி பணத்தை கறந்திருக்கிறார், உதவி ஆய்வாளர் மனோகரன்.

தன்னால் தன் அண்ணனும், தாயாரும் அவமானப்படுத்தப்பட்டு அலைக்கழிக்கப்படுவதைக் கண்டு கலங்கிய பொன்னம்மாள் தனியாளாய் சென்று சிறீரங்கம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் வளர்மதியிடம் கெஞ்சியிருக்கிறார், ''கேசு கீசுன்னு திரும்ப வந்த... உன் அண்ணன் கதைதான் உனக்கும், ஓடுடி வெளியே'' என வெறிநாயாக கத்தவே, விரக்தியுற்ற மாரியம்மாள், மனம் வெதும்பித் தூக்கிலிட்டு தன்னை மரித்துக் கொண்டார்.

''தன் சாவுக்கு ஆனந்த் மற்றும் மாரியப்பன்தான் காரணம்'' என்று மாரியம்மாள் தன் கைப்பட எழுதிய கடிதம் ஆதரமாய் உள்ள போதும், ''உடல்நிலை சரியில்லாமல்தான் மாரியம்மாள் இறந்தார்'' என போலீசு இதனை மூடி மறைக்க எத்தணித்துள்ளது.

இந்நிலையில், திருச்சி போலீசின் அட்டூழியங்களுக்கு எதிராகத் தொடரந்து உறுதியோடு போராடி வரும் ம.க.இ.க., மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினர் இதில் தலையிட்டு, ''சாவுக்கு காரணமான குற்றவாளிகளையும், காவல்துறையினரையும் வழக்கு போட்டு கைது செய்யும் வரை, உடலை வாங்க மாட்டோம்'' என பொதுமக்களை அணிதிரட்டி திருச்சி தலைமை அரசு மருத்துவமனை எதிரே மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

நிலைமை கைமீறிப் போனதையடுத்து, புரட்சிகர அமைப்புகள் களத்தில் இருப்பத்தை கண்டு பீதியடைந்த போலீசு, குற்றவாளிகளை உடனே கைதுசெய்ததோடு, தில்லைநகர் போலீஸ் ஆய்வாளர் கென்னடி, உதவி ஆய்வாளர் மனோகரன், சிறீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் வளர்மதி ஆகியோரையும் பணியிடை நீக்கம் செய்துள்ளது.

முதற்கட்ட வெற்றியை ஈட்டியுள்ள இவ்வமைப்பினர், தொடரும் திருச்சி போலீசின் அட்டூழியங்களைப் பட்டியலிட்டும், ஆர்.டி.ஒ. விசாரணைக்கு உத்திரவிடக் கோரியும் கடந்த 06.07.09 அன்று பெருந்திரளான மக்களுடன் சென்று மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டுள்ளனர்.



ஆனந்த் போன்ற பொறுக்கிகளுக்கு எதிராகவும், இப்பொறுக்கிகளின் புகலிடமாய்த் திகழும் சட்டப்பூர்வ கிரிமினல்களான போலீசுக்கெதிராகவும் வீதியிலறிங்கிப் போராடுவதொன்றே தீர்வு என்ற அறைகூவலோடு மக்களை திரட்டிவரும் இவ்வமைப்பினர், அடுத்தகட்டப் போராட்டத்திற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— பு.ஜ. செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# மணியரசன் கும்பலின் தமிழ்த் தேசிய சிறப்பு மாநாடு:

# பித்தலாட்டத்தின் புது அவதாரம்

**பார்ப்பன-இந்து மதத்தை அழிக்க வேண்டிய அவசியத்தை ஏற்காத மணியரசன் கும்பல், ஆரியத்தை எதிர்க்கப் போவதாக தமிழன் காதில் பூச்சுற்றுகிறது.**

என்ன அருள் வந்து இறங்கியதோ தெரியவில்லை. திடீரெனத் ''தமிழ்த் தேசியம்'' என்று கூச்சலிட்டுக் கொண்டு சாமியாடக் கிளம்பி விட்டது தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி எனும் பெயரிலுள்ள மணியரசன் கும்பல். தமிழனை இளிச்சவாயனாகக் கருதிக் கொண்டு, வெற்றுச் சவடால் அடித்து, திருச்சியில் கடந்த ஜூலை 12-ஆம் தேதியன்று ஒரு மாநாட்டையும் அது நடத்தியுள்ளது.

நேற்றுவரை தமிழ் ஈழம்தான் ஒரே தீர்வு என்று மூச்சுக்கு முன்னூறு தடவை கூப்பாடு போட்ட இக்கும்பல், ஈழத் தமிழின அழிப்புப் போருக்குப் பிறகு, இப்போது தமிழ்த் தேசியம்தான் ஒரே தீர்வு என்று கூப்பாடு போட்டுக் கொண்டு தமிழர்களைப் புல்லரிக்க வைக்கிறது.

இந்தியா, தமிழனை நம்பத் தயாராக இல்லையாம்! நட்புக் கரம் நீட்டிய ஈழத் தமிழர்களையும் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் நம்ப முடியாது என டெல்லி ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் கணக்கு போடுகிறார்களாம்; ஆரிய - திராவிட வரலாற்றுப் பகைதான் இதற்குக் காரணமாம். ஆரியப் பகையறுத்துத் தமிழினத்துக்கென ஒரு நாடு இல்லாததுதான் அதன் அடிப்படை ஊனமாம். நாடு இருந்திருந்தால், ஈழத் தமிழர்களை இன அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடியுமாம். எனவேதான், தமிழ்த் தேசியக் குடியரசு அமைப்பதைத் தமிழர்கள் இலட்சியமாகக் கொள்ள வேண்டுமாம். அதற்கான திசைவழியைத் தீர்மானிக்கவே இந்த மாநாடாம். இப்படியொரு வரலாற்று ரீதியான கதையை அவிழ்த்து விட்டுள்ளார், மணியரசன்.

ஆரியம் என்பது பார்ப்பனியம்; பார்ப்பன சனாதன - வருணாசிரம தர்மம்தான் இந்துமதம். இந்துத்துவம் என்பது அதன் நவீனகால அரசியல் - சித்தாந்த - பண்பாட்டு அவதாரம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஈழத் தமிழர்களைக் கொன்றொழிக்கும் ''காங்கிரசுக்குப் போடாதே ஓட்டு! தமிழினத்துக்கு வைக்காதே வேட்டு!'' என்று பிரச்சாரம் செய்து, ஆரிய-பார்ப்பன இந்துவெறி பாரதிய ஜனதாவையும் பார்ப்பன பாசிச ஜெயலலிதாவையும் கொல்லைப் புறமாக ஆதரித்ததோடு, இவர்கள்தான் தேர்தலில் வெற்றி பெறுவார்கள்; இவர்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக ஈழத் தமிழின அழிப்புப் போர் நிறுத்தப்படும் என்று விடுதலைப் புலிகளையும் நம்ப வைத்து கழுத்தறுத்த இந்தத் துரோகக் கும்பல்தான், இப்போது ஆரியப் பகைமுடிக்க தமிழ்த் தேசக் குடியரசை நிறுவப் போவதாகப் பசப்புகிறது. இந்தக் கயமைத் தனத்தை மறைக்க ஒரு மாநாடு கூட்டி ஏய்க்கவும் கிளம்பியிருக்கிறது.

மணியரசன் கும்பலைப் பொருத்தவரை, ஆரியம் என்பது வேறு; இந்துத்துவம் - பார்ப்பனியம் என்பது வேறு; இந்துமதம் என்பது வேறு. இந்துமதம் என்பது கடவுள் நம்பிக்கை; இதை இப்போதைக்கு அழிக்க முடியாது; அதற்கான அவசியமுமில்லை என்பதுதான் அக்கும்பலின் நிலைப்பாடு. ஆரிய-பார்ப்பன சாம்ராஜ்ஜியத்தின் இதயமான இந்து மதத்தை - இந்துத்துவத்தை எதிர்த்து அழிக்க வேண்டிய அவசியத்தை ஏற்காத மணியரசன் கும்பல், ஆரியத்தை எதிர்க்கப் போகிறதாம்! என்னேவொரு பித்தலாட்டம்! வருணாசிரமத்தையும் பாரதீயத்தையும் தாங்கிப் பிடித்த பாரதியை முற்போக்குக் கவிஞராகத் துதிபாடிக் கொண்டும், இந்துத்துவ தேசிய நாயகன் ராமனை தமிழ்க் கடவுளாகச் சித்தரித்துக் கொண்டுமுள்ள பார்ப்பன - பாசிச பாதந்தாங்கி மணியரசன் கும்பல், ஆரியப் பகை முடிக்கக் கிளம்பிவிட்டதாம்! நம்புங்கள்!

ஆரிய-பார்ப்பனியத்துக்குப் பல்லக்குத் தூக்கும் கருணாநிதி, ஜெயலலிதா, வைகோ, ராமதாசு முதலான ஓட்டுப் பொறுக்கிகள் ஒருபுறமிருக்கட்டும். இந்த ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்கு வெளியே, தமிழின விடுதலைக்குப் போராடுவதாகக் காட்டிக் கொள்ளும் 'அய்யா' நெடுமாறன், இந்திய மேலாதிக்கத்தை விசுவாசத்தோடு ஆதரித்து நிற்கிறார். ஆர்.எஸ்.எஸ். அரைடவுசர் அண்ணாச்சி பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு விருது கொடுத்துத் துதிபாடுகிறார். ''இலங்கையில் மடிவது இந்துக்களே. எனவே, இந்தியா உதவி செய்ய வேண்டும்'' என்று கோருகிறார். கடந்த 9.7.09 அன்று சென்னையில் ஆர்.எஸ்.எஸ்.இன் கிளை அமைப்பான விவேகானந்தா



**தமிழ்த் தேசிய சிறப்பு மாநாடு: மணியரசன் கம்பெனி வழங்கிய புத்தம் புதிய திரைப்படம்.**



படிப்பகம்

www.padippakam.com

நல்லோர் வட்டத்தின் சார்பில் நடந்த விழாவில், தியாகி முத்துக்குமாரின் நினைவுப் படத்தைத் திறந்து வைக்கிறார். அவருக்குப் போட்டியாக, ''புலிகளை ஆதரிப்பது கோட்சே என்றாலும், அவரை நான் ஆதரிப்பேன்'' என்று சூளுரைக்கிறார், திரைப்பட இயக்குநர் சீமான்.

இப்படி இவர்கள் வெளிப்படையாகவே ஆரிய-பார்ப்பன-இந்துத்துவத்தையும் இந்திய மேலாதிக்கத்தையும் ஆதரித்து நின்ற போதிலும், புலித் துதிபாடிகள் என்பதால் இவர்களைப் பின்வாயால் கூட விமர்சிக்காமல் இணக்கமாக நடந்து கொள்ளும் மணியரசன் கும்பலுக்கு, ஆரிய-பார்ப்பனியத்தை வீழ்த்தப் போவதாகவும் தமிழ்த் தேசக் குடியரசைக் கட்டியமைக்கப் போவதாகவும் சவடால் அடிக்க ஏதாவது யோக்கியதை இருக்கிறதா? இந்த லட்சணத்தில் இப்பித்தலாட்டக் கும்பல் ஒரு மாநாடு நடத்தினால் எப்படியிருக்கும்?

•••

''நான்காம் ஈழப்போரில், சிங்கள இராணுவத்துக்கு எதிராக பிரபாகரன் ஏன் முழுப்போர் நடத்தாமல், தற்காப்புத் தாக்குதலை நடத்துகிறார்? அவரது இந்த அணுகுமுறையில் பலவகையான அரசியல் மற்றும் படைத்துறை உத்திகள் பொதிந்துள்ளன. சிங்களப் படையினரைக் களைப்படையச் செய்வது; எதிரியை வன்னிக் காட்டுக்குள் இழுத்துச் சுற்றி வளைத்துத் தாக்குவது என்ற உத்தியுடன் இப்போது முழுப் படை வலிமையும் சமரில் புலிகள் இறக்கிவிடவில்லை... கவலைப்படத் தேவையில்லை. களநிலைமைகள் வலுவாக இருக்கின்றன... புலிகள் இப்போது முன்னேறிச் செல்லும் நிலையில் உள்ளனர்... புதிய புதிய போர் முறைகளில் புலிகள் சண்டையிடுகின்றனர்...'' என்றெல்லாம் தமிழர் கண்ணோட்டம் பத்திரிகையில் எழுதியும் பொதுக்கூட்டங்களில் பேசியும் வந்த மணியரசன் கும்பல், இப்போது ஈழத் தமிழின அழிப்புப் போருக்குப் பிறகு புலிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று ஏதோ மிகப் பெரிய ஆய்வு செய்து கண்டறிந்ததைப் போல நாக்கைச் சுழற்றிப் பேசுகிறது.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து புலிகள் அடுத்தடுத்து பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும், அவற்றையெல்லாம் பரிசீலனை செய்யாமல் மூடி மறைத்து, ஏதோ மிகப் பெரிய தாக்குதலுக்காகப் புலிகள் பதுங்குவதாகவும், புதிய உத்திகளுடன் போரிடுவதாகவும் கதையளந்துவிட்டு, இப்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கதைக்கிறது.




தமிழின உணர்வூட்டப் புதிய உத்தி: சினிமாப் பாடலுக்கு பள்ளி மாணவ - மாணவிகளின் நடனம்.

இந்தப் பித்தலாட்டத்தை மறைக்க, ஈழத் தமிழினத்தையும் புலிகளையும் அழிக்க 2005-ஆம் ஆண்டில் நார்வேயில் 20 நாடுகள் கூடி பீக்கான் (beacon) திட்டம் என்ற பெயரில் சதி செய்ததாகவும், இதை புலிகள் நன்கறிந்திருந்தால், தற்காப்புச் சமர் புரிந்து கொண்டே பின்வாங்குவது என்ற உத்தியுடன் செயல்பட்டதாகவும், பீக்கான் திட்டத்தின் நோக்கத்தை முழுமையாகச் செயல்படுத்த விடாமல், மூன்றரை இலட்சம் மக்களை ஏழு மாதங்களாகப் பாதுகாத்து, பின்வாங்கிக் கொண்டே போரிட்டு, முக்கியத் தளபதிகள் தலைமறைவாகி விட்டதாகவும், புலிகள் வீழவில்லை; அவர்கள் மீண்டும் தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுப்பார்கள் என்றும் செந்தமிழனார் தமிழர் கண்ணோட்டத்தில் கதையளக்கிறார். இந்த ரீல் சுற்றும் வேலைக்கு அதிமேதாவித்தனமாக களம், காலம், போர்உத்தி,

## பில்டிங் ஸ்ட்ராங்குதான்... பேஸ்மெண்ட்டுதான் வீக்கு!

• சென்றமுறை திருச்சியில் பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றிய கூட்டத்துக்கு சேகுவேரா படம் போட்ட டி-சர்ட், பனியன் அணிந்து வந்த ஈழ ஆதரவாளர்கள், தற்போது த.தே.பொ.க. மாநாட்டுக்கு வரும்போது அவற்றைக் கிழித்தெறிந்து விட்டார்கள்! காரணம், 'சோசலிச' கியூபா ஈழத்தை ஆதரிக்கவில்லையாம். ராஜபக்சேவுக்கு ஆதரவாக ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் சீனாவுடன் சேர்ந்து வாக்களித்ததால் இந்த முடிவாம்! தற்போது இவர்கள் பிரபாகரன், முத்துக்குமார் படம் போட்ட டி-சர்ட், பனியன் அணிந்து கொண்டு வந்தனர்.

• புத்தகக் கடைகள் ஏராளமாக இருந்தபோதிலும், அங்கு புத்தகம் வாங்கியோரைவிட, பிரபாகரனின் விதவிதமான படங்களை வாங்குவதிலும், செல்போனில் படத்தை டவுன்லோடு செய்வதிலும்தான் மாநாட்டுக்கு வந்தவர்கள் ஆர்வம் காட்டினர்.

• மதிய உணவு இடைவேளை கூட அறிவிக்காமல் தொடர்ச்சியாக நிகழ்ச்சியை நடத்தினர். ஈழம் பற்றிய நாடகம், கலை நிகழ்ச்சிகள் அந்த நேரத்தில் நடைபெற்றது. 'புனிதமான' சினிமா உலகின் திரைப்பட உதவி இயக்குனர்கள் வீர வசனத்தோடு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். பள்ளி மாணவர்கள் ''சங்கே முழங்கு'' மற்றும் பிற 'தமிழின உணர்வூட்டும்' பழைய சினிமாப் பாடல்களுக்கு நடனம் ஆடினர்.

• ''ஈழ மக்களின் துயரத்தை விட மதிய உணவு நமக்கு முக்கியமானதா?'' என்று கேள்வி எழுப்பி, முனைவர் செயராமன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். மறுபுறம் பந்தி தனியாக நடந்து கொண்டிருந்தது.

• அமரந்தா பேசும்போது, இல்லையில்லை, காகிதத்தை வைத்துப் படிக்கும்போது கூட்டம் கொட்டாவி விட்டது. இதைச் சகிக்க முடியாமல், இடையே குறுக்கிட்ட கி.வெங்கட்ராமன், அமரந்தா பேச்சின் ஆழத்தையும் அவசியத்தையும் விளக்கி தனியே ஒரு வகுப்பெடுத்தார். அதன் பிறகு அமரந்தா படிக்க, கொட்டாவி விடாமலேயே கூட்டம் மெதுவாக கரையத் தொடங்கியது.

• ''தமிழ்த் தேசியத்தின் திசைவழி'' என்ற சிறு நூலை விளம்பரப்படுத்தி அனைவரையும் வாங்குமாறு கோரினர். வாங்கியவர்கள் திக்கும் தெரியாமல் திசையும் புரியாமல் பத்திரமாகப் பையில் வைத்துக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



மாநாட்டில் உரையாற்றும் மணியரசன் (த.தே.பொ.க.), தியாகு (த.தே.வி.இ.), கொளத்தூர் மணி (பெ.தி.க.): தமிழர் ஒருங்கிணைப்பு அமைப்புக் குழுவா? நெல்லிக்காய் மூட்டையா?

சான்றாதாரம் என்றெல்லாம் 'மேக்-அப்' போட்டு மாநாட்டில் அரங்கேற்றினார். ஒப்பனை நன்றாகத்தான் இருந்தது. ஆனால், ஆட்டம்தான் சகிக்கவில்லை.

''புலிகளின் ஆட்சிப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை; பிச்சைக்காரர்கள் இல்லை. கிளிநொச்சியைத் தலைநகராகக் கொண்டு புலிகள் அரசமைத்த பகுதியில் கோக்-பெப்சி இல்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக பிரபாகரன் ஆட்சி இருந்ததால்தான் அமெரிக்கா - நார்வே - இந்தியா - சீனா உள்ளிட்ட 20 நாடுகள் சதித்திட்டம் தீட்டி ஈழ விடுதலையை நசுக்கினர்'' என்று பரமார்த்த குருவின் சீடர்களையே விஞ்சும் வகையில் ஒரு புதுக்காரணத்தை அவிழ்த்து விட்டார் ம.செந்தமிழன்.

தாங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாக, புலிகள் எங்கேயும் எழுதியதோ, பேசியதோ கிடையாது. எந்த ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து எந்தப் போராட்டமும் நடத்தியது கிடையாது. அப்படியிருக்க, செந்தமிழன் கனவு ஏதும் கண்டாரோ? ஒருவேளை, கோக்கும் பெப்சியும் இல்லாததுதான் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான அடையாளமோ?

''தலைவர் பிரபாகரன் இந்தியாவை நோக்கி நட்புக் கரம் நீட்டினார். ஊடகங்கள் வழியாக விடுதலைப் புலிகளின் இந்திய ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்'' என்று சூன் மாத தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டம் இதழில் மணியரசன் எழுதியுள்ளார். அதே கட்டுரையில் இந்தியாவை, 'தில்லி ஏகாதிபத்திய ஆட்சி' என்றும் குறிப்பிடுகிறார். இத்தகைய 'ஏகாதிபத்திய' இந்தியா, ''தமிழீழ அரசு அமைய உதவி செய்தால், இந்தியப் பெருங்கடலில் அது இந்தியாவின் காவல் அரணாக விளங்கும் என்றார் பிரபாகரன்'' (த.தே.த.க., சூன் 2009) என அக்கட்டுரையில் பிரபாகரனின் இந்திய விசுவாசத்தை விளக்கியுமுள்ளார்.

ஆனாலும் செந்தமிழனார், விடுதலைப் புலிகள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றதாகக் கூசாமல் புளுகுகிறார். ஒருவேளை செந்தமிழனார் பார்வையில் இந்திய மேலாதிக்கத்துக்கு விசுவாசமாகவும் அடியாளாகவும் இருப்பதுதான் ஏகாதிபத்திய எதிர்ப்பா? அல்லது, இப்படியெல்லாம் வலிந்து இட்டுக் கட்டி புலித் துதிபாடினால், கூட்டத்தினரிடம் கைத்தட்டல் பெறலாம் என அவர் கணக்குப் போட்டிருப்பாரோ? தெரியவில்லை.

தியாகு, கொளத்தூர் மணி, மணியரசன் ஆகியோர் தமிழ்த் தேசியத்துக்காகவும் ஈழ விடுதலைக்காகவும் ஒன்றிணைந்து நிற்பதுபோல ஒரு தோற்றம் இருந்த நிலையில், அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; இது வெறும் நெல்லிக்காய் மூட்டைதான் என்பதைத் தனது உரையின் மூலம் அவிழ்த்துக் கொட்டினார், பெரியார் தி.க.வின் கொளத்தூர் மணி. ''தமிழ்த் தேசம் அமைப்பதில் கருத்து வேறுபாடு இல்லை; ஆனால், எதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. இன்று தமிழ்த்தேசம் பேசுபவர்கள் இந்துத்துவப் பண்பாட்டையே புகுத்துகின்றனர். வெறுமனே தமிழ்த் தேசம் பேசுபவர்களை நம்பிப் பயன் இல்லை. இந்துத்துவத்தையும் பார்ப்பனியத்தையும் ஒழிப்பதுதான் முதன்மையானது'' என்று இலக்கின்றி மாநாடு நடத்தும் மணியரசன் கும்பலை இடித்துரைத்தார். நடப்பது தமிழ்த் தேசிய ஆதரவு மாநாடுதானா என்று புரியாமல் பார்வையாளர்கள் குழம்பிப் போனார்கள்.

மணியரசனார் மாநாடு நடத்திய அதேநாளில், அதே திருச்சி நகரில், அகதி முகாம்களில் வதைபடும் ஈழத் தமிழ் இந்துக்களைப் பாதுகாக்கக் கோரி, இந்து முன்னணியின் ராம.கோபாலன் கும்பல் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தது. அந்த இந்துவெறி கும்பலை மாநாட்டுக்கு அழைத்திருந்தால் தமிழ்த்தேசியத்துக்கு வலுவான ஆதரவு கிடைத்திருக்கும். மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இந்த அரிய வாய்ப்பைத் தவற விட்டுவிட்டார்கள்.

''தத்துவம் என்பது போர்வாள்; அது முனை மழுங்கினால் வாளை மாற்ற வேண்டும். தத்துவம் நமக்கு உதவவில்லை என்றால், அதை ஒதுக்கி வைக்க வேண்டும். மார்க்சியம், பெரியாரியம், தலித்தியம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் அனைத்தும் நமது கடமைக்கு உதவாதபோது, அவற்றைத் தூக்கியெறிய வேண்டும்'' என்று இம்மாநாட்டில் மணியரசன் சாமியாடியதைப் பார்த்து பார்வையாளர்கள் பயந்து விட்டனர். 'வரலாறு காணாத அளவுக்கு' ஏறத்தாழ 1000 பேர் மாநாட்டுக்குத் திரண்டு வந்ததால், அவருக்கு இப்படியொரு ஆவேசம் வந்து விட்டது போலும்!

எந்தத் தத்துவமும் கோட்பாடும் வேண்டாம் என்றால், மணியரசனார் கூறும் திசைவழி என்ன? இதைத்தான் அண்ணாயிசம் என்றார், பாசிச எம்.ஜி.ஆர். தனது பிழைப்புவாதத்தை வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு, கேப்பிடலிசம் - சோசலிசம் - கம்யூனிசம் எல்லாம் சேர்ந்த கலவைதான் அண்ணாயிசம் என்றும், அதுதான் வழிகாட்டும் தத்துவம் என்றும் விளக்கினார். மணியரசனாரோ, இப்படியெல்



படிப்பகம்

www.padippakam.com

லாம் மூடி மறைக்கத் தேவையில்லை என்று ஒரே போடாகப் போடுகிறார். ஒருவேளை, இதுதான் மணியரசனிசமோ?

மார்க்சியம் வேண்டாம்; பொதுவுடமைக் கோட்பாடும் வேண்டாம் என்றால், எதற்காக மணியரசனார் தமது கட்சியின் பெயரில் பொதுவுடமை என்ற சொல்லைச் சேர்க்க வேண்டும்? மணியரசனாரின் புரவலர்கள்கூட பொதுவுடமையை எதிர்ப்பவர்களாயிற்றே! தாங்களும் ஏதோ தத்துவத்தை - கோட்பாட்டை வழி காட்டியாகக் கொண்டுள்ளவர்கள் போலக் காட்டிக் கொள்ள, அந்தக் காலத்தில் கவுரவத்துக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்தச் சொல்லையும் கட்சியின் பெயரிலிருந்து கடாசி எறிந்து விட்டால், மணியரசனிசம் முழுமை பெற்று விடும்.

**- திருச்சி பு.ஜ. செய்தியாளர்கள் உதவியுடன் பாலன்.**

# தொடரும் கொத்தடிமைக் கொடூரம் அரசின் பாராமுகம்!

**ஓ**ய்வின்றிக் கட்டாய வேலை; சம்பளம் கிடையாது; சம்பளம் கேட்டால் சவுக்கடி; நோய்வாய்ப்பட்டாலும் விடுப்போ, மருத்துவமோ கிடையாது; இக்கொடுமையிலிருந்து தப்பியோட முயற்சித்தால், பிடித்து வந்து கட்டி வைத்து பெல்ட்டாலும் கேபிள் ஒயராலும் நாள் முழுக்க அடித்து வதைக்கும் கொடூரம்; ரூ. 5,000 முன்பணம் பெற்றுக் கொண்டு பிழைப்புக்காக இங்கு வேலைக்கு வந்த கூலி ஏழைகள், இங்கு நடக்கும் கொடுமைகளைப் பற்றி வெளியில் முணுமுணுக்கக்கூட முடியாது. போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் துணையோடும், குண்டர்களின் பாதுகாப்போடும் இத்தகைய கொத்தடிமைக் கூடாரத்தை கரூர் மாவட்டம் அரவாக்குறிச்சி வட்டத்திலுள்ள தலைப்பட்டி கிராமத்தில் நடத்தி வந்தான், மணி என்ற கொடுங்கோல் முதலாளி. டாடா கிரஷர் என்ற பெயரிலுள்ள கல்குவாரிதான் இவன் நடத்தி வந்த கொத்தடிமைக் கூடாரம்.

துறையூரை அடுத்துள்ள கிராமங்களைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்டோர் இங்கு எட்டாண்டுகளுக்கும் மேலாகக் கொத்தடிமைகளாக வதைபட்டனர். இவர்கள் தவிர, சேலம், தம்மம்பட்டி, ஆத்தூர் முதலான பகுதிகளிலிருந்தும் இங்கு வேலைக்குச் சேர்ந்து பல ஆண்டுகளாகப் பலர் கொத்தடிமைகளாக உழன்றனர். கடந்த ஜூன் 5-ஆம் தேதியன்று வதையின் கொடுமை தாளாமல், இரவோடு இரவாக ஆண்களும் பெண்களுமாக 14 பேர் இக்கொத்தடிமைக் கூடாரத்திலிருந்து இரகசியமாகத் தப்பித்து, துறையூருக்கு வந்தனர். கல்குவாரி முதலாளியின் அடியாட்கள் கிராமத்துக்குத் தேடி வந்து அடித்து இழுத்துச் சென்று விடுவார்களோ என்று அஞ்சிய அவர்கள், இப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணியிடம் முறையிட்டனர். உடனடியாகக் களத்தில் இறங்கிய வி.வி.மு.; தனது தோழமை அமைப்புகளான மனித உரிமை பாதுகாப்பு மையம், ம.க.இ.க., ஆகியவற்றின் உதவியோடு, கொத்தடிமைக் கூடாரத்திலிருந்து தப்பி வந்தவர்களை, முழக்கமிட்டபடியே ஊர்வலமாக திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு 10.07.09 அன்று அழைத்துச் சென்றது.

''தலைப்பட்டி கொத்தடிமைக் கூடாரத்தை இழுத்து மூடி, அங்குள்ள ஏழைகளை மீட்டு, டாடா கிரஷர் முதலாளி உள்ளிட்டு அடியாள் கும்பலைக் கைது செய்து தண்டிக்க வேண்டும்; மீண்டு வந்தவர்களுக்கு உரிய பாதுகாப்பும் நிவாரண உதவியும் தரவேண்டும்; எட்டாண்டுகாலக் கொத்தடிமை உழைப்புக்கான நியாயமான கூலியையும், ஏழைகளின் நிலப் பத்திரங்களையும் முதலாளியிடமிருந்து மீட்டுத் தரவேண்டும்; அரசு நிர்ணயித்த கொத்தடிமைகளுக்கான இழப்பீடு தொகையை வழங்க வேண்டும்'' முதலான கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுவை தப்பிவந்த ஏழைகள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர். மாவட்ட ஆட்சியர் சவுண்டையா, உடனடியாக இவர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்ததோடு, அரிசி, உடைகள், சமையல் பாத்திரங்கள் முதலானவற்றையும் அளித்து, அதிகாரிகள் மூலம் பாதுகாப்பாக அவர்களது கிராமங்களுக்கு அனுப்பி வைத்தார்.

முன் கூட்டியே ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டதால், அனைத்துப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் இதனைச் செய்தியாக வெளியிட்டன.

இதைத் தொடர்ந்து சில பத்திரிகையாளர்கள், இக்கொத்தடிமைக் கூடாரத்துக்குச் சென்று விசாரிக்கத் தொடங்கியதும், அரண்டுபோன முதலாளி அங்கு வேலை செய்து வந்த அனைவரையும் அவர்களது ஊருக்கு அனுப்பிவிட்டான். இருப்பினும் மீட்கப்பட்ட கொத்தடிமைகளிடம் விசாரணை செய்து கொடுங்கோலர்களைத் தண்டிக்கவும், துவண்டு கிடக்கும் ஏழைகளுக்கு மறுவாழ்வளிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்காமல், அதிகார வர்க்கமும் போலீசும் இன்னமும் தட்டிக் கழித்து இழுத்தடித்து வருகின்றன. இதை அம்பலப்படுத்தி கரூர், முசிறி, துறையூர் வட்டாரமெங்கும் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்ட வி.வி.மு., அடுத்த கட்டப் போராட்டத்துக்கு பாதிக்கப்பட்டோரையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி வருகிறது.

— பு.ஜ.செய்தியாளர்.

கொத்தடிமைத்தனத்தில் இருந்து தப்பி வந்த தொழிலாளர்கள், வி.வி.மு. - ம.க.இ.க. - ம.உ.பா.மை. - ஆகிய அமைப்புகளின் தலைமையில், திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கச் சென்றபொழுது.....






படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: விவசாயத்தை ஆக்கிரமிக்கும் இந்தியாவின் நரித்தனம்!

## "பசுமைப் புரட்சி" என்ற பெயரில் இந்திய விவசாயத்தை நாசமாக்கிய எம்.எஸ்.சுவாமிநாதன், ஈழத்தைக் குறி வைக்கிறார்!

இருபதாயிரம் மக்களுக்கும் மேற்பட்டோரைத் துடிதுடிக்கக் கொன்றொழித்து, ஈழப்போரை துயரமான முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது, சிங்கள இனவெறி அரசு. இந்த இன அழிப்புப் போரின் பங்குதாரர்களாக இலங்கை அரசுடன் இந்தியாவும் சீனாவும் கைகோர்த்திருந்தன. புவியியல் ரீதியாக இராணுவ, பொருளாதார முக்கியத்துவமுடையதாக இலங்கை இருப்பதால் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதற்குப் போட்டியாக உருவெடுத்து வரும் சீனாவும் அங்கு தமது மேலாதிக்கத்தை நிறுவும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. இந்திய அரசும் தன் பங்கிற்கு போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழப்பிரதேசத்தில் தன் மேலாதிக்கத்தைத் தக்க வைக்கும் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. போரின் பிடியில் சிக்கியிருந்த வடக்கு பகுதிகளின் மறுகட்டமைப்புக்கு 'வடக்கின் வசந்தம்' எனக் கவர்ச்சியான பெயரைச் சூட்டி இருக்கும் இலங்கை இனவாத அரசு, தனக்கு உதவிகள் சீனாவிலிருந்து வந்தாலும் இந்தியாவிலிருந்து வந்தாலும் ஏற்றுக்கொண்டு அந்நாடுகள் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படும் நிலையில் உள்ளது.

விவசாய நிபுணரும், 'பசுமைப் புரட்சி' மூலம் இந்திய விவசாயிகளை ஓட்டாண்டி ஆக்கியவருமான எம்.எஸ்.சுவாமிநாதன் ஈழத் தமிழர் சிந்திய ரத்தம் உலரும் முன்னரே இலங்கைக்குப் பறந்து சென்று வன்னி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளின் விவசாய மறுசீரமைப்புக்கான திட்டத்தை முன்மொழிந்து வந்திருக்கிறார்.

அரசு நிறுவியுள்ள அகதிகள் முகாம்களில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அடைபட்டுள்ளனர். இவர்களில் இளைஞர்களைத் தனியே பிரித்து வதைமுகாம்களுக்கு அனுப்பிவிட்டு, எஞ்சி இருக்கும் பெண்கள் அனைவருக்கும் பயிற்சி அளித்து வன்னி, மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் இருக்கும் 3 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்களை இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்கும் தேவையான உணவு தானியங்களைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்யும் திட்டத்தை சுவாமிநாதன் தீட்டியிருக்கிறார். தற்போது முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள வன்னிப்பெருநிலப்பரப்பின் மக்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விவசாயம் செய்து பெற்ற பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ளவர்கள்தான். இவர்களால் அப்பகுதியில் 1 லட்சம் ஹெக்டேரில் நெல்லும், 2 லட்சம் ஹெக்டேரில் பாசிப்பயிறு, மிளகாய், எள், தேங்காய், சேனைக்கிழங்கு போன்ற விளைபொருட்களும் போருக்கு முன்புவரை உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. இம்முகாம்களிலிருக்கும் பெண்களுக்கு மண்புழு வளர்த்தல், இயற்கை எரு தயாரித்தல், ஊடுபயிராக நைட்ரஜன் சத்தைத் தக்கவைக்கும் அகத்தி பயிரிடல் போன்றவற்றை சுவாமிநாதனின் ஆராய்ச்சி நிறுவனம் கற்றுத் தரப்போகிறதாம். அங்குள்ள மண்ணின் தன்மையை ஆய்வு செய்ய நடமாடும் மண்பரிசோதனைக் கூடங்களும், ஒவ்வொரு விவசாயிக்கும் மண்பரிசோதனை அடையாள அட்டையும் வழங்கப்பட்டு மண்ணின் தன்மைக்கேற்ற நீர்ப்பாய்ச்சலளவு வரையறுக்கப்படுமாம்.

இதன்படி,சுவாமிநாதனின் ஆராய்ச்சி நிறுவனம், விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றியும் அங்குள்ள 2300 கண்மாய்களையும் 50 நடுத்தர மற்றும் 11 பெரும் குளங்களையும் சீரமைத்தும் இப்பெண்களைக் கொண்டு போய் வடக்குப் பிரதேசத்தில் குடியமர்த்தி, தாம் திட்டமிட்டுள்ள இந்தியாவிற்குத் தேவையான விளைபொருட்களைப் பயிர் செய்யும். விவசாயத்தை, வரும் விதைப்புக் காலமான அக்டோபரில் நடைமுறைப்படுத்தும். வன்னிப்பெருநிலப்பரப்பில் போருக்கு முந்தைய உணவு உற்பத்தி மட்டும் 8 லட்சம் டன்களாகும். இதைத் தவிர தலா 10 செண்டுகள் கொண்ட வீட்டுத் தோட்டங்கள் மூலமும், கணிசமான தோட்டப் பயிர் விளைச்சலும், கால்நடை விளைபொருட்களும் இத்திட்டத்தின் இலக்கில் வருவன.



**சிங்கள இனவெறி பாசிஸ்டு ராஜபக்சேவுடன் இந்திய விவசாயத்தை நாசமாக்கிய வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன்.**

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலையும் சுவாமிநாதனின் நிறுவனம் விட்டுவைக்கவில்லை. மீன்பிடித் தொழிலை இந்திய நலனுக்கேற்ற வகையில் மாற்றியமைக்கும் வகையில் பயிற்சி தரும் மையம் ஒன்றையும் அது நிறுவ உள்ளது. இத்திட்டங்களுக்கெல்லாம் சுமார் ரூ. 500 கோடியை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இத்திட்டங்களைப் பற்றி ''இந்து'' நாளேட்டில் விளக்கமளித்திருக்கும் சுவாமிநாதன், ''போர் இப்போது முடிந்திருக்கிறது. வடக்குப் பிரதேசத்தின் பொருளாதாரப் போராட்டம் இப்போதுதான் தொடங்கியுள்ளது'' என்றும், ''மக்கள் விரும்பியது சமாதானத்தையும், உணவையும்தான்'' என்றும் சொல்லியுள்ளார். அதாவது ரேடார்களையும், எரிகுண்டுகளையும் வழங்கி இருபதாயிரம் பேரை அழித்து சமாதானத்தை(!) நிறுவிய இந்தியா, இப்போது அவர்களுக்கு உணவை 'வடக்கின் வசந்தம்' ஊடாக வழங்கப் போகிறது.

ஈழமக்களின் உணவு குறித்து சுவாமிநாதனுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?

இதனைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், விவசாயத்தில் இன்றைக்கு உலகளாவிய அளவில் ஏற்பட்டு வரும் உலகமயத் தாக்கத்தைக் காணவேண்டும். உற்பத்தித் தொழிலிலும் கணிப்பொறித் துறையிலும் தேசங்கடந்த உழைப்பை ''அவுட் சோர்சிங்'' மூலம் உறிஞ்சிவரும் ஏகாதிபத்தியம், இன்று விவசாயத்தையும் நாடுகடத்தும் திட்டத்தில் நுழைந்துள்ளது. அண்மையில் தென்கொரிய டேவூ நிறுவனம், மடகாஸ்கர் நாட்டின் பாதி விவசாய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து தனது நாட்டின் உணவுத் தேவையை ஈடுகட்ட ஒப்பந்தம் போட்டிருக்கிறது. இதே போன்று சீனா, கொரியா, ஜப்பான் மற்றும் அரபு நாடுகளும் பிற மூன்றாம் உலக நாடுகளின் விவசாய நிலங்களை வாங்கிக் குவிக்கின்றன. இந்திய நிறுவனங்கள் மடகாஸ்கரில் நெல், கோதுமை மற்றும் பயறு வகைகளையும், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் எண்ணெய் வித்து மற்றும் பயறு வகைகளையும் உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றன. சீனா தன் வருங்கால விவசாயத் தேவைகளை காங்கோ, சூடான், சோமாலியா, தென் அமெரிக்க நாடுகள், ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் அவுட்சோர்சிங் செய்ய உள்ளது.

சுவாமிநாதனே தனது ''இந்து'' கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல வியட்நாமும், கம்போடியாவும் விவசாயத்தில் காலனி நாடுகளாக்கப்பட்டுள்ளன. விவசாயத்தில் அவுட்சோர்சிங் தான் 'வடக்கின் வசந்தம்' எனும் பேரால் இலங்கையின் வடக்குப் பகுதியை இந்தியாவின் காலனியாக்கப் போகிறது. ஈழமக்களைக் கொன்றொழித்து, அவர்களின் விடுதலைப் போரைக் கருவறுத்த இந்தியா, அம்மக்களின் பொருளாதார சுதந்திரத்தைத் தன் காலடிக்குக் கொண்டுவரப் போகிறது.

ஈழத்தில் விவசாயத்தை ஏற்கெனவே போர் அழித்து விட்டது. போரில்லாத மற்ற நாடுகளிலோ உலகமயமானது விவசாயத்தை விவசாயிகளிடம் இருந்தே பறித்து விட்டது. இப்போது அவர்களிடமிருந்து நிலத்தைக் கைமாற்றி விட்டு அவற்றைப் பன்னாட்டு நிறுவனங்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைக்கும் பல நுணுக்கமான திட்டங்களுடன் பல ஆய்வு நிறுவனங்களும் செயலில் இறங்கி உள்ளன. இந்திய விவசாயிகளின் பாரம்பரிய நெல் ரகங்களை ராக்பெல்லர்/போர்டு பவுண்டேசனுக்குத் திருடிச் சென்று, இந்திய விவசாயிகளின் வாழ்வைச் சீரழித்த மக்கள்விரோதியான சுவாமிநாதன், இப்போது போரின் கொடுமைகளால் குறுக்கொடிந்து போய்க்கிடக்கும் ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தையும் பறித்தெடுக்கும் சதியுடன் இந்திய-இலங்கை அரசுகளின் ஆசிபெற்று ''ஒவ்வொரு பேரழிவும் வளர்ச்சிக்கானதொரு வாய்ப்பை அளிக்கிறது!'' என்று அறிவித்தபடி ஈழத்தின் உள்ளே நுழைந்திருக்கிறார்.



போருக்கு முந்தைய வன்னிப் பகுதியில் நடந்த பாரம்பரிய விவசாயம்: குப்புறத் தள்ளியது சிங்கள இனவெறிப் போர்; குழிபறிக்க வருகிறது இந்திய மேலாதிக்கம்.

ஈழத்தின் மீதான் இந்திய மேலாதிக்கத்தின் பகுதியான இதனைப் புரிந்துகொள்ளத் தவறும் இனவாதிகளோ, சுவாமிநாதன் பார்ப்பான் என்றும், சிலகோடிகளுக்காக தமிழ்ப்பெண்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி வதைக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும், ஆண்களை சித்திரவதை முகாம்களில் அடைத்து வைத்து பெண்களின் மானத்தோடு விளையாடும் பார்ப்பனிய சதி இது என்றும் சொல்லி சுவாமிநாதனை, பார்ப்பனர் என்பதால் மட்டும் எதிர்க்கின்றனர். இவர்கள் நினைப்பது போல எம்.எஸ்.சுவாமிநாதன் ஒரு தனிநபர் அல்ல. இந்தியத் தரகு முதலாளிகளின் நலன்களும் இந்திய அரசின் மேலாதிக்கமும் பின்னிப் பிணைந்திருப்பதுதான் இந்தக் கிழட்டுப்பார்ப்பன ஓநாயின் ஆய்வு நிறுவனம். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அரசு நிலத்தை இந்த நிறுவனத்துக்கு அரசு தாரைவார்த்திருப்பதும், சுவாமிநாதனை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக்கி இருப்பதும் தற்செயலானவை அல்ல.

இனவாதிகளாவது இதனைப் பார்ப்பனியம் எனக் குறுக்கிப் பார்க்கிறார்கள். ஆனால் 'தமிழர் தலைவர்' வீரமணியோ ''விவசாயம் பாவகரமானது என்பதுதானே மனுநீதி! பரம்பரையாக ஏர்பிடிக்காத இனத்திலிருந்து விவசாய நிபுணர்கள் வருவது விளம்பர வெளிச்சத்தால் தொடரும் வித்தைகள்'' என்றும், ''பார்ப்பனர்கள் எந்த ஆட்சி வந்தாலும் நிரந்தரச் செல்வாக்குடன் இருக்கிறார்கள் பாருங்கள்'' என்றும் அறிக்கை விட்டு சுவாமிநாதனை அறிமுகம் செய்கிறார். ஈழ விவசாயம் இந்தியாவுக்குத் திறந்துவிடப்படும்போது, அதில் பார்ப்பான் பலனடைகிறானே என்ற வயிற்றெரிச்சலைத் தவிர, இதில் வேறு எந்த வெங்காயமும் இல்லை. ஒருவேளை, நாளை ஈழத்தில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் கல்வி வியாபாரம் நடத்தலாம் எனும் வாய்ப்பு வரும்சூழலில், ஈழத் தமிழர்களின் கல்வியை மேம்படுத்தக்கூட இந்த 'தமிழர் தலைவர்' மனக்கணக்கு போட்டிருக்கக் கூடும். அதனால்தான் சுவாமிநாதனைக் கூட 'தமிழர் தலைவர்' கடுமையாகச் சாடவில்லை.

செருப்புக்கேத்தபடி காலைவெட்ட முடியாது. அதைப் போலவே தாங்கள் வைத்திருக்கும் பார்ப்பன எதிர்ப்பு எனும் ஒரே வட்டத்துக்குள் சுவாமிநாதனின் 'ஈழ விவசாயப் புரட்சியை' அடைக்கப் பார்ப்பதன் மூலம் இந்தியாவின் ஆதிக்கத்துக்குத் துணைபோகின்றனர், தமிழினவாதிகள். ஒருவேளை 'வடக்கின் வசந்தம்' திட்டத்தை நிறைவேற்றும் இடத்தில் சுவாமிநாதன் எனும் பார்ப்பானுக்குப் பதிலாக சூத்திரன் ஒருவன் இருந்திருந்தால் எனும் கேள்வியில் இவர்களின் சாயம் வெளுத்துவிடும்.

● செங்கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# கோயபல்சை விஞ்சிய "இந்து" என்.ராம்.

**ஈழத் தமிழ் அகதி வதை முகாம்களைச் சொர்க்கபுரியாகக் காட்ட முயலுகிறார், இந்திய மேலாதிக்கத்தின் ஊதுகுழல் என்.ராம்.**

இரண்டாம் உலகப்போரின்போது, ஹிட்லரின் நாஜிப்படை இலட்சக்கணக்கான யூத இன மக்களை வதைமுகாம்களில் மிருகங்களைப் போல அடைத்து சித்திரவதை செய்து கொன்றது. அவ்வதை முகாம்களுக்குச் சற்றும் குறைவில்லாத வகையில், ஈழத்தின் வன்னிப் பெருநிலப்பரப்பில் ராஜபக்சே வின் இனவெறி அரசு, தமிழர்களை முகாம்களில் அடைத்து வதைத்துக் கொன்று கொண்டிருக்கிறது.

ஈழ இன அழிப்புப் போரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இலங்கை ராணுவத்தின் பிடிக்குள் வந்த இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வவுனியாக் காட்டுப் பகுதியில் முட்கம்பி வேலியிடப்பட்ட தடுப்பு முகாம்களில் கைதிகளைப் போல அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அம்முகாம்களுக்கு பொன்னம்பலம், ஆனந்த குமாரசாமி, தமிழ்த்துரோகி கதிர்காமர் போன்றோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இம்முகாம்களைப் பார்வையிட ஐ.நா. பணியாளர்களையோ, ஊடகங்களையோ, மனித உரிமை அமைப்புகளையோ அரசு அனுமதிப்பதில்லை அகதிகள் முகாமில் பணியாற்றித் திரும்பிய மருத்துவர்கள், செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், முகாமை பார்வையிட்ட இலங்கை அரசு உயர் அதிகாரிகள் போன்றவர்களின் வாக்குமூலங்களே அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் அவலநிலையைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த சில வாரங்களில் மட்டும் 5000-க்கும் மேற்பட்டோருக்கு அம்மை நோய் தாக்கியிருப்பதாகவும், இலட்சக்கணக்கான மக்களுக்கு மருத்துவம் செய்வதற்கு அங்கு மொத்தமே 50 மருத்துவர்கள்தான் உள்ளனர் என்றும், 300 தாதியர்கள் தேவைப்படுகின்ற இடத்தில் மொத்தமே 5 முதல் 10 பேர் மட்டுமே பணியாற்றி வருவதாகவும், அரசு மருத்துவர் சங்கச் செய்தித் தொடர்பாளரான மருத்துவர் உபுல் குணசேகரா தெரிவித்துள்ளார். அவர்களில் சுமார் 5 ஆயிரம் பேருக்கு மஞ்சள் காமாலை நோய் வந்துள்ளது. ஆனால் அதற்கு சிகிச்சை வசதிகள் இல்லை.

ஐ.நா.வின் ஆயுத மோதல் மற்றும் குழந்தைகள் பிரிவு, பி.பி.சி.யின் சிங்கள வானொலிச் சேவையில் ''அரசு சிறார்களுக்கு சிறப்பு ஊட்டத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும்'' என்று எச்சரித்துள்ளது. முகாம்களில் அடைபட்டுள்ள 5 ஆயிரம் சிறுவர்கள் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது. அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களில் 90 ஆயிரம் பேர் 15 வயதுக்குட்பட்டச் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் இருக்கும் மாணிக் ஃபார்ம் முகாமில் 70 பேருக்கு ஒரு கழிப்பறைதான் உள்ளது. சர்வதேச நெறிமுறைப்படி அது 20 பேருக்கு ஒன்று என இருக்க வேண்டும். தண்ணீர் மூலம் பரவும் தொற்றுநோயான வயிற்றுப் போக்கு பல உயிர்களைப் பறித்துள்ளது.

மாணிக் ஃபார்ம் முகாமைச் சேர்ந்த வயதான தமிழர் ஒருவர் ''இளைஞர்களும் நடுத்தர வயதை எட்டியவர்களும் இங்கு நடத்தப்படும் விதமும், கேட்கச் சகிக்காத வசவுகளும் போர்முனையிலேயே பட்டினி கிடந்தாவது செத்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது'' என்கிறார். இதற்கு முன் வனாந்திரமாக இருந்த இடத்தில் தகரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட முகாம்களில் வெயிலின் உக்கிரம் அதிகமிருப்பதால், கிடைக்கும் இடைவெளிகளில் எல்லோரும் தூங்குகிறார்கள். சிறுகுழந்தைகளை உறங்க வைத்திருக்கும் பெற்றோர்கள் 'சிங்கள ராணுவத்தினர் எவரேனும் பிள்ளைகளைத் தூக்கிச் சென்று விடுவரோ' எனும் பீதியில் தூக்கம் வராது இரவெல்லாம் விழித்திருக்கும் கொடுமை தாங்கமுடியாத ஒன்று. மழை பெய்ய ஆரம்பித்துவிட்டால் அப்பகுதியின் களிமண் தரையில் கால் வைக்கக் கூட முடியாது. கூடவே எக்கச்சக்கமாக பூச்சிகள் கிளம்பி வரும். அது இன்னும் கொடுமையானது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 60 வயது முதியவர் போரில் காணாமல் போன தனது மகளின் குடும்பத்தைத் தேடி முகாம்கள் தோறும் அலைகிறார். வவுனியாவில் இருக்கும் பெரிய காட்டு முகாமில் இராணுவத்தினர் பார்வையாளர்களை அனுமதிப்பதில்லை என்பதால், அவரால் அந்த முகாமிற்குள் சென்று தேடமுடியாது தவிக்கிறார்.

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் முகாமில் நோயினால் சிறுவர்கள் பலியாகிக் கொண்டுள்ளனர். நோயாளிகளுக்குத் தேவையான அளவு மருத்துவர்களில்லை. நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களை ஒவ்வொருவராக அழைத்து மருத்துவ

**என்.ராம் சித்தரிக்கும் சொர்க்கபுரி: அகதி முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றி வதைபடும் ஈழத் தமிழர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com



உணவுக்காகத் தட்டேந்தி மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்கும் ஈழத் தமிழ் குழந்தைகள்.

பரிசோதனை செய்யும்போதும் இராணுவ புல னாய்வுத்துறையைச் சேர்ந்தவர்களும் அவ்விடத் தில் உள்ளனர். நிமோனியாவால் பாதிக்கப் பட்ட இரு சிறுவர்களைப் பரிசோதித்த இரா ணுவ மருத்துவர்கள், அவர்களை மருத்துவம னைக்குக் கொண்டு செல்லத் தேவை இல்லை என முகாமுக்கு திருப்பி அனுப்பினர். முகா மில் அச்சிறுவர்கள் பிணமாயினர்.

வந்தனா சந்திரசேகர் எனும் 28 வயதுப் பெண், 9 மாதக் கர்ப்பிணி. ஏற்கெனவே இவருக்கு 5 பிள்ளைகள். இவர் தண்ணீருக்காக 3 நாட்களாக வரிசையில் காத்திருக்கிறார். நீண்ட நேரம் காத்திருந்த பின்னர், ஒவ்வொரு குடும்பமும் தலா 10 லிட்டர் தண்ணீரைக் குடிக்க, குளிக்க, உடுப்புக் கழுவப் பெற்றுக் கொள்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மணிவண் ணன் அங்கு நடைபெற்ற தாக்குதலால் கால் ஊனமாகி குடும்பத்துடன் ராமேஸ்வரம் - அரிச்சமுனைக்குத் தப்பிவந்துள்ளார். தொற்று நோய்கள் பரவி முகாம்களில் தமிழர்கள் அதிக மான எண்ணிக்கையில் இறந்து வருவதாகவும் வயிற்றோட்டம், வாந்தி, காய்ச்சல் போன்றவற்றால் நூற்றுக்கணக்கான சிறுவர் களும் ஆண்களும் பெண்களும் இறந்துள்ளதாகவும் மணி வண்ணன் தெரிவித்துள்ளார்.

கல்மனம் கொண்டோரையும் உருகிட வைக்கும் மனிதக் கொடுமைகளை அரங்கேற்றிவரும் இந்த வதை முகாம்களுக்கு சிங்கள இனவெறியன் ராஜபக்சே வைத்துள்ள பெயரோ 'நலன் புரி கிராமங்கள்'.

இந்த நலன்புரி கிராமங்களைப் பற்றி, பிரிட்டனில் இருந்து வெளியாகும் டெலிகிராப் பத்திரிக்கை ''மூன்று லட்சம் மக்கள் இலங்கை அரசின் சாவு முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ளார் கள். ஆண்கள் சித்திரவதைக்கு உட்படுகிறார்கள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுகிறார்கள். சிறுவர்கள் மனரீதி யாக பாதிப்புக்கு உட்படுகிறார்கள். உணவு, மருந்து தண்ணீர் இல்லாமல் மக்கள் ஈக்களைப் போல செத்துக் கொண்டிருக் கின்றனர். இளைஞர்களும் சரி, முதியவர்களும் சரி உணவுக் காக சுடும் வெயிலில் காத்திருக்க, இறந்தவர்களின் உடல்களோ வெளியில் போடப்பட்டு அழுகவிடப்பட்டுள்ளன'' என்று எழு தியுள்ளது.

அகதி முகாமில் உள்ள சிறுவர்களைச் சந்தித்து உரையாடும் ராஜபக்சேயின் ஊதுகுழல் இந்து ஆசிரியர் என்.ராம். (இடது ஓரம்).



வவுனியாவில் உள்ள முகாம்களில் ஒவ்வொரு வாரமும் 1400 பேர் இறப்பதாகவும், கடந்த மூன்று மாதங்களில் மூளைக் காய்ச்சலால் மட்டும் 34 பேர் உயிரிழந்திருப்பதாகவும், இந்த வீதத்தில் இறப்பு தொடருமானால் கிட்டத்தட்ட மூன்று ஆண்டு களில் முகாம்களில் மக்களே இல்லாத நிலை ஏற்படும் என்றும் லண்டன் டைம்ஸ் பத்திரிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. அதாவது தினசரி 200 பேர் செத்துக் கொண்டிருக்கின்றனர்.

வதைமுகாம்களின் நிலைமையைப் பற்றிப் பேசும்போது பத்மினி சிதம்பரநாதன் எனும் தமிழ் எம்.பி. இலங்கை நாடா ளுமன்றத்தில் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார். சிங்கள இன வாதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனா கூட ''இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் உறவினர்களைக் கூட சந்திக்க அனு மதிக்கப்படுவதில்லை'' எனக் கண்டித்துள்ளது. ''முட்கம்பி வேலிக்குள் 3 லட்சம் மக்களை அடைத்து வைத்திருப்பது அப்பட்டமான உரிமை மீறல். எமது நாட்டுப் பிரஜைகளான 3 லட்சம் மக்களை எந்த சட்டத்தின் அடிப்படையில் அடைத்து வைத்துள்ளீர்கள்?'' என்றும், ''உடனடியாக அந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுங்கள்'' என்றும் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல பேசியிருக்கிறார்.

இலங்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சரத் நந்தா சில்வா கூட ''அகதி முகாம்களைப் பார்வையிட்டபோது அதிர்ச்சியடைந்தேன். காலைக்கடன்களைக் கழிப்பதற்குக் கூட மக்கள் மணிக்கணக்கில் கியூவில் நிற்கிறார்கள். 5 பேர் மட்டும் இருக்கக் கூடிய கூடாரத்தில் 30-க்கும் அதிகம் பேர் உள்ளனர். கூடாரத்தில் எழுந்து நின்றால், இடுப்பு எலும்பே முறிந்துவிடும்; இந்த மக்களுக்கு நாம் மிகப் பெரும் தீங்கினை இழைத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று கூறி யிருக்கிறார்.

ஆனால் தென்னாசியாவிலேயே பெரிய பத்திரிக்கை என்றும் பாரம்பரியம் மிக்க நம்பத்தகுந்த பத்திரிக்கை என்றும் நடுத்தர வர்க்கத்தாலும் அறிவுஜீவிகளாலும் போற்றப்படும் ''இந்து'' நாளேட்டின் ஆசிரியர் என்.ராம் மட்டும் இந்த அகதி முகாம்களை ''இந்தியாவில் இருக்கும் முகாம்களை விட மேம்பட்டிருக்கிறது'' என்றும், ''சாப்பாட் டுப் பிரச்சினை இல்லை. தண்ணீருக்கும் பிரச்சினை



படிப்பகம்

www.padippakam.com

இல்லை'' என்றும் சொல்லியிருக்கிறார். முட்கம்பி வேலிகளில் மின்சாரத்தைப் பாய்ச்சி மக்களைக் கொல்லாத ராஜபக்சேவின் பெருந்தன்மையைப் பாராட்டுகிறார், இந்த மவுண்ட்ரோடு மகா விஷ்ணு. அங்கு உற்றார்-உறவினர்களையும் சொந்த ஊரையும் விட்டு ஏதிலிகளாகக் கொடும் வலிகளோடு வந்த தமிழர்களை ''வீடுவாசலை விட்டுவிட்டு ஓடிவந்தபோதுகூட, தாங்கள் சேமித்து வைத்த பணத்தையும் தங்க நகைகளையும் எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்'' என்றும் வக்கிரத்தோடு சொல்லியிருக்கிறார்.

''இந்து''ராமின் தனிப்பட்ட குரல் அல்ல இது. இந்திய மேலாதிக்கம், இலங்கை அரசின் செயல்பாட்டுக்கு ராமின் மூலம் தரும் பாராட்டுப் பத்திரம்தான் இது. யாருமே நுழைய முடியாத அம்முகாம்களுக்கு ஹெலிகாப்டரில் ''இந்து'' ராம் மட்டும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். ராஜபக்சே நடத்தி வரும் இன அழிப்பு நடவடிக்கைகளை மூடிமறைத்து, கொலைக் கரங்கள் வழங்கிய ''லங்கா ரத்னா'' எனும் பதக்கத்துடன் சிங்கள இனவெறிக்கும், இந்திய மேலாதிக்கத்தின் நலனுக்கும் ஊதுகுழலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது, 'பாரம்பரியம்' மிக்க ''இந்து'' பத்திரிக்கை.

இலங்கை மீதான மேலாதிக்கப் போட்டாபோட்டியின் காரணமாகவும், சீனாவின் பக்கம் இலங்கை சாய்ந்துவிடாமல் இழுப்பதற்காகவும், மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் மிரட்டிப் பணியவைக்கும் நோக்கத்துடன் அகதிமுகாம் அவலங்களை அம்பலப்படுத்துகின்றன. இந்திய மேலாதிக்கவாதிகளோ, ராஜபக்சே கும்பலுக்கு நற்சான்றிதழ் அளித்து தாஜா செய்து தம் பக்கம் இழுக்க, அகதிமுகாம் அவலங்களை மூடிமறைக்கின்றனர். போர்க்குற்றவாளியான ராஜபக்சே மட்டுமல்ல; இக்குற்றங்களுக்குப் பக்கபலமாகப் பிரச்சாரம் செய்துவரும் இந்திய மேலாதிக்கத்தின் ஊதுகுழலான ''இந்து'' ராம் போன்ற கோயபல்சுகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே!

● சுந்தர்

# "சமூக பாசிச சி.பி.எம்.-ஐ அடித்து விரட்டுவோம்!"
## – விவசாயிகள் விடுதலை முன்னணியின் சூளுரை!

**வி**ழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட காரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த, வி.வி.மு.வின் ஆதரவாளர் இராசேந்திரன், கடந்த ஆண்டு 20.6.08 அன்று சி.பி.எம். குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலை நடந்து ஓராண்டு நிறைவடைந்து விட்டது.

சி.பி.எம். கட்சியின் பொறுக்கித்தனத்திற்கும், ரவுடித்தனத்திற்கும் எதிராய் இருக்கும் வி.வி.மு.வின் மீது ஆத்திரம் கொண்டு அவ்வமைப்பின் முன்னணியாளர் தோழர் ஏழுமலையைத் தீர்த்துக் கட்டும் நோக்கில் சி.பி.எம். குண்டர்களால் தொடுக்கப்பட்ட கொலைவெறித் தாக்குதலைத் தடுக்க முனைந்தபோதுதான் படுகொலையானார், இராசேந்திரன்.

இக்கொலை நடந்து ஓராண்டு கடந்த பின்னரும், எம்.இராசக்கண்ணு உள்ளிட்ட முக்கிய குற்றவாளிகள், காரப்பட்டு தெருக்களில் தினவெடுத்துத் திரிகின்றனர். போலீசு இக்குண்டர்களை கைது செய்யாதது மட்டுமல்ல, இவர்களுடன் கூடிக் குலாவுகிறது. போலீசின் 'புரோக்கராய்' செயல்படுகிறது சி.பி.எம். கட்சி என்பது அவ்வூரறிந்த உண்மை.

இந்நிலையில், சி.பி.எம். குண்டர்களின் கொலைவெறியாட்டத்தை - கொட்டத்தை அம்பலப்படுத்தியும், இக்கொலைக் குற்றவாளிகளைப் பாதுகாத்து வரும் திருவெண்ணெய் நல்லூர் போலீசைக் கண்டித்தும், படுகொலையான இராசேந்திரன் குடும்பத்திற்கு தமது அமைப்பின் சார்பில் திரட்டப்பட்ட நிதி ரூ. 50,000/-த்தை வழங்கும் வகையிலும், கடந்த 6.7.09 அன்று இருவேல்பட்டு பள்ளிக்கூடம் முன்பு நிதியளிப்பு பொதுக்கூட்டத்தை நடத்தியது, விவசாயிகள் விடுதலை முன்னணி.



வி.வி.மு. செயற்குழு உறுப்பினர் தோழர் மனோகரன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில், தி.மு.க.வின் கலியன், அ.தி.மு.க.வின் ஆறுமுகம், ம.தி.மு.க.வின் சீத்தாபதி, வி.சி.கட்சியின் இளங்கோ, குடியரசுக் கட்சியின் குமார் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சி.பி.எம்.-போலீசின் கள்ளக் கூட்டுத்தனத்தை அம்பலப்படுத்தி உரையாற்றினர்.

''சுயநலன், பிழைப்புவாதம், காரியவாதம் என்று சீரழிந்துப் போயுள்ள இன்றைய சமூக அமைப்பில், புரட்சிக்காக போராடும் தோழர்களைப் பாதுகாக்க தனது உயிரை தியாகம் செய்துள்ளார் இராசேந்திரன். இவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. நாம் வழங்கும் இந்த சிறு நிதி உதவிகூட அக்குடும்பத்திற்கு ஒரு ஊன்றுகோலாய் அமையும் என்பதற்கே'' எனப் பேசிய வி.வி.மு. மாவட்ட அமைப்பாளர் அம்பேத்கர், இராசேந்திரன் குடும்பத்தினரிடம் வி.வி.மு.வால் திரட்டப்பட்ட ரூ. 50,000/-த்தை வழங்கினார்.

''சி.பி.எம். கட்சி சமூக பாசிஸ்டாக பரிணமித்துள்ளது என்பதை நிரூபிக்க லால்காருக்கோ, சிங்கூருக்கோ, நந்திகிராமுக்கோ போகத் தேவையில்லை! நம் கண்ணுக்கெட்டும் தொலைவிலிருக்கிறது காரப்பட்டு! நிதி கொடுப்பதோடு நிறைவுப் பெற்று விடுவதில்லை நம் பணி; இப்பாசிஸ்டுகளை அண்ட விடாமல் அடித்து விரட்டுவதிலும் முன்னுதாரணம் படைக்கட்டும் காரப்பட்டு'' என இனி செய்ய வேண்டியதை விளக்கி, சிறப்புரையாற்றினார் ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் இரா.சீனிவாசன். ம.க.இ.க. மையக் கலைக் குழுவினர் தமது கலைநிகழ்ச்சியால் புரட்சிகர உணர்வூட்டினர். சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த திரளான மக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இப்பொதுக்கூட்டம், அடுத்த கட்ட போராட்டத்திற்கான முன்னறிவிப்பாய் அமைந்தது.

— பு.ஜ. செய்தியாளர்கள்,
திருவெண்ணெய்நல்லூர்.



படிப்பகம்

www.padippakam.com

## தடுப்பூசி மருந்து தயாரிப்பு தனியாருக்குத் தாரைவார்ப்பு:

# பிஞ்சு குழந்தைகளின் உயிரோடு விளையாடும் வக்கிரம்

திருநெல்வேலி மாவட்டம், ஆலம்பட்டினம் பஞ்சாயத்து யூனியனின் ஆரம்ப சுகாதார நிலையத்தில், சரவணகுமார் என்ற இரண்டு வயது குழந்தை காய்ச்சலுடன் கீழ்தாடை இறுக்கமாகி அசைக்க முடியாமல், ஜன்னி நோய்க்கு ஆளான நிலையில் அனுமதிக்கப்பட்டான். அவனைப் பரிசோதித்த மருத்துவர்கள் மேற்கொண்டு சிகிச்சை செய்வதற்கு ஒவ்வாத நிலையில் உடல் மெலிந்து காணப்படுவதாகவும்; அவன் பிழைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்றும் குடும்பத்தாரிடம் கூறிவிட்டனர். 6 மாதங்களுக்கு முன்பு சரவணகுமார் காலில் ஏற்பட்ட வெட்டு காயத்திற்கு உள்ளூரில் உள்ள கிளை சுகாதார நிலையத்தில் டி.டி. ஊசி (ஜன்னி நோய்க்கு எதிரான தடுப்பூசி) போடுவதற்கான மருந்து இல்லாமல் போனதால் ஏற்பட்ட விபரீதம் இது. சரவணக்குமாரின் பெற்றோர்கள் தங்கள் அன்பு மகனை எப்படிக் காப்பாற்றுவது என்று புரியாமல் பரிதவித்து நிற்கின்றனர்.

இது ஏதோ சரவணகுமார் என்ற குழந்தைக்கு மட்டும் விதிவிலக்காக நடந்த சம்பவம் அல்ல. நாடு முழுவதும் ஆண்டுதோறும் பிறக்கும் 2.6 கோடி குழந்தைகளின் எதிர்காலம் இதை நோக்கிதான் போய்க் கொண்டிருக்கிறது. இந்த செய்தியை அரசே உறுதிப்படுத்தியுள்ளது. டிசம்பர் 2008-இல் 13 மாநிலங்களை ஆய்வு செய்த சுகாதார துறை அதிகாரிகள் பீகார், சட்டிஸ்கர், அஸ்ஸாம், கேரளா மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களில் குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கும் தொண்டை அழற்சி, ஜன்னி, காசநோய், கக்குவான் இருமல் மற்றும் அம்மை நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள் அரசு மருத்துவமனையில் இருப்பு இல்லை என்று அறிவித்துள்ளனர்.

இதேபோல் ஒரிசா, மேற்குவங்கம், திரிபுரா மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் குழந்தைகளுக்கான பல்வேறு தடுப்பூசிகள் மிகவும் அற்பமான அளவில் மட்டுமே அரசு மருத்துவமனையில் இருப்பு உள்ளதாக செய்தி ஊடகங்களும் பல்வேறு ஜனநாயக அமைப்புகளும் கூறுகின்றன. மேற்கு வங்கத்தில் தொண்டை அழற்சி மற்றும் ஜன்னி நோய்க்கு எதிரான தடுப்பூசி அறவே இல்லை. கையிருப்பாக, ஒட்டு மொத்த தேவையில் ஒரு சதவீதம் மட்டுமே உள்ளது. இத்தகைய பற்றாக்குறையால் நாடு முழுவதும் 10 முதல் 30 சதம் வரை குழந்தைகளுக்கான தடுப்பூசி போடுதல் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் ஆண்டுதோறும் பிறக்கும் 2.6 கோடி குழந்தைகளின் உடல் நலன் மற்றும் ஆயுட்காலம் கேள்விக்குள்ளாகிவிட்டது. ஏன் இந்த அவலநிலை? இதற்கான பின்னணி என்ன?

2001-ஆம் ஆண்டு இந்திய அரசு, மருந்து மற்றும் தடுப்பூசி உற்பத்தியில் உலக தரத்தை எட்ட ''மருந்து மற்றும் அழகு சாதன பொருட்கள்'' சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. அந்த சட்டத்திருத்தமானது, மருந்து மற்றும் தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) பரிந்துரையான, ''உற்பத்திக்கான சிறந்த முறைகள்'' பின்பற்ற வேண்டும் என்பதே ஆகும். தேசிய ஒருங்கிணைப்பு ஆணையம் என்ற அமைப்பு, மேற்குறிப்பிட்ட பரிந்துரையைச் செயற்படுத்தவும், அவ்வப்பொழுது மருந்து மற்றும் தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களை ஆய்வு செய்து பரிந்துரைகள் பின்பற்றப்படுகிறதா, இல்லையா என்பதைச் சோதித்து அறிவதும், அதன் அடிப்படையில் உரிமம் கொடுப்பது அல்லது நிராகரிப்பது ஆகியவற்றை மேற்கொள்ள அதிகாரம் கொண்ட அமைப்பாகும். இவ்விசயங்கள் நடைமுறையில் இருந்தால் மட்டுமே, ஒரு நாட்டின் நிறுவனங்கள் உலக சந்தையில் மருந்தையோ அல்லது தடுப்பூசிகளையோ விற்பனை செய்ய முடியும்.

**தனியார்மயத்தின் கோரம்: அரசு மருத்துவமனைகளில் தடுப்பூசி மருந்து இல்லாமல் தட்டம்மை நோயினால் பரிதவிக்கும் குழந்தை.**



கடந்த 20 ஆண்டுகளாக உலக வங்கி கட்டளைக்கிணங்க அரசால் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் தனியார்மயம், உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் தயாரிக்கும் பொதுத்துறை நிறுவனங்களையும் விட்டு வைக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அண்மைக் காலம் வரை மத்திய சுகாதார துறையின் தடுப்பூசி போடும் திட்டங்களுக்குத் தேவையான 80 சதவீத தடுப்பூசி களை பொதுத்துறை நிறுவனங்களே உற்பத்தி செய்து கொடுத் தன. குறிப்பாக நாய்க்கடிக்கான ரேபீஸ் தடுப்பூசி மருந்தை உற்பத்தி செய்து வந்த குன்னூரில் அமைந்துள்ள பாஸ்டர் ஆராய்ச்சி மையம், சென்னையில் உள்ள பி.சி.ஜி. தடுப்பூசி மருந்தை உற்பத்தி செய்யும் கிங் ஆராய்ச்சி மையம், மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் கசௌலியிலுள்ள பாம்புக் கடிக்கான தடுப்பூசி ஆராய்ச்சி மையம் ஆகியவை தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்து கொடுத்து வந்தன.

இப்படி குழந்தைகளின் நலன்களுக்கு அடித்தளமாக இருந்த மூன்று நிறுவனங்களுக்கு கடந்த 20 ஆண்டுகளில் சொல்லி கொள்ளும் அளவில் அரசு நிதி ஒதுக்கீடோ அல்லது ஆட்கள் பற்றாக்குறையை போக்குவதற்கான நடவடிக்கைகளோ மேற் கொள்ளப்படவில்லை. எந்த ஒரு நவீன வசதியும் இன்றி சுமார் 30 சதவீத விஞ்ஞானிகள் மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை யின் ஊடாகவே இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு தருணங்களில் அரசு இந்நிறுவனங்களை மூட முயற்சி செய்தது. ஆனால் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக, அரசால் முழுமையாக நிறை வேற்ற முடியவில்லை. இருப்பினும் வெறி நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்தை தயாரித்து வந்த குன்னூர் பாஸ்டர் ஆராய்ச்சி மையத்தை பலத்த எதிர்ப்புடன் அரசு மூடியாது.

உலக சந்தையில் விற்பனைக்கு வரும் ஒட்டுமொத்த தடுப் பூசியில் 60 சதம் இந்திய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப் பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதைத்தவிர, கணிசமான அளவில் மருந்துகளும் ஏற்றுமதி ஆகிறது. இவ்விரண்டின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 24,000 கோடி ரூபாய் வருமா னம் கிடைக்கிறது. இந்த ஏற்றுமதி வியாபாரத்தில் பெரும்பான் மையாக தனியார் நிறுவனங்களே ஈடுபடுகின்றன. இந்த ஏற்று மதி எந்த ஒரு தொய்வுமின்றி நீடிக்க வேண்டும் என்றால், ஆரம்பத்தில் கூறப்பட்ட உலக சுகாதார அமைப்பின் ''உற்பத் திக்கான சிறந்த முறைகள்'' நாடு தழுவிய அளவில் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். பரிந்துரைகளைப் பின்பற்றாத நிறுவனங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட வேண்டும்.

இந்த பின்னணியில் கடந்த பல ஆண்டுகளாக எந்த ஒரு நிதி ஒதுக்கீடும் பெறாமலும் ஆட்கள் பற்றாக்குறையிலும் செயல்பட்டு வந்த பொதுத்துறை நிறுவனங்களின் தடுப்பூசி உற் பத்திக்கான உரிமத்தை, அன்புமணி இராமதாஸ் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்த சுகாதாரத் துறை இரத்து செய்தது. இந்த பொதுத்துறை நிறுவனங்களை மாற்று வேலையில் ஈடுபடுத்தப்

## அன்புமணியின் கயமைத்தனம்

தடுப்பூசி மருந்து பற்றாக்குறையால் நாட்டின் கோடிக் கணக்கான குழந்தைகளின் எதிர்கால வாழ்வைக் கேள்விக் குள்ளாக்கிய குற்றவாளிகளுள் முன்னாள் அமைச்சரும் பா.ம.க. நிறுவனர் ராமதாசின் வாரிசுமான அன்புமணி முதன் மையானவர். அரசுத்துறை நிறுவனங்களை முடமாக்கி தனி யார்மயக் கொள்ளைக்கு ஆதரவாக நின்று அவர் ஆதாயம டைந்துள்ள விவகாரம், இப்போது மெதுவாகக் கசியத் தொடங் கியுள்ளது.

சென்னையிலுள்ள கிரீன்சிக்னல் பயோபார்மா என்ற தடுப்பூசி மருந்து நிறுவனம், பா.ம.க.வைச் சேர்ந்த சுந்தர பரி பூரணனுக்குச் சொந்தமானது. இதுதவிர, வாட்சன் பயோ பார்மா என்ற தடுப்பூசி மருந்து நிறுவனத்தையும் அவரும் அவரது மனைவியும் நடத்துகின்றனர். பி.சி.ஜி. தடுப்பூசி மருந்து நிறுவனம் மற்றும் பாஸ்டர் நாய்கடி தடுப்பூசி மருந்து நிறுவனம் ஆகிய அரசுத்துறை நிறுவ னங்களின் இயக்குனரான இலங் கேஸ்வரனின் மனைவி, வாட்சன் பயோபார்மா நிறுவனத்தில் முக்கிய பங்குதாரர். அன்புமணி அமைச்சராக இருந்தபோதுதான் இந்த அரசுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு, அந்நிறு வனங்களிலிருந்து வாட்சன் பயோ பார்மா நிறுவனத்திற்கு மூலப் பொருட்கள் அனைத்தும் கடத்தப்பட் டுள்ளன.



இதுவொருபுறமிருக்க, சுந்தரபரிபூ ரணனின் கிரீன்சிக்னல் பயோபார்மா -விடமிருந்து மைய அரசின் சுகாதா ரத்துறை தடுப்பூசி மருந்து தயாரிக்கத் தேவையான தட்டம்மை கொப்புளங் களின் விதைகளை விலைக்கு வாங் கியுள்ளது. இதற்காக அன்புமணி அமைச்சராக இருந்தபோது ரூ. 17.8 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் ஐதராபாத்திலுள்ள அரசுத்துறை நிறுவனமான தொற்று நோய் தடுப்பு நிறுவனம் இவற்றை இலவசமாகவே மருந்து ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. இருப்பினும், தனது கட்சிக்காரரும் சாதிக்காரரும் தானும் ஆதாயமடைவதற் காகவே மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்துள்ளார், பாட் டாளியின் 'தோழன்' டாக்டர் அன்புமணி ராமதாசு.

மத்திய நல்வாழ்வுத்துறையின் முன்னாள் செயலரான எஸ்.பி.சுக்லாவும் சில மருத்துவ நிபுணர்களும் இவற்றைப் பட்டியலிட்டு அன்புமணியின் கயமைத்தனத்தைச் சாடி, நீதி விசாரணை கோரி அண்மையில் உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். தடுப்பூசி மருந்து உற்பத்தியில் தன் னிறைவு பெற்றிருந்த இந்திய அரசுத்துறையை முடமாக்கிச் சீரழித்த குற்றவாளி என்று அன்புமணியை அவர்கள் சாடி யுள்ளனர். டெல்லியைச் சேர்ந்த பிரபல தன்னார்வ சுற்றுச் சூழல்வாதியான சுனிதா நாராயண னும், தன்னார்வ சுற்றுச்சூழல் இயக்கத்தின் ''டவுன் டு எர்த்'' என்ற பத்திரிகையும் அன்புமணியின் மக் கள் விரோத கயமைத்தனங்களை விரிவாகப் பட்டியலிட்டு அம்பலப் படுத்தியுள்ளன. சி.பி.எம். கட்சிப் பிர திநிதிகள் நாடாளுமன்றத்தில் இது பற்றி கேள்வி எழுப்பி விசாரணை நடத்தக் கோரியுள்ளனர்.

சாராய போதை, புகையிலைப் பழக்கத்துக்கு எதிராக சூரத்தனம் காட்டிக் கொண்டு, நாட்டு மக்களின் நல்வாழ்வில் அதீத அக்கறை கொண் டுள்ளவர்களாக நாடகமாடி வரும் ராமதாசு - அன்புமணி கும்பலின் யோக்கியதைக்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

•



படிப்பகம்

www.padippakam.com

போவதாகவும் அறிவித்தது. குழந்தைகளுக்குத் தேவையான 80 சதவீத தடுப்பூசிகளை நிறைவு செய்து அவர்களின் நலனைக் காப்பாற்றுவதைவிட, தனியார் நிறுவனங்கள் உலகச் சந்தையில் மருந்து மற்றும் தடுப்பூசிகள் விற்பதையே முக்கியமானதாகவும் அவசியமானதாகவும் அரசு கருதுகிறது. பொதுத்துறை நிறுவனங்களுக்கு லைசென்சு இரத்து செய்த பிறகு, சுகாதார துறையின் செயலாளர் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் ''பொதுத்துறை நிறுவனங்களை உற்பத்தி செய்ய அனுமதித்தால் 24,000 கோடி ரூபாய் மதிப்புடைய ஏற்றுமதியானது கேள்விக்குள்ளாகிவிடும்'' எனக் கூறினார். அப்பட்டமாக, மக்களின் நலனை விட முதலாளிகளின் நலனே அதிமுக்கியம் என அரசு கருதுவதன் வெளிப்பாடு தான் இது.




பொதுத்துறை தடுப்பூசி நிறுவனங்களை மூடியபின், சுகாதார துறை தனது தடுப்பூசி திட்டங்களுக்குத் தேவையானவற்றை சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா. பயாலாஜிக்கல் இவான்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்களிடமும் மற்றும் இந்திய இம்யுனாலஜிக்கல் லிமிடெட் என்ற அரசு நிறுவனத்திடமும் கொள்முதல் செய்தது. இதில் ''பயாலசிக்கல் இவான்ஸ்'' என்ற நிறுவனம் உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளைப் பின்பற்றுவதில் சந்தேகம் இருப்பதாக இந்நிறுவனத்தை ஆய்வு செய்த நாடாளுமன்றக் குழு அறிவித்துள்ளது. இருப்பினும் அரசு, தடுப்பூசி கொள்முதலைத் தொடர்ந்தது.


2007-08-இல் ஒட்டு மொத்தமாக குழந்தைகளுக்கு தேவையான அனைத்து தடுப்பூசிகளையும் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து 32.2. கோடி ரூபாய் விலையில் மைய அரசின் சுகாதாரத் துறை கொள்முதல் செய்தது. 2008-09-இல் அதைவிடக் குறைவான அளவிலான மருந்துகளை ரூ. 64.29 கோடிக்குக் கொள்முதல் செய்துள்ளது. தனியார் நிறுவனங்கள் தன்னிச்சையாக மருந்துகளின் விலையை உயர்த்திக் கொள்ளையடித்ததற்கும், அரசு இத்தனியார்மயக் கொள்ளைக்கு உடந்தையாக நிற்பதற்கும் இப்புள்ளி விவரமே சாட்சியமாக உள்ளது.

தனியார் நிறுவனங்கள் உள்நாட்டு தேவை பற்றியோ, அரசின் தேவை பற்றியோ கண்டுகொள்வதில்லை. அவர்களின் கவனம் முழுவதும் உலகச் சந்தையில் விற்று கோடிக்கணக்கான இலாபத்தை கல்லா கட்டுவதுதான். அதையும் மீறி அரசின் தேவையை நிறைவேற்ற, தடுப்பூசிகளுக்கு யானை விலை கேட்டு நிர்ப்பந்தித்தார்கள். இந்த உண்மையை மனசாட்சியுள்ள அரசு அதிகாரிகள் உறுதிப்படுத்துகிறார்கள். சுகாதார துறையே கூட ஓர் அறிக்கையில் ''ஒட்டு மொத்த நாடும் தடுப்பூசி பற்றாக்குறையில் தவிக்கும் போது, தனியார் நிறுவனங்கள் கை கொடுக்கவில்லை'' என்று கூறுகிறது. இந்தப் பின்னணியில்தான், நாடு முழுவதும் குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் பல்வேறு அவதிகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

தனியார்மய கொள்கை மற்றும் உலகமயமாக்கலின் தொடர்ச்சியாக அரசு எந்த ஒரு முதலீடுமின்றி பொதுத்துறை நிறுவனங்களைச் சீரழித்து கலாவதியாக்கியது. இரண்டாவதாக, தனியார் மருந்து மற்றும் தடுப்பூசி நிறுவனங்கள் உலகச் சந்தையைக் கைப்பற்றுவதற்கு ஏதுவாக பொதுத் துறை நிறுவனங்களின் உற்பத்தியை முடக்கி நாட்டு மக்களின் நலனை பறிகொடுத்தது. இதன் மூலம் ஆண்டுதோறும் பிறக்கும் 2.6 கோடி குழந்தைகளின் நலனும் இதர மக்கள் பிரிவினரின் நலனும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டு தட்டம்மைக்கும், கக்குவான் இருமலுக்கும், வெறிநாய்க் கடிக்கும் நமது அன்புக் குழந்தைகளைப் பறிகொடுக்கப் போகிறோமா? அல்லது நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வையே பறித்து வரும் தனியார்மயக் கொள்ளையர்களுக்கும் அவர்களின் கூட்டாளிகளான ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் எதிராக வீதியில் இறங்கிப் போராடப் போகிறோமா?

● சுடர்

**ஏகாதிபத்தியக் கையாள் காந்தி-காங்கிரசை அம்பலமாக்கும் எட்டாவது பதிப்பு....**




**காந்தியும் காங்கிரசும்**

**- ஒரு துரோக வரலாறு**

■ பக்: 48 ■ விலை: ரூ. **15.00**

**இன்று,** ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை இரத்தத்தில் மூழ்கடித்து மேலாதிக்க வெறியில் மிதக்கிறது இந்திய அரசு - காங்கிரசு. **அன்று,** இந்திய மக்களின் சுதந்திர வேட்கையைக் காட்டிக் கொடுத்தும், கைராட்டையால் நசுக்கியும் காவு வாங்கியது காந்தியும் - காங்கிரசும். ஆகஸ்டு போலிச் சுதந்திரத்தின் பூர்வீக வண்டவாளங்களை, வக்கிரங்களை ஆதாரங்களுடன் விவரிக்கிறது இச்சிறு நூல்.

அஞ்சலில் நூல் வேண்டுவோர், நூலின் விலையுடன் ரூ. 25.00 சேர்த்து பணவிடை செய்க.

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை – 600 002.
தொலைபேசி: 044–28412367



படிப்பகம்

www.padippakam.com

# ஈயம், பித்தளைக்குப் பேரீச்சம்பழம்! சூட்கேசுக்குப் பல்கலைக்கழகம்!!

## தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக்கழகத் தகுதி வழங்குவதில், சட்டவிதிகள் வளைக்கப்பட்டுள்ளன.

கூரைக் கட்டிடம்கூட இல்லாமல் மரத்தடியில் இயங்கும் அரசு பள்ளிக்கூடங்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படிப் பட்ட பரிதாபமான நிலையில் ஒரு பல்கலைக்கழகம், அதுவும் ஒரு தனியார் பல்கலைக்கழகம் இயங்கி வருவதை உங்களால் நம்ப முடியுமா? நம்ப மறுப்பவர்கள், தயவுசெய்து, தமிழகத் தலைநகர் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் மீனாட்சி பல்கலைக்கழகத்தை வந்து பாருங்கள்.

இப்பல்கலைக்கழகம் நடத்தும் பொறியியல் கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்தபொழுது, ''பல்கலைக்கழக கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரையில், சென்னைப் புறநகர்ப் பகுதி யில் உள்ள சிறீமுத்துக்குமரன் பொறியியில் கல்லூரியைச் சேர்ந்த கட்டிடங்களையும் ஆய்வுக் கூடங்களையும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்'' என இப்பல்கலைக்கழக நிர்வா கிகள் அன்புக் கட்டளை போட்டார்களாம். பணத்தைக் கட்டிச் சேர்ந்த பிறகு வந்து பார்த்தால், ''இப்பல்கலைக்கழகத்திற்கென்று தனி வளாகம் எதுவும் கிடையாது; கட்டிடம் மட்டுமின்றி, இப்பொறியியல் கல்லூரிக்கு அங்கீகாரமே கிடையாது'' எனப் புலம்புகிறார், இப்பல்கலைக்கழகத்தை நம்பி மோசம் போன ஒரு மாணவர். பல்கலைக்கழக மானியக் குழு, மீனாட்சி பல்கலைக் கழகத்தை அங்கீகரித்து நான்கு ஆண்டுகள் ஆகி விட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் இணைய தளத்தில், காஞ்சிபுரம் மாவட்டம் ஏனாத்தூரில் உள்ள மீனாட்சி மருத் துவக் கல்லூரியும், மீனாட்சி செவிலியர் கல்லூரியும் மட்டுமே மீனாட்சி பல்கலைக்கழகத்தில் இணைக்கப் பட்டுள்ளதாகத் தகவல்கள் உள்ளன. ஆனால், மீனாட்சி பல்கலைக்கழகத்தின் இணைய தளத் தில் பொறியியல் கல்லூரியையும் சேர்த்து மூன்று கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் உலா வருகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழுவின் தென் கிழக்கு வட்டார அலுவலகத்தின் இணைச் செய லர் ஜி.சீனிவாஸ், ''அனைத்திந்திய தொழில்நுட் பக் கல்விக் கவுன்சிலின் (ஏ.ஐ.சி.டி.இ.) ஒப்பு தல் இன்றி நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் பொறியியல் கல்லூரிகளை நடத்தக் கூடாது'' எனக் கூறுகிறார். ஆனால், மீனாட்சிப் பல் கலைக்கழகமோ தங்களின் பொறியியல் கல்லூ ரிக்கு யாருடைய ஒப்புதலும் தேவையில்லை என்பது போல காட்டிக் கொண்டு, இந்த கல்வி யாண்டுக்கான மாணவர் சேர்க்கையை மும் முரமாக நடத்திக் கொண்டிருக்கிறது. இப்பல்க லைக்கழகம் நடத்திவரும் பொறியியல் கல்லூரி யில் சேர்ந்து படித்து வரும் மாணவர்களோ தங் களுக்குப் பல்கலைக்கழகத் தேர்வுகள் எப்போது நடைபெறும் என்பதுகூடத் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீனாட்சிப் பல்கலைக்கழகம் எவ்வித அங்கீகாரமும் இன்றி பொறியியல் கல்லூரியொன்றை நடத்தி வருகிறது என்பதுதான் உண்மை. இம்மோசடிக்காக அப்பல்கலைக்கழக உரிமையாளர் களைத் தமிழக அரசு கைது செய்திருக்க வேண்டும். அப்பல் கலைக்கழத்தின் அங்கீகாரத்தைப் பல்கலைக்கழக மானியக் குழு ரத்து செய்திருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக, தங்களுக்கு நியாயம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி மாணவர்கள்தான் போலீசாரால் அடித்துத் துரத்தப்பட்டனர்.

நாடெங்கிலும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களைக் கண் காணிக்க, அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.), இந்திய மருத்துவக் கவுன்சில் (எம்.சி.ஐ.), பல் கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) உள்ளிட்ட 51 அரசு நிறு வனங்கள் உள்ளன. அறுக்க மாட்டாதவன் கையில் ஆயிரம் கருக்கறுவாள் என்பது போல, இவ்வமைப்புகள் மீனாட்சி பல் கலைக்கழகத்தின் மோசடியை வேடிக்கைதான் பார்க்கின்றன. இது மட்டுமின்றி, உயர்கல்வி தொடர்பான அரசின் கொள்கை மற்றும் சட்ட திட்டங்கள் அனைத்தும் இது போன்ற மோசடியை, கல்விக் கொள்ளையை ஊக்குவிப்பதாகத்தான் உள்ளன. குறிப்பாக, கடந்த பத்தாண்டுகளில் பல்கலைக்கழக மானியக் குழுவும், மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக்கழகத் தகுதி வழங்கிய வேகத்தைப் பார்த்தாலே, மைய அரசின் கல்விக்

**பி.எம்.ஆர். பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றித் தங்கள் கல்லூரி நடைபெற்று வருவதை அம்பலப்படுத்தி சென்னையில் உள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய பொழுது, அவர்களைச் சமாதானப்படுத்த முயலுகிறார், அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் மன்னர் ஜவஹர்.** (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com

கொள்கை பெரும்பாலான இந்திய மாணவர்களின் நலனுக்கு எதிராக இருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.


•••

நமது நாட்டில் மூன்று வகையான பல்கலைக்கழகங்கள் இயங்கிவருகின்றன. மைய அரசும், மாநில அரசுகளும் நடத்தி வரும் பொதுப் பல்கலைக்கழகங்கள் ஒருவகை. மாநில அரசு தனியாக ஒரு சட்டம்போட்டு, தனியார் உயர் கல்வி நிறுவனத்தைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கும் அரசு- தனியார் பல்கலைக்கழகங்கள் இரண்டாவது வகை. பல்கலைக்கழக மானியக் குழுவும், மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையும் இணைந்து உயர் கல்வி நிறுவனங்களைப் பல்கலைக் கழகமாக அங்கீகரிப்பது மூன்றாவது வகை. (இப்பல்கலைக் கழகங்கள் முன்பு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என அழைக்கப்பட்டு வந்தன.)

அரசோ, தனியாரோ நடத்தும் உயர் கல்வி நிறுவனங்களை நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்கும் நடைமுறை 1956-ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிறது. 1956-க்கும் 1995-க்கும் இடைப்பட்ட காலத்தில் நாடெங்கிலும் 36 உயர் கல்வி நிறுவனங்கள்தான் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என்ற தகுதியைப் பெற்றிருந்தன. இந்த 36 கல்வி நிறுவனங் களில் ஒன்றேஒன்றுதான் தனியார் கல்வி நிறுவனம். 1995-க்கும் 2009-க்கும் இடைபட்ட காலத்தில் மேலும் 91 உயர்கல்வி நிறு வனங்கள் நிகர்நிலைப் பல்கலைக்கழங்களாக அங்கீகரிக்கப் பட்டன. இந்த 91-இல், 85 உயர் கல்வி நிறுவனங்கள் தனியா ருக்குச் சொந்தமானவை.

கல்வியில் தனியாரின் ஆதிக்கம் அதிகரித்து வருவதற்கு இணையாக, தனியார் கல்வி நிறுவனங்கள்பல்கலைக்கழகங் களாக உருமாறும் வேகமும் அதிகரித்து வருவதை இப்புள்ளி விவரங்கள் மூலம் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக, கடந்த பத்தாண்டுகளில், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியிலும் அதற்குப் பின்வந்த காங்கிரசு கூட்டணி ஆட்சியிலும் தனியார் உயர் கல்வி நிறுவனங்களைப் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகவே பல்வேறு சட்ட சீர்திருத்தங்களும் சமரசங்களும் செய்து கொள்ளப்பட்டன.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில், அக்கட்சியின் மூத்த தலைவ ரான முரளி மனோகர் ஜோஷி மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்தபொழுது, உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதி வழங்குவதற்குப் புதிய நடைமுறையை உருவாக்கினார். இப்புதிய நடைமுறையின்படி,



**பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க இலஞ்சம் வாங்கி, அதனால் சி.பி.ஐ. விசாரணையில் மாட்டிக் கொண்டு, பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஏ.ஐ.சி.டி.இ. அமைப்பின் (முன்னாள்) தலைவர் ஆர்.ஏ. யாதவ்.**

நிகர்நிலைப் பல்கலைக் கழகத் தகுதி கோரும் உயர்கல்வி நிறு வனம் ஆராய்ச்சித் துறையில், பல்கலைக்கழகத்துக்கு இணை யாகச் சாதனைகள் புரிந்திருக்க வேண்டும் என்பது அவசிய மில்லாமல் போனது. மாறாக, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப்படும் உயர்கல்வி நிறுவனத்திற்கு ஐந்து ஆண்டு கள் கால அவகாசம் கொடுக்கப்படும். இந்தக் கால அவகாசத் தின்பொழுது, பல்கலைக்கழக மானியக் குழு ஒவ்வொரு ஆண்டும் அக்கல்வி நிறுவனத்தின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து அதன் தகுதியை உறுதி செய்யும் என முடிவு செய்யப் பட்டது.

ஜோஷியின் இப்புதிய விதிகள், ''படுத்துக்கிட்டு போர்த் திக்கிட்டாலென்ன, போர்த்திக்கிட்டு படுத்துக்கிட்டாலென்ன?'' என்ற அளவிற்கு, உயர்கல்வித் துறையை மலினமாக்கியது. ''தகவல் தொழில் நுட்பம், உயிரி தொழில்நுட்பம் போன்ற துறைகள் இப்பொழுதுதான் உருவாகி வருவதால், நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதி வழங்குவதற்கு ஆராய்ச்சி சாதனை களை முதன்மைபடுத்தக் கூடாது'' என இந்த மலினப்படுத்த லுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. 2000-ஆம் ஆண்டில் விதிகள் தளர்த்தப்பட்ட பிறகு, கடந்த எட்டு ஆண்டுகளில் 67 உயர் கல்வி நிறுவனங்கள் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்கப்பட்டன. அதிலொன்றுதான், கட்டிடங்கள் கூட இல்லாமல் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதியைப் பெற்றுள்ள மீனாட்சி பல்கலைக்கழகம்.

•••

தனியார் கல்வி வியாபாரிகளுக்குச் சலுகை அளிப்பதில் ஜோஷி கோடு போட்டார் என்றால், அவருக்குப் பின் மனி தவள மேம்பாட்டுத்துறை அமைச்சரான அர்ஜுன் சிங் ரோடே போட்டார். காங்கிரசு கூட்டணி ஆட்சியில், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் பற்றிய பிரச்சினையை ஆராய கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இக்கமிட்டி, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி யில் கொண்டு வரப்பட்ட புதிய நடைமுறையில் எவ்வித மாற்றங்களும் செய்ய மறுத்ததோடு, நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் இனி தங்களைப் பல்கலைக்கழகங்கள் என்றே அறிவித்துக் கொள்ளலாம் என ஒரே போடாக போட் டது. இதன் மூலம், புகழ் பெற்ற சென்னை அண்ணா பல்கலைக் கழகத்திற்கும், கட்டிடமே இல்லாத சென்னை மீனாட்சி பல்கலைக்கழகத்திற்கும் இடையே எந்தவொரு வேறுபாடும் கிடையாது என்ற தோற்றம் பாமர மாணவர்கள் - பெற்றோர் கள் மத்தியில் உருவாக்கப்பட்டது.

**''சூட்கேஸின் எடைக்குத் தகுந்தவாறு தகுதி தீர்மானிக்கப்பட்டதாக'' கல்வி வியாபாரிகளே நக்கல் அடிக்கும் அளவிற்கு, பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆய்வு கேவலமாக நடந்தது.**




படிப்பகம்

www.padippakam.com

பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த உத்தரவை எதிர்த்து, கபில் குமார் என்ற சமூக நல ஆர்வலரால் தில்லி உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டுள்ளது. செப்.2006-இல் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழுவின் நிர்வாக உத்தரவுக்கு எதிரான இப் பொதுநல வழக்கு, ஜூலை 2009-இல் தான் விசாரணைக்கே வருகிறது. இந்த மெத்தனப் போக்கிற்கு நீதிமான்களைக் குற்றம் சொன்னால், நம்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் பாய்ந்து விடும் அபாயமுண்டு!

●●●

நவம்பர் 2004-க்கும் ஏப்ரல் 2005-க்கும் இடையே நாடெங்கிலும் இருந்து 230 உயர்கல்வி நிறுவனங்கள், தங்களுக்கு நிகர்நிலைப் பல்கலைக் கழகம் தகுதி வழங்கக் கோரி பல் கலைக்கழக மானியக் குழுவிடம் விண் ணப்பித்தன. இவ்விண்ணப்பங்களை வடிகட்ட 12 பேர் கொண்ட கமிட்டி யொன்றை அமைத்தது, பல்கலைக்கழக மானியக் குழு. விண்ணப்பித்த 230 உயர்கல்வி நிறுவனங்களுள், வெறும் 10 நிறுவனங்களுக்குத்தான் நிகர்நி லைப் பல்கலைக்கழகத் தகுதியினைப் பெறும் கட்டமைப்பு வசதிகள் இருப்ப தாக இக்குழு முடிவு செய்தது. விதிகள் தளர்த்தப்பட்ட நிலையில் கூட, 220 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்த ‘உயர் கல்வி’ நிறுவனங்கள் எந்த இலட்சணத்தில் இயங்கி வந் திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.



**பேராசிரியர் யஷ்பால் சர்மா (இடது) உயர் கல்வியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கபில் சிபலிடம் அளிக்கிறார். இந்த அறிக்கை கல்வியில் நிலவும் தனியாரின் ஆதிக்கத்தை ஒழிக்கக் கோரவில்லை.**

இந்த 12 பேர் கொண்ட வடிகட்டும் கமிட்டி எடுத்த முடிவு, மனித வள மேம்பாட்டுத் துறைக்கு ஏமாற்றம் அளித்ததால், நிரா கரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீண்டும் ஆய்வு செய்வதற் காக, மற்றொரு கமிட்டியை அமைத்தது, மனிதவள மேம் பாட்டுத் துறை. இந்தக் கமிட்டியின் முடிவும் அதிகாரிகளுக்கு மகிழ்ச்சியை அளிக்காததால், அந்த இரு கமிட்டிகளும் முடக் கப்பட்டதோடு, நிகர்நிலைப் பல்கலைக்கழகம் தகுதியினைக் கோரும் உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்வதற்குப் புதியதொரு ஏற்பாட்டினை உருவாக்கியது, பல்கலைக்கழக மானியக் குழு.

‘‘பல்கலைக்கழக மானியக் குழு அமைக்கும் ஆய்வுக்குழு, நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதி கோரும் உயர்கல்வி நிறு வனத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தி, அறிக்கை யொன்றை பல்கலைக்கழக மானியக் குழுவிடம் சமர்ப்பிக்கும். இந்த அறிக்கை சாதகமாக இருப்பின் நிகர்நிலைப் பல்கலைக் கழகத் தகுதியினை வழங்கலாம் என மனிதவள மேம்பாட்டுத் துறைக்குப் பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைக்கும். இப் பரிந்துரையின்படி, மனிதவள மேம்பாட்டுத்துறை உத்தரவிடும்’’ என்ற இந்தப் புதிய ஏற்பாட்டின்கீழ், ஏற்கெனவே நிராகரிக்கப் பட்ட உயர்கல்வி நிறுவனங்களுள் பெரும்பாலானவை நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்கப்பட்டன. ‘‘சூட்கே ஸின் எடைக்குத் தகுந்தவாறு தகுதி தீர்மானிக்கப்பட்டதாக’’ கல்வி வியாபாரிகளே நக்கல் அடிக் கும் அளவிற்கு, இந்த ஆய்வு கேவல மாக நடந்தது.

உதாரணத்திற்குச் சொன்னால், உ.பி. மாநிலம் காஜியாபாத்தில் இயங்கி வந்த சந்தோஷ் சர்வதேச மருத்துவக் கழகத்தை மருத்துவக் கல்வி நிறுவனமாக அங்கீகரிக்க இந் திய மருத்துவ கவுன்சில் மறுத்துவிட் டது. எனினும், இக்கல்வி நிறுவனம் தனது பெயரை மாற்றிக் கொண்டு, தன்னை நிகர்நிலைப் பல்கலைக்கழக மாக அங்கீகரிக்கக் கோரி, பல்கலைக் கழக மானியக் குழுவிடம் விண்ணப் பித்தது. இக்கல்வி நிறுனத்திற்கு நேர டியாகச் சென்று ஆய்வு நடத்திய குழு, சில குறைபாடுகளைக் களைந்துவிட் டால், நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கலாம் எனப் பரிந்துரை செய்தது. ஆய்வு முடிந்த சில நாட்களி லேயே பல்கலைக்கழக மானியக் குழு குறிப்பிட்ட குறைபாடுகளைக் களைந்துவிட்டதாக அக்கல்வி நிறு வனம் பதில் அளித்தது.

இப்பதிலில் ஏதோ ‘மர்மம்’ இருப்பதாகச் சந்தேகப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு உறுப்பினர் பி.என். டான்டன், இக்கல்வி நிறுவனத் திற்குப் பல்கலைக்கழகத் தகுதி வழங் குவதை எதிர்த்தார். இதனால், அக்கல்வி நிறுவனத்திற்கு மற்றொரு ஆய்வுக் குழு அனுப்பப்பட்டது. அக்குழுவும் சாதகமான அறிக் கையைத் தரவே, அக்கல்வி நிறுவனத்திற்கு நிகர்நிலைப் பல் கலைக்கழகத் தகுதி வழங்கப்பட்டது.

இத்தகுதி வழங்கப்பட்ட சில நாட்களிலேயே அக்கல்வி நிறுவனத்தை இரகசியமாகப் படமெடுத்த ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம், அது ஒரு ‘‘டப்பா’’ பல்கலைக்கழ கம் என அம்பலப்படுத்தியது. பி.என். டான்டன் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தகுதியை நீக்க வேண்டும் எனக் கோரியதை, பல்கலைக்கழக மானியக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதால், இப்பொழுது அக்கல்வி நிறுவ னம் சந்தோஷ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் அமோகமாக கல்லா கட்டி வருகிறது.

●●●

தனியார் பல்கலைக்கழகங்கள் புற்றீசல்களாய்ப் பெருகி, உயர் கல்வித் துறையை ஆக்கிரமித்து வருவதில் இந்தியாவி லேயே தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது. நாடெங்கிலும் உள்ள 86 தனியார் பல்கலைக்கழகங்களுள் 29 பல்கலைக்கழ கங்கள் தமிழகத்தில்தான் உள்ளன; தமிழகத்தைச் சேர்ந்த 39 உயர்கல்வி நிறுவனங்கள், தங்களைப் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்கக் கோரி விண்ணப்பித்துள்ளன. தமிழகத்தைய டுத்து, மகாராஷ்டிராவில் 21 தனியார் பல்கலைக்கழகங்களும் கர்நாடகா மாநிலத்தில் 15 தனியார் பல்கலைக்கழகங்களும், இயங்கி வருகின்றன.


தற்பொழுது தமிழகத்தில் பல்கலைக்கழகம் என்ற தகுதி யோடு கடைவிரித்துவரும், தி.க.வீரமணியின் பெரியார் மணி



படிப்பகம்

www.padippakam.com

யம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி; சென்னைக்கு அருகில் பாடூரில் அமைந்துள்ள இந்துஸ்தான் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி; சென்னை-பல்லாவரத்தில் அமைந்துள்ள வேல்ஸ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி; சென்னை-ஆவடிக்கு அருகில் அமைந்துள்ள வேல்டெக் ரங்கராஜன் - டாக்டர் சகுந்தலா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட பல பொறியியல் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக அங்கீகரிக்கப்படத் தகுதியற்றவை எனப் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆய்வுக் குழுக்களால் நிராகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.



கல்வித் துறையில் தனியாரின் பங்களிப்பை அதிகரிக்கக் கோரிவரும் தேசிய அறிவுசார் கமிசனின் தலைவர் சாம் பித்ரோடா.

''தங்களைக் கேட்காமலேயே பல்கலைக்கழக மானியக் குழு தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக் கழகத் தகுதி வழங்கி விடுவதாகத் தமிழ்நாடு உள்ளிட்டு பல்வேறு மாநில அரசுகள் குறைபட்டுக் கொள்கின்றன. இந்தப் புலம்பல், கொள்ளையில் தங்களுக்குப் பங்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்கமே தவிர, வேறில்லை.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் இயங்கி வரும் சாரதா பல்கலைக்கழகத்திற்கு, அத்தகுதியினை வழங்கப் பல்கலைக்கழக மானியக் குழு மறுத்துவிட்டது. ஆனால் அக்கல்வி நிறுவனமோ உத்திரப்பிரதேச மாநில அரசிற்குக் கொடுக்க வேண்டியதை கொடுத்ததும், அம்மாநில அரசு தனியாக ஒரு சட்டம் போட்டு, அக்கல்வி நிறுவனத்தை அரசு-தனியார் பல்கலைக்கழகமாக அங்கீகரித்தது. மாநில அரசின் அங்கீகாரம் கிடைத்து விட்டதைக் காரணமாகக் காட்டி, பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டது, அக்கல்வி நிறுவனம்.

சட்டீஸ்கர் மாநில அரசு, ஒரேயொரு சட்டத்தின் மூலம், 97 தனியார் கல்வி நிறுவனங்களை அரசு-தனியார் பல்கலைக்கழகங்களாக அங்கீகரித்தது. இதற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அச்சட்டமும், அக்கல்வி நிறுவனங்களின் பல்கலைக்கழகத் தகுதியும் 2004-ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டன. எனினும், உச்சநீதி மன்றத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட லவ்லி தொழிற்கல்வி பல்கலைக்கழகம், பஞ்சாப் மாநில அரசின் மூலம் அரசு-தனியார் பல்கலைக்கழகம் என்ற தகுதியை மீண்டும் பெற்று, அம்மாநிலத்தில் லவ்லி பல்கலைக்கழகம் என்ற புதுப்பெயரில் இயங்கி வருவது தனிக் கதை.

சென்னையைச் சேர்ந்த இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி, தனக்குப் பல்கலைக் கழகத் தகுதி வழங்கக் கோரிக் கொடுத்த விண்ணப்பம், பல்கலைக்கழக மானியக் குழு நியமித்த ஆய்வுக் கமிட்டியால் நிராகரிக்கப்பட்டது. அக்கல்லூரி இதற்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது. இவ்வழக்கில் பல்கலைக் கழக மானியக் குழு, பல்கலைக்கழகத் தகுதி கோரி அளிக்கப்படும் விண்ணப்பங்களை வடிகட்ட ஆய்வுக் கமிட்டியை நியமித்தது சட்டபடி செல்லாது என அதிரடியாகத் தீர்ப்பளித்தது, சென்னை உயர்நீதி மன்றம். பிறகு, இந்தத் தீர்ப்பைக் காரணம் காட்டி, அக்கல்லூரியைப் பல்கலைக்கழகமாக அங்கீகரித்தது, பல்கலைக்கழக மானியக் குழு. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதிக்கு மீறிச் சலுகை காட்டுவதில், மைய அரசு, மாநில அரசு, நீதிமன்றம், பல்கலைக்கழக மானியக் குழு ஆகிய அரசு உறுப்புகள் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்பதைத் தான் இவை எடுத்துக்காட்டுகின்றன.

•••

**உ**யர்கல்வித் துறையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இந்த உள்ளடி வேலைகள், ஊழல்கள், சட்டவிரோதச் சலுகைகள் அனைத்தும் அம்பலமாகிவிட்ட நிலையில், தனியார் உயர் கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு மூலம், பல்கலைக்கழகத் தகுதி வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியக் குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் யஷ்பால் தலைமையில், உயர்கல்வித் துறையைப் புனரமைக்க கமிட்டியொன்றும் அமைக்கப்பட்டது.

தனியார் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த இக்கமிட்டி ''இத்தனியார் பல்கலைக்கழகங்களினால் உயர்கல்வித் துறைக்கு எந்தப் பயனும் கிட்டவில்லை; அவைகளுக்கு அந்த நோக்கமும் இல்லை; மாணவர்கள்தான் ஏமாற்றப்பட்டுள்ளனர்'' என வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்தியுள்ளது. நியாயமாகப் பார்த்தால், கல்லாப் பெட்டியை நிரப்புவதில் மட்டுமே வேகமாக இருக்கும் அனைத்துத் தனியார் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்தையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என இக்கமிட்டி பரிந்துரைத்திருக்க வேண்டும். ஆனால், இக்கமிட்டியோ, தனியார் பல்கலைக்கழகங்கள் தங்களின் தரத்தை உயர்த்திக் கொள்ள, அவற்றுக்கு மூன்று வருட கால அவகாசம் கொடுக்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது.

''தனியார் பல்கலைக்கழகங்களினால் உயர்கல்வித் துறைக்கு எந்தப் பயனும் கிட்டவில்லை; மாணவர்கள்தான் ஏமாற்றப்பட்டுள்ளனர்'' என வெளிப்படையாகவே யஷ்பால் கமிட்டி குற்றஞ்சுமத்தியுள்ளது.

இந்த யஷ்பால் கமிட்டியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கற்றறிந்த அறிஞர்கள் அல்லவா? அதனால் தான் தனியார் கல்வி வியாபாரிகளுக்கு ''கல்லாப் பெட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேசமயம், தரத்தையும் புறக்கணித்து விடாதீர்கள்'' என அறிவுரை செய்துள்ளனர். நாய்வாலை நிமிர்த்திவிட முடியும் என்று நம்மையும் நம்பச் சொல்கிறார்கள், இந்த அறிஞர் பெருமக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், மன்மோகன் சிங்கின் நெருங்கிய நண்பரும், தேசிய அறிவுசார் கழகத்தின் தலைவருமான சாம் பித்ரோடா விற்கு, யஷ்பால் கமிட்டியைப் போன்று மூட நம்பிக்கைகள் எல்லாம் கிடையாது. உயர் கல்வித் துறையில் நிலவும் அத்துணை குழப்பங்களுக்கும், தரமற்ற போக்குக்கும் அரசும், அதனின் சட்டதிட்டங்களும்தான் காரணம் எனச் சாடுகிறார், இவர். ''உயர்கல்வித் துறையைத் தனியாருக்கும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றித் திறந்துவிட வேண்டும்'' என சாம் பித்ரோடா தலைமையில் உள்ள தேசிய அறிவுசார் கழகம் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

''இந்திய மாணவர்களுள் வெறும் 8 சதவீதம் பேர்தான் உயர்கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இந்த எண்ணிக்கையை 11 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றால் கூட, 1,500 பல்கலைக்கழகங்கள் தேவை. தனியாரின் பங்களிப்பின்றி இந்த இலக்கை எட்ட முடியாது'' எனப் புள்ளி விவரங்களை எடுத்துப் போட்டு பயமுறுத்துகிறது, சாம் பித்ரோடா கும்பல்.

தற்பொழுது மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராகியுள்ள கபில் சிபல், சாம் பித்ரோடாவின் மனசாட்சியைப் போல் தான் பேசுகிறார். அது மட்டுமின்றி, ''10-ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வை மாணவர்கள் விரும்பினால் மட்டும் எழுதலாம்; கல்லூரியில் நுழைவதற்கு அகில இந்திய அளவில் ஒரு பொதுத் தேர்வு நடத்துவதை உருவாக்க வேண்டும்'' என அவர் கூறி வரும் ஆலோசனைகள், கல்வித்துறையில் மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்களைப் பிடுங்கிவிடும் நோக்கம் கொண்டதாகும்.

''உயர்கல்வியில் சீர்திருத்தங்கள் வேண்டும்'' என மன்மோகன் சிங் கும்பல் போடும் கூப்பாடு, அத்துறையைத் தனியாரின் கொள்ளைக்குத் தடையின்றித் திறந்துவிட வேண்டும் என்பது தவிர வேறில்லை. இவர்கள் திணிக்க விரும்பும் சீர்திருத்தத்தின்படி, தனியார் பல்கலைக்கழகங்கள் தரமுள்ளவையாக மாறிவிடலாம்; புகழ்பெற்ற ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் கடை திறக்கலாம். ஆனால், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இந்திய மாணவர்களுக்கு இத்தகைய ''தரமான'' உயர்கல்விக் கூடங்களை / பல்கலைக்கழகங்களை எட்டிப் பார்க்கக்கூட வாய்ப்புக் கிட்டுமா என்பதுதான் விவாதத்துக்கு உரியது!

● செல்வம்

# ''நகராட்சி அலுவலகத்தைப் 'பீ'க் காடாக்குவோம்!''

### – அடிப்படை வசதிகள் செய்துதர மறுக்கும் வெள்ளக்கோவில் நகராட்சிக்கு எதிராக பு.ஜ.தொ.மு.வின் ஆர்ப்பாட்டம்!

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட 2-வது வார்டில் அமைந்துள்ள கல்லங்காட்டு வலசு என்ற பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் சுமார் 120-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் பெரும்பான்மையான மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதும், இவர்களுக்கு மலம் கழிப்பதற்குப் பொதுக் கழிப்பிடம் கூட இல்லாததும் அவலத்தின் உச்சக்கட்டம்; பெண்களுக்கோ பெரும் திண்டாட்டம்.

கடந்த 10 ஆண்டுகளாகவே பொதுக் கழிப்பிட வசதி கோரி இப்பகுதி மக்கள் பலமுறை நகராட்சி நிர்வாகம், ஆணையர் முதல் அனைத்து ஓட்டுக் கட்சி தலைவர்களுக்கும் மனு கொடுத்தும் மன்றாடியும் இன்றுவரை எந்த பயனுமில்லை. இப்பகுதி மக்களின் வரிப்பணத்தில் வயிறு வளர்க்கும் நகராட்சி நிர்வாகமோ, ஆதிக்கசாதி வெறியுடன் வாயில் 'மலத்தை' கக்குகிறது!

இந்தப் பிரச்சினை, திருப்பூர் பகுதியில் செயல்படும் பு.ஜ.தொ.மு. கவனத்திற்கு வந்ததும் மக்களை அதிரட்டி, தனியார்மய - தாராளமய - உலகமய கொள்கையின் நேரடி விளைவு இது; சேவைத்துறைகளை இலாபம் ஈட்டும் தொழிலாக தனியாரிடம் ஒப்படைக்கும் சதியின் ஓர் அங்கம்தான் இது — என்பதை தெளிவுபடுத்தி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலை இம்மக்கள் புறக்கணித்தனர். அதனைத் தொடர்ந்து, ''ஆட்சியாளர்களின் பொய் வாக்குறுதிகளை நம்புவதில் பயனில்லை, சாதாரண அடிப்படைத் தேவையான கழிப்பிட வசதி கூட பெற முடியாதபோது 'கண்ணியமான போராட்டங்கள்' நடத்திக் கொண்டிருக்க முடியாது. நமது வேதனைகள் நகராட்சி நிர்வாகத்திற்குப் புரியும்படி வெள்ளக்கோயில் நகராட்சி அலுவலகத்தை 'பீ' காடாக்குவோம்! இதுவொன்றே எருமைத் தோல் அதிகார வர்க்கத்தைப் பணிய வைக்கும்!'' என்ற அறைகூவலோடு, கடந்த 14.7.09 அன்று வெள்ளக்கோயில், புதிய பேருந்து நிலையம் எதிரில் மக்களை அணிதிரட்டி கண்டன ஆர்ப்பாட்டத்தை இவ்வமைப்பினர் நடத்தியுள்ளனர்.




கடந்த 10 வருடங்களாக மனுகொடுத்தும், போராடியும் எந்த நடவடிக்கையும் இல்லாத நிலையில், புரட்சிகர அமைப்புகளின் வழிகாட்டலில் தேர்தல் புறக்கணிப்பும் அதனைத் தொடர்ந்து நடந்த இந்த ஆர்ப்பாட்டமும் இப்பகுதி மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. வெள்ளக்கோயில் நகராட்சி நிர்வாகமோ, பொதுமக்களின் போராட்ட நாள் என்று வருமோ என்ற 'பீ'தியில் உறைந்து போயுள்ளது!

— பு.ஜ.செய்தியாளர், வெள்ளக்கோயில்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

# “சிவனடியார் ஆறுமுகசாமியைத் தாக்கிய ரவுடி ஞானமூர்த்தி தீட்சிதக் கும்பலைக் கைது செய்!”

## – மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) ஆர்ப்பாட்டம்



“தில்லை நடராசர் கோயில் பார்ப்பன தீட்சிதர்களுக்குச் சொந்தமானதல்ல; இக்கோயில் நிர்வாகத்தை இந்து அறநிலையத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்” என்று கடந்த பிப்ரவரி 2009-இல் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தில்லை நடராசர் கோயிலின் திருச்சிற்றம்பல மேடையில் அனைவரும் சுதந்திரமாக, கட்டணமின்றி தேவாரம்-திருவாசகம் பாடி வழிபடலாம் என்று அரசாங்கமும் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து உடனடியாக இக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டு, உண்டியல்களும் வைக்கப்பட்டுள்ளன.

தனது தள்ளாத வயதிலும் தீட்சித பார்ப்பன கும்பலின் பகற்கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் எதிராகவும், திருச்சிற்றம்பல மேடையில் தமிழில் பாடும் உரிமைக்காகவும் தொடர்ந்து போராடிவரும் சிவனடியார் ஆறுமுகசாமி, மாலை வேளையில் இக்கோவிலுக்கு சென்று வழிபடுவதும், “சாமி கும்பிட பார்ப்பானுக்குக் காசு கொடுக்காதீர்கள்; அரசாங்க உண்டியலில் காசைப் போட்டு இலவசமாக வழிபடுங்கள்” என்று பக்தர்களிடம் கூறுவதும் வழக்கம். இதைக் கண்டு கொதிப்படைந்த தீட்சித பார்ப்பன பூசகர்கள், “நீ கோயிலுக்குள்ளே வராதே!” என்று அவரை மிரட்டியதோடு, வாழைப்பழத்தை அவர் மீது வீசியடிப்பது, இடிப்பது என்று தொல்லை கொடுத்து வந்தனர்.

கடந்த 14.07.09 அன்று தீட்சித பார்ப்பன பூசகர்கள் பக்தர்களிடம் சட்டவிரோதமாக காசு வசூலித்துக் கொண்டிருந்தனர். சில பக்தர்கள், “எதற்காக காசு வசூலிக்கிறீர்கள்? வழிபாடு இலவசம் என்று அரசாங்கம் உத்தரவு போட்டுள்ளதே” என்று பூசகர்களிடம் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்த போது, அங்கு வந்த சிவனடியார் ஆறுமுகசாமியும் தீட்சிதர்களிடம் வாதிட்டுள்ளார். அன்று பூசகர் பணியிலிருந்த ஞானமூர்த்தி தீட்சிதர் மற்றும் ஐந்து தீட்சிதர்கள் கொண்ட கும்பல், இதைக் கண்டு ஆத்திரமடைந்து சிவனடியார் ஆறுமுகசாமியை முகத்தில் குத்தி, அவர் அணிந்திருந்த ருத்ராட்ச மாலையை அறுத்து, காலால் உதைத்து முதியவர் என்றும் பாராமல் கொலைவெறியோடு அடித்து கீழே தள்ளியுள்ளது.

காயமடைந்து விழுந்து கிடந்த சிவனடியார் ஆறுமுகசாமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, போலீசு விசாரித்தபோது தன்னைத் தாக்கிய தீட்சிதர்களின் பெயர்களையும் தெரிவித்துள்ளார். இருப்பினும், பார்ப்பன தீட்சிதக் கும்பலுக்கு விசுவாசமாக வாலாட்டி வரும் சிதம்பரம் நகரப் போலீசு, அடையாளம் தெரியாத நபர்களால் அவர் தாக்கப்பட்டதாக புகார் பதிவு செய்துள்ளது. சிவனடியார் ஆறுமுகசாமி தீட்சிதப் பார்ப்பனர்களால் தாக்கப்படுவது முதன் முறையல்ல; இது ஐந்தாவது முறை. போலீசு, தீட்சிதப் பார்ப்பன கும்பல் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து தட்டிக் கழிப்பதாலேயே, தினவெடுத்த தீட்சித பார்ப்பனர்களால் அவர் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகிறார்.

இது ஏதோ சிவனடியார் ஆறுமுகசாமி, பார்ப்பன தீட்சிதர்களால் தாக்கப்பட்டுள்ளார் என்னும் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. சிவனடியாரைத் தாக்குவதன் மூலம் தமது பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிபணியாத பக்தர்களுக்கும் தமிழர்களுக்கும் பார்ப்பன தீட்சித கும்பல் விடுத்துள்ள எச்சரிக்கை! இருப்பினும், அரசாங்க உத்தரவைச் செயல்படுத்தாமல் கொட்டமடிக்கும் தீட்சிதக் கும்பலை, கோயிலின் அமைதிக்குப் பங்கம் விளைவித்து அட்டூழியம் செய்து வரும் தீட்சித ரவுடிகளை இன்னமும் கைது செய்யாமல் வேடிக்கை பார்க்கிறது போலீசு.

இந்த அநீதியை எதிர்த்தும், அரசாங்க உத்தரவுக்கு அடிபணிய மறுக்கும் பார்ப்பன தீட்சிதக் கும்பலின் ஆதிக்க வெறிக்கு முடிவு கட்ட அறைகூவியும் பல்வேறு அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள், புரட்சிகர அமைப்புகளை ஒருங்கிணைத்து மனித உரிமைப் பாதுகாப்பு மையம் 17.07.09 அன்று சிதம்பரம் மேலவீதியில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராக விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் ராஜு, முன்னாள் இந்து அறநிலையத்துறை அமைச்சரான திரு.வி.வி. சுவாமிநாதன், பா.ம.க. மாநிலத் துணைச்செயலரான திரு. வி.எம்.எஸ்.சந்திரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் காவியச்செல்வன் மற்றும் வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.,-வின் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். சிவனடியார் ஆறுமுகசாமி உள்ளிட்டு, வழக்குரைஞர்களும் புரட்சிகர அமைப்பினரும் திரளாகப் பங்கேற்று நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகப் போராட தமிழக மக்களை அறைகூவியழைத்தது.

-பு.ஜ.செய்தியாளர்.



படிப்பகம்

www.padippakam.com

# கல்விக் கட்டணக் கொள்ளைக்கு முடிவு கட்டுவோம்! கல்வி தனியார் மயத்தை ஒழித்துக் கட்டுவோம்!

## - புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் (RSYF) பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்



சென்னையில்...

**எ**ண்பதுகளில் தொடங்கி, இரண்டு தலைமுறைகளை கடந்துவிட்ட தனியாரின் கல்விக் கொள்ளை இன்று அச்சுறுத்தும் நச்சுமரமாக வேர்விட்டுள்ளது. தரமான கல்வி வேண்டுமானால் கொஞ்சம் காசு செலவு பண்ணித்தான் ஆக வேண்டும் என பேசிவந்த நடுத்தர வர்க்கம்கூட இன்று விழிபிதுங்கி நிற்கிறது.

இத்தனியார் கல்வி வியாபாரிகளின் பகற்கொள்ளையைத் தடுக்க முனையாத அரசு 'அதிரடி ஆய்வுகள் தொடரும்', 'சட்டப் பேரவையில் மசோதா தாக்கல்' என்ற வெற்று அறிவிப்புகளையும் கண்துடைப்பு நாடகங்களையும் நடத்தி பெற்றோர்களின் குமுறல்களை தணிக்க முயல்கிறது.

இந்நிலையில், கல்வி தனியார் மயமாக்கப் படுவதற்கெதிராகத் தொடர்ந்து போராடி வரும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, கல்வி தனியார் மயமாவதைத் தடுத்து நிறுத்தக் கோரியும் கல்வியை அரசுடமையாக்கக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் தொடர் பிரச்சார இயக்கத்தையும் தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறது.

**திருவாரூரில்** 10.07.09 அன்று நகராட்சி அலுவலகம் அருகிலும், **திருச்சியில்** 11.07.09 அன்று பாலக்கரை பிரபாத் திரையரங்கம் எதிரிலும், **கடலூரில்** 20.07.09 அன்று மஞ்சக்குப்பம் மணிக்கூண்டு அருகிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களை இவ்வமைப்பினர் நடத்தியுள்ளனர்.

திரளான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில், தனியாரின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக, இதனை கை கட்டி வேடிக்கை பார்க்கும் அரசுக்கெதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

ஜேப்பியார், உடையார் உள்ளிட்ட சாராய வியாபாரிகள் இன்று கல்வி தந்தைகளாக உருவெடுத்து நிற்பதை எள்ளி நகையாடி, இதற்கெதிராகப் போராட வேண்டுமென்ற புரட்சிகர உணர்வூட்டும் வகையில் புரட்சிகர பாடல்களுடன் வீதி நாடகங்களையும் இடையிடையே நிகழ்த்திக் காட்டினர்.

**சென்னையில்**, கடந்த ஜூன்-18ந் தேதியன்று மெமோரியல் அரங்கம் எதிரே கல்விக் கொள்ளைக்கு எதிராக இவ்வமைப்பினர் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். இதன் தொடர்ச்சியாக, ''அரசு நிர்ணயித்த கட்டணத்தை விடக் கூடுதலாக பணம் பிடுங்கும் கல்லூரிகளின் பல்கலை கழக இணைப்பை இரத்து செய்! ஆய்வகம் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இல்லாத கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை ரத்து செய்!'' என கோரிக்கைகளை முன்வைத்து, மாணவர்களைத் திரட்டி கொண்டு கடந்த ஜூலை 13-ஆம் தேதியன்று சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகம் முன்பு திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காட்ஸ் ஒப்பந்த விதிகளையேற்று கல்வியைத் தனியார்மயமாக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகவே இருக்கையில், இந்த அரசிடம் தனியாரைக் கட்டுப்படுத்து என்று கோரிக்கை வைப்பதில் நியாயமில்லை; வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழியுமில்லை - என்று அறைகூவல் விடுக்கும் வகையில் இவ்வார்ப்பாட்டங்கள் அமைந்தன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



கடலூரில்...



திருச்சியில்...



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# விவசாயம் அழிகிறது விலைவாசி உயர்கிறது

சாதாரண ஏழை எளிய மக்களுக்கு புரதச்சத்து தரும் உணவாக இருந்து வருவது பருப்பு வகைகள்தாம். அதற்கும் ஆப்பறைந்துவிட்டது பருப்பு விலையேற்றம். பருப்பு மட்டுமின்றி, சர்க்கரை, மிளகாய், பூண்டு, தக்காளி, உருளைக்கிழங்கு என மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்களும் காய்கறிகளும் வெளிச்சந்தையில் யானை விலை குதிரை விலைக்கு விற்கப்படுகின்றன. கடந்த ஓராண்டில் விலை ஏறாத உணவுப்பொருள் ஏதாவது ஒன்று இருக்குமா என்று பார்த்தால், உதட்டைத்தான் பிதுக்க வேண்டியிருக்கிறது.



பருப்புவிலை வெளிச்சந்தையில் தாறுமாறாக உயர்ந்து போனதையடுத்து, திருச்சி-மேலச்சிந்தாமணியில் உள்ள ஒரு ரேசன் கடையில் பருப்பு வாங்க நீண்ட வரிசையில் காத்து நிற்கும் பொதுமக்கள்.

பருப்பு விலை உயர்வுக்கு, தென்மேற்குப் பருவ மழை தவறிப் போனதையும், வடமாநிலங்களில் பருப்பு விளைச்சல் போதிய அளவு இல்லாமல் போனதையும் காரணமாகக் கூறுகிறது, அரசு. இந்தக் காரணங்களில் எந்தளவிற்கு உண்மை உள்ளதோ, அந்தளவிற்கு அரசின் பித்தலாட்டமும் மறைந்திருக்கிறது. நமது நாட்டின் பருப்புத் தேவையை ஈடுகட்டுவதற்கு அரசு இறக்குமதியைத்தான் நம்பியிருக்கிறது. பருப்பு சாகுபடியாகும் விளைநிலங்களின் பரப்பையும், விளைச்சலையும் அதிகப்படுத்தி, பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு அரசு இத்தனை ஆண்டுகளாக போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அரசின் இந்த அலட்சியப் போக்கும் சந்தையில் நடக்கும் பதுக்கலும் சூதாட்டமும் சேர்ந்து கொண்டுதான் பருப்பின் விலையை ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே தாறுமாறாக உயர்த்திவிட்டன.

''மிளகாய் நல்ல விளைச்சல் இருந்தும் பெரிய வியாபாரிகள் குளிர்சாதனக் கிடங்குகளில் அதிக அளவு பதுக்கி வைத்து விலையை ஏற்றி வருவதாக''க் கூறுகிறார், தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி.சொருபன். தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் மிளகாயைப் பதுக்கும் பெரிய வியாபாரிகள், பற்றாக்குறை என்று தெரிந்த பிறகும் பருப்பை விட்டு வைப்பார்களா? சொருபன் போன்ற சாதாரண மளிகை வியாபாரிக்குத் தெரிந்திருக்கும் இந்த உண்மையை அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதன் மர்மம் என்ன?

உணவுப் பொருள் வர்த்தகத்தில் அரசின் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டு, அதனை முற்றிலுமாகத் தரகு முதலாளிகளிடமும் பன்னாட்டு உணவுக் கழகங்களிடமும் விட்டுவிட வேண்டும் என்பதுதான் இப்பொழுது அரசின் கொள்கை. இதற்கு ஏற்றாற் போல, அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தில் பல்வேறு திருத்தங்களைச் செய்து, உணவுப் பொருட்களைக் கொள் முதல் செய்து,'சேமித்து' வைத்துக் கொள்ளும் உரிமை மற்றும் உணவுப் பொருட்கள் மீது சூதாட்டம் (ஆன்லைன் வர்த்தகம்) நடத்தும் உரிமையையும் பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறது, மைய அரசு. எனவே, இப்பொழுது அரசின் பார்வையில் பதுக்கல் என்பதே கிடையாது. விலையை, சந்தை தான் தீர்மானிக்கிறது என்று இந்த அயோக்கியத்தனத்தை நியாயப்படுத்தி வருகிறது அரசு.

உருளைக்கிழங்கை, வெளிச்சந்தையைவிடக் குறைவான விலைக்குப் பொதுமக்களுக்கு வழங்க, மேற்குவங்க அரசு பர்தமான் மாவட்டத்தில் திறந்துள்ள தற்காலிக அங்காடி.



இன்னொருபுறமோ, தாராளமயத்தின் பின் விவசாயத்தை, குறிப்பாக உணவுப்பொருள் விவசாயத்தை அரசு திட்டமிட்டுப் புறக்கணித்து வருவதால், உணவுப்பொருள் சாகுபடியாகும் விளைநிலங்கள் மெல்லமெல்லச் சுருங்கி வருகின்றன. இதன் மூலம், உணவுப்பொருள் தட்டுப்பாடு நாட்டின் மீது வலிந்து திணிக்கப்படுகிறது. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை அடிக்கடி தாறுமாறாக உயர்வது இந்த நடவடிக்கைகளின் நேரடியான விளைவாகும்.

''இந்தியாவில் ஏறத்தாழ 36 கோடி பேர் அரைகுறைப் பட்டினியாகக் கிடப்பதாகவும், இவர்களையும் உள்ளிட்டு ஏறத்தாழ 50 கோடி பேருக்கு உணவுப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும்'' உச்சநீதி மன்றம் நியமித்துள்ள உணவுப் பாதுகாப்பு கமிட்டியின் ஆணையர் என்.சி.சக்சேனா குறிப்பிடுகிறார். அவர்களின் வாழ்வில் இந்த விலையேற்றம் எத்தகைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நினைத்துப் பார்ப்பதே அச்சமூட்டுவதாக உள்ளது.

இந்த அவல நிலைக்குக் காரணமான தாராளமயத்தைக் கைகழுவாமல், வர்த்தகச் சூதாடிகளைக் கைது செய்யாமல் வேடிக்கை பார்க்கும் மைய அரசு, மறுபுறம், ''அனைவருக்கும் உணவு'' என்ற உரிமையைச் சட்டம் போட்டுக் கொண்டுவரப் போவதாகப் பீற்றிக் கொள்கிறது. இந்தக் காகிதச் சட்டம், பசியால் ஒட்டிப் போயுள்ள 36 கோடி வயிறை நிரப்பி விடுமா?

●

படிப்பகம்